வெளியீடு 5-5-2006

Issued 5-5-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜனவரி 19, 2006—தொகுதி 88—எண் 1

**Thursday the 19th January, 2006 — Volume 88—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

921
21.9.06

**19–1–2006**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii – vii |
| Governor and Council of Ministers | ix – xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii–xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii – xxvii |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1–34 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 34, 35 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 34, 35 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு | 41 |
| (இ) மனுக்கள் குழு | 47 |
| (ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 47 |
| **4. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்—** | 35–47 |

பக்கங்கள்

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி 48–133

திரு. லா. சந்தானம் 48–51, 57–68, 77

திரு. கே.என். இலட்சுமணன் 68–75

திரு. ஜி. பழனிசாமி 75–95

* திரு. அ. அன்வர் ராஜா 95–109

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 110–132

**6. அரசினர் தீர்மானம்**—

விதி 32–ஐத் தளர்த்தல் 133–134

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 134–136



## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை, பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

**5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் :**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**9. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

[illegible] ஆவணக் காப்பகம்
227003
சென்னை-600 008
நூலகம்



**10. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**12. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**13. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன் :**

கால்நடை பராமரிப்பு.

**16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

*வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டோர் மற்றும் வணிக வரிகள்.*

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

*மீன்வளம்.*

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

*தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.*

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

*செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

*விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.*

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |

———



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள்#

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. அ. அன்வர் ராஜா*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 17-1-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் நிலை குழு அலுவலர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (பொறுப்பு) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., பி.ஜி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப் ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி இரா. ரேவதி, எம்.ஏ. | .. | செயலாளரின் தனிச் செயலாளர் (சார்புச் செயலாளர் நிலை) |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. | தலைமை நிருபர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |

| | | |
|---|---|---|
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |
| 21. | ஆறுமுகம், திரு. த. | .. திருவொற்றியூர் |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 23. | ஆஸ்டின், திரு. | .. நாகர்கோவில் |
| 24. | இரவிராஜ், திரு. கோ. | .. திருத்தணி |
| 25. | இராசேந்திரன், திரு. சி. | .. திருவோணம் |
| 26. | இராசேந்திரன், திரு. சோ. | .. கோவில்பட்டி |
| 27. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடானை |
| 28. | இராமச்சந்திரன், திரு. எஸ். | .. கலசப்பாக்கம் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 30. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. சாத்தூர் |
| 31. | இராமு, திரு. ந. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 32. | இராம் பிரபு, திரு. இரா. | .. பரமக்குடி (செ.வ.) |
| 33. | இராஜசேகர், திரு. மா. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 34. | இராஜரெத்தினம், திரு. ப. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 35. | இராஜா, திரு. டி.கே. | .. திருப்பத்தூர் |
| 36. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | .. பத்மநாபபுரம் |
| 37. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | .. ஆலங்குளம் |
| 38. | இலட்சுமணன், திரு. கே.என். | .. மயிலாப்பூர் |
| 39. | இளவழகன், திரு. ப. | .. அரியலூர் |
| 40. | இளையகண்ணு, திரு. கா.தி. | .. ஏற்காடு (ஆ.வா.) |



| | | |
|---|---|---|
| 41. | இன்பத்தமிழன், திரு. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 42. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 43. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | .. திருவல்லிக்கேணி |
| 44. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 45. | உமாதேவன், திரு. கே.கே. | .. திருப்பத்தூர் |
| 46. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | .. செய்யாறு |
| 47. | ஏழுமலை, திரு. வெ. | .. செஞ்சி |
| 48. | கணபதி, திரு. ந. | .. வானூர் (செ.வ.) |
| 49. | கணேசன், திரு. ஆர்.டி. | .. தேனி |
| 50. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 51. | கணேசன், திரு. வி. | .. மங்களூர் (செ.வ.) |
| 52. | கண்ணன், திரு. ஏ.எஸ். | .. பொன்னேரி (செ.வ.) |
| 53. | கந்தசாமி, திரு. க.ரா. | .. சத்தியமங்கலம் |
| 54. | கந்தசாமி, திரு. கா. | .. குன்னூர் (செ.வ.) |
| 55. | கருணாகரன், திரு. கே.சி. | .. சிங்காநல்லூர் |
| 56. | கருணாநிதி, திரு. மு. | .. சேப்பாக்கம் |
| 57. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 58. | கருப்பணன், திரு. கே.சி. | .. பவானி |
| 59. | கலாவதி, திருமதி கு. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 60. | கனகதாரா, செல்வி சி. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 61. | கனிதா சம்பத், திருமதி எஸ். | .. திருப்போரூர் (செ.வ.) |
| 62. | காசாம்பு பூமாலை, திருமதி | .. சங்கராபுரம் |
| 63. | காமராஜ், திரு. மே.ப. | .. தாரமங்கலம் |
| 64. | கார்த்தி, திரு. மு. | .. சேலம்-2 |

65. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
67. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
68. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
69. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
70. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
71. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
72. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
73. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
74. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
75. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
76. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
77. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
78. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
79. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
80. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
81. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
82. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
83. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
84. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
85. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
86. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
87. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
88. சாமி, திரு. ஆர். .. மேலூர்



89. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
90. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
91. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
92. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
93. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
94. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
95. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
96. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
97. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
98. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
99. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
100. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
101. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
102. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
103. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
104. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
105. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
106. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
107. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
108. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
109. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
110. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்

112. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
115. தமிழரசன், முனைவர் செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
116. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
117. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
118. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
119. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
120. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
121. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
122. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
123. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
124. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
125. துரைமுருகன், திரு. .. காட்பாடி
126. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
127. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
128. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி
129. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
130. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
131. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
132. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
133. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
134. நளினி மனோகரன், திருமதி .. போளூர்



135. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
136. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
137. நீலமேகவர்ணம், திரு. செ. .. சாத்தான்குளம்
138. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
139. பச்சைமால், திரு. கே.டி. .. குளச்சல்
140. பதினெட்டாம்படியான், தி ந. க. .. முதுகுளத்தூர்
141. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
142. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
143. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
144. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
145. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
146. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
150. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
151. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
152. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
153. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
155. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
156. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்

| | | |
|---|---|---|
| 157. | பாலன், திரு. எஸ்.எம். | .. லால்குடி |
| 158. | பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | .. சேரன்மகாதேவி |
| 159. | பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |
| 160. | புகழேந்தி, திரு. இ. | .. கடலூர் |
| 161. | பூபதி மாரியப்பன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 162. | பூவராகமூர்த்தி, திரு. ஏ. | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 163. | பெருமாள், திரு. என்.கே. | .. விளாத்திகுளம் |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | .. பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 166. | பொன்னம்பலம், திரு. டி.பி. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 167. | பொன்னையன், திரு. சி. | .. திருச்செங்கோடு |
| 168. | போளூர் வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 169. | மகாலிங்கம், திரு. எஸ். | .. அவினாசி (செ.வ.) |
| 170. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 171. | மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 172. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 173. | மணி, திரு. டி. | .. விளவங்கோடு |
| 174. | மணி, திரு. ஜி.கே. | .. பெண்ணாகரம் |
| 175. | மலையப்பசாமி, திரு. அ. இரா. | .. கபிலர்மலை |
| 176. | மல்லிகா சின்னசாமி, திருமதி | .. முசிறி |
| 177. | மாணிக்கராஜ், திரு. எஸ். | .. நாங்குநேரி |
| 178. | மில்லர், திரு. அ. | .. கூடலூர் |
| 179. | முரளிதரன், திரு. கே.வி. | .. தளி |



| | | |
|---|---|---|
| 180. | முருகேசன், திரு. ஆ.கு. | .. ஆத்தூர் |
| 181. | முனுசாமி, திரு. கா.பூ. | .. காவேரிப்பட்டினம் |
| 182. | மைதிலி, திருமதி தி. | .. காஞ்சிபுரம் |
| 183. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 184. | மோகன், திரு. ப. | .. சின்னசேலம் |
| 185. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 186. | ரங்கநாதன், திரு. ப. | .. புரசைவாக்கம் |
| 187. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 188. | ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. கோபிசெட்டிப்பாளையம் |
| 189. | ராதாகிருஷ்ணன், திரு. எம். | .. திருமயம் |
| 190. | ராதாரவி, திரு. | .. சைதாப்பேட்டை |
| 191. | ராமசாமி, திரு பி.சி. | .. மொடக்குறிச்சி |
| 192. | ராமராஜ், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 193. | ராம்குமார், திரு. எம். | .. பாபநாசம் |
| 194. | ராஜகோபால், திரு. ஆ. | .. சிவகாசி |
| 195. | ராஜம்மாள், திருமதி எஸ். | .. தூத்துக்குடி |
| 196. | ராஜா, திரு. எச். | .. காரைக்குடி |
| 197. | ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. சோழவந்தான் |
| 198. | ராஜு, திரு. எச்.எம். | .. உதகமண்டலம் |
| 199. | ரெங்கநாதன், திரு. என். | .. பூம்புகார் |
| 200. | ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. பேரூர் |
| 201. | ரோகிணி, டாக்டர் திருமதி ஆ. | .. குளத்தூர் (செ.வ.) |
| 202. | லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |

203. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
204. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி
205. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
206. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
208. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
210. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
213. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
214. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
215. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
216. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
217. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-I
218. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
219. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
220. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
221. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
222. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
225. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி



226. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
229. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
230. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
232. (வெற்றிடம்) .. அந்தியூர் (செ.வ.)
233. (வெற்றிடம்) .. வந்தவாசி (செ.வ.)
234. (வெற்றிடம்) .. தாராபுரம் (செ.வ.)
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 6, பார்த்திப – திருவள்ளுவர் ஆண்டு, 2037

## 2006 ஜனவரி 19, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

நீதியையும், நன்மையையும் விரும்புபவர்களாக, பிறர்க்கும் தமக்கும் பயனைக் கருதுபவர்களுடைய உயர்ந்த பண்புகளை, உலகத்தார் போற்றிக் கொண்டாடுவார்கள்.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 41, டாக்டர் திருமதி ஆ. ரோகிணி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**41—**

### கொள்முதல் நிலையம்

***4899—டாக்டர் திருமதி ஆ. ரோகிணி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் உள்ள விவசாயிகள், நெல், கடலை, பருத்தி அதிகமாக உற்பத்தி செய்து வருவதால், அங்கு அரசு கொள்முதல் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

[2006 ஜனவரி 19

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலை, பருத்தி போன்ற விவசாயப் பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படுவதில்லை என்கின்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டாக்டர் திருமதி ஆ. ரோகிணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரெல்லாம் பசியின்றி வாழ்ந்திட, ஏர் பிடிக்கும் இரும்புக் கரங்களின் அயரா உழைப்பை அகிலத்தில் மதித்திட, அம்மாவைத் தவிர அவனியில் யாருமில்லை. ஓயாது உழைத்துவரும் உழவரின் ஒப்பில்லா உயர்வுக்குப் பாதுகாப்புத் திட்டத்தைப் பாங்குடன் அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என் வினாவைத் தொடங்குகிறேன். கனிம வளங்கள் நிறைந்த குளத்தூர் தொகுதியில் வேளாண் பெருமக்கள் நெல், கடலை, பருத்தி ஆகிய பயிர்களை அதிகமாக விளைவித்து அமோக விளைச்சலைக் கண்டு வருகின்றனர். இவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெல், கடலை, பருத்திக்குக் கொள்முதல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லையென்று கூறினார்கள். இருப்பினும், இந்தியத் திருநாட்டில் யாருமே நினைத்துப் பார்க்காத அளவிலே கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 1,014 வழங்கி, கரும்பு விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியிலே--குளத்தூர் தொகுதியில் நெல் அறுவடை செய்யும் நேரம் இது--நெல்லுக்கு மட்டுமாவது கொள்முதல் நிலையம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய தேவைக்கேற்ப நடப்பாண்டில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற பகுதியில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. தேவைக்கேற்ப இன்னும் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்கின்ற நல்ல மகிழ் [illegible] சொல்லி அமர்கிறேன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227003
சென்னை-600 008
நூலகம்



2006 ஜனவரி 19]

**டாக்டர் திருமதி ஆ. ரோகிணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையம் கூடுதலாகத் திறக்கப்படும் என்ற நல்ல செய்தியை அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், எனது தொகுதியான பண்ருட்டியில் அதிகமாக விளையக்கூடிய முந்திரி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பண்ருட்டியில் பலாப்பழம்தான் விளையும். அதைப் பற்றிக் கேளுங்கள். திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே, 525 ரூபாய் விற்ற நெல், கடந்த ஒரு மாதத்திற்குள்ளாக திடீரென 150 ரூபாய்க்குக் குறைவாக விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, விவசாயிகள் எல்லாம் மார்க்கெட் கமிட்டியிலே மறியல் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நெல் அதிக அளவிலே தேங்கிக் கிடப்பதால், விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டு அங்கெல்லாம் கொள்முதல் நிலையங்கள் அமைத்து நெல்லைக் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறையோடு செயல்படுகிற அரசு. தமிழகத்தில் எங்கெங்கெல்லாம் நெல் கொள்முதல் நிலையங்கள் தேவையோ, ஆங்காங்கு திறக்கப்பட்டு, மிகச் சிறப்பான முறையில் நெல் கொள்முதலானது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. திருவண்ணாமலை மாவட்டத்திலும் நெல் கொள்முதல் நிலையங்கள் வட்ட அளவிலே திறக்கப்பட்டுச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 10–05*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, பல்வேறு இடங்களிலே இந்த நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் மதுரை மாவட்டப் பகுதிகளிலும் பல இடங்களிலே நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இன்றைக்குக் கடுமையான பனிப் பொழிவு இருக்கின்ற காரணத்தினால், அரசு நிர்ணயித்திருக்கின்ற அந்த 17 சதவிகிதத்திற்குள்ளாக ஈரத் தன்மை இருக்கவேண்டும் என்கின்ற நிலையை ஏற்படுத்துவதிலே விவசாயிகள் மிகுந்த கஷ்டத்தை அடைகிறார்கள். அவர்களுக்குப் போதுமான உலர்கள வசதிகள் இல்லை என்கின்ற நிலையும் இருக்கிறது. நமது டெல்டா பகுதிகளிலே, தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில், நெல் கொள்முதல் நிலையங்களிலே 20 சதவிகித ஈரப்பதம் இருந்தாலும்கூட, அந்த நெல்லைக் கொள்முதல் செய்து கொள்ளலாம் என்கின்ற ஒரு விதி இருக்கிறது. அதுபோல, எங்களது மதுரை மாவட்டப் பகுதிகளிலும் மற்றும் அனைத்து மாவட்டங்களிலுமேகூட இந்த ஆண்டு நல்ல மழை பெய்து, 4 ஆண்டுகளுக்குப் பின்னால் இந்த முறை, அந்த நெல்லை, விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்கின்ற நிலையிருக்கிறது. எனவே, அவர்களுக்கும் அந்தச் சலுகையை அரசு வழங்க முன்வருமா என்பதோடு, மத்திய அரசினுடைய விலை மட்டும் இன்றைக்குக் கொள்முதல் நிலையங்களிலே வழங்கப்படுகிறது; நம்முடைய தமிழக அரசினுடைய பங்கும் இருக்கவேண்டும் என்பது விவசாயிகளினுடைய ஆவலாக இருக்கிறது. உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், இதிலும் ஏதாவது அந்த விவசாயிகளுக்கு உதவி செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய அனைத்து மாவட்டங்களிலும் இன்றைக்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கும் என்று எதிர்நோக்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மத்திய அரசு 17 சதவிகித ஈரப்பதத்திற்குத்தான் நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருந்தாலும், தமிழகம் முழுவதும் அவ்வாறு மத்திய அரசினுடைய அனுமதியை எதிர்நோக்கி, 20 சதவிகித ஈரப்பத நெல் கொள்முதலானது தொடங்கி, கடந்த 4 நாட்களாக கொள்முதல் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்கின்ற நல்ல செய்தியைச்





சொல்லிக்கொள்கிறேன். மதுரை மாவட்டத்திலே இன்றையவரையிலே, 6 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 8 டன் அளவிற்கு நெல் கொள்முதல் நடைபெற்றுள்ளது என்கின்ற செய்தியையும் சொல்லிக்கொள்கிறேன். மாநிலத்தின் எந்த மாவட்டத்திலே நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கோரிக்கை வருகிறதோ, ஆங்காங்கே கோரிக்கையைப் பரிசீலித்து உடனடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது நெல் கொள்முதலைச் செய்யும் என்கின்ற நல்ல செய்தியையும் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஈரப்பதத்தின் அளவைக் கூட்டுவதற்கான முயற்சியைப் பற்றி இங்கே அமைச்சர் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள். பஞ்சாப் மாநிலத்திலே, நெல் பதர் என்ற அந்தக் காரணத்தைக் காட்டி 3 சதவிகிதமாக இருந்த அந்த ஈரப்பதக் கொள்முதலை 8 சதவிகிதம் என்ற அளவிலே உயர்த்துவதற்கான முயற்சியை அந்த மாநில அரசே, மத்திய F.C.I.–யுடன் பேசி, அதற்குரிய உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். அதேபோல, நமது மாநிலத்திலே பெறுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா? அதோடு, இந்த நெல் கொள்முதல் என்ற முறையில், நமது தமிழ்நாடு அரசே நெல் கொள்முதல் செய்வதற்குரிய முயற்சியை எடுத்தால், விவசாயிகளுக்கு நல்ல பலனை அளித்திருக்கும். மத்திய அரசாங்கத்தினுடைய, F.C.I.–யினுடைய முகவராகச் செயல்படுவதன்மூலமாக பல பிரச்சினைகள் வருகின்றன என்று இங்கே காரணம் சொல்லப்படுகிற காரணத்தினாலே, அரசே ஏற்று அந்த நெல் கொள்முதலைச் செய்வதற்குரிய முயற்சியைப் பற்றி பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநிலத்தில் எப்பொழுது நெல் கொள்முதல் தொடங்குவதற்கான relaxation கேட்டு மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதினார்களோ, அதே தேதியிலே தமிழக அரசும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய கோரிக்கையை ஏற்று கடிதம் அனுப்பியிருக்கிறது. பஞ்சாப் மாநிலத்திற்கான அனுமதியைக் கொடுத்த மத்திய அரசு, தமிழக அரசுக்கு ஈரப்பத கொள்முதலுக்குண்டான relaxation உத்தரவைக்கூட இன்னும் அனுப்பாமல் இருக்கின்றது என்கின்ற செய்தியைச் சொல்லிக்கொள்கிறேன். ஆனாலும், விரைவில் மத்திய அரசு

[2006 ஜனவரி 19

அனுமதிக்கும் என்கின்ற எதிர்பார்ப்போடு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், பண்டிகைக் காலங்களிலே விவசாயிகள் துன்பப்படக்கூடாது என்பதற்காக, விளைந்த நெல்லை உடனுக்குடனாக கொள்முதல் செய்வதற்கான அனைத்து உத்தரவுகளையும் வழங்கியிருக்கிறார்கள் என்கின்ற செய்தியைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 42, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**42—**

### குளிர்பதன சேமிப்புக் கிடங்கு

***13629—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு குளிர்பதன சேமிப்புக் கிடங்கு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு குளிர்பதன சேமிப்புக் கிடங்கு ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்கின்ற பதிலைச் சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு ஒரு குளிர் சாதன சேமிப்புக் கிடங்கு அப்பகுதியில் அமையுமென்று சொன்னால், மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற அந்தப் பகுதியில் விளைகின்ற விவசாயப்



2006 ஜனவரி 19]

பொருள்களை, அந்தக் குளிர்சாதன சேமிப்புக் கிடங்கில் சேமித்து வைத்து, விவசாயிகளுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுகின்றவகையில், விலையில் அதிக உயர்வு வருகின்றபோது, அவர்கள் அந்த விவசாயப் பொருட்களை விற்று, அதிக இலாபம் ஈட்டுகின்றவகையிலும் அல்லது பக்கத்து மாவட்டமான— மாங்கனி மாவட்டம் — சேலம் போன்ற பகுதிகளில் விளைகின்ற மாம்பழங்களை அங்கிருக்கின்ற சிறு விவசாய மக்கள் வாங்கிச் சென்று, இந்த அரசு குளிர்பதனச் சேமிப்புக் கிடங்கில் சேமித்து வைத்து, அதிக விலைக்கு விற்று அவர்கள் வாழ்க்கை ஜீவாதாரத்தை ஓட்டிக்கொள்வதற்கு வழிவகை காணுகின்றவகையிலும் நம்முடைய அரசு, இந்த நடப்பாண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு குளிர்பதனச் சேமிப்புக் கிடங்கு ஒன்றை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் 7 தனியார் குளிர்பதனக் கிடங்குகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவையே போதுமான அளவு சரக்குகளை வைத்துப் பூர்த்தியடையாமல் இருந்து கொண்டிருக்கிற நிலையில், இதுகுறித்து அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்கும் என்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி.பி. பொன்னம்பலம்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் சமயநல்லூர் தொகுதி, மேலூர் தொகுதி, சோழவந்தான் தொகுதிகளில் மாம்பழம், கொய்யாப்பழம், சப்போட்டா, வாழைப் பழம் மற்றும் தக்காளி ஆகியவகை உணவுப் பொருட்கள் அதிகமாக விளைகின்ற காரணத்தினால், இவற்றில் ஏதாவது ஒரு தொகுதியில் குளிர்பதனக் கிடங்கு வசதி செய்தால், எங்களுடைய மதுரை மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதி மக்களுக்கும் பயன்படும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து தனியாகக் கேள்வி தொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

[2006 ஜனவரி 19

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் மாங்கனி, தக்காளி, புளி போன்ற நல்ல பொருட்கள் அதிகமாக விளைந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலில் கூறுகின்றபோது, 7 குளிர்பதனச் சேமிப்புக் கிடங்குகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவை, தனியார் குளிர் பதனக் கிடங்குகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவற்றிலே அந்தப் பொருட்களை வைத்துப் பதப்படுத்துகிறபோது, அவை தனியாருடையவையாக இருக்கின்ற காரணத்தால், வாடகையை அதிகமாகப் பெறுகிறார்கள். ஆகவே சில நேரங்களில் மழை பெய்கிறபோது எங்களுடைய மாவட்டத்தில் தக்காளி போன்ற பயிர்களையெல்லாம் விவசாயிகள் ஒரே நேரத்தில் பயிரிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே தக்காளி, புளி, மாங்கனி போன்ற பொருட்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்த செலவிலே இருக்கவேண்டுமென்று சொன்னால், நம்முடைய அரசாங்கத்தின் மூலமாகவே அங்கே தேசிய குளிர்பதனக் கிடங்கு ஒன்றை ஏற்படுத்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தக்கவாறு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 43 பிறகு எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 44, திரு. அ. நடராஜன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**44—**

## குழந்தைகள் நல மையம்

***16366—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 19]

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சியில் குழந்தைகள் நல மையம் அமைத்துத்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சி, சேங்காலிபுரத்தில் அங்கன்வாடி மையம் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெற்ற குழந்தைகளைக் குப்பைத் தொட்டியில் வீசும் தாய்மார்களின் அவல நிலை நீங்க, தொட்டில் குழந்தை திட்டம் தந்து உலகமே வியக்கின்றவகையில், அன்னை தெரசாவால் பாராட்டப்பெற்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், என்னுடைய தொகுதியில், சேங்காலிபுரத்தில் குழந்தைகள் நல மையம் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து, அதோடு தரமான கல்வியும், ஊட்டச் சத்தும் பாதுகாப்பும் தருகின்றவகையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் நல்ல பல காரியங்களைச் செய்து சமூகப் புரட்சி செய்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், எனது குத்தாலம் ஒன்றியம், கோனேரிராஜபுரம் ஊராட்சியில் உள்ள பொய்கைவளர்நத்தம், ஈச்சங்குடி ஆகிய பகுதிகளை ஒருங்கிணைத்து புதிய குழந்தைகள் நல மையம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குழந்தைகள் நல மையம் ஆரம்பிப்பது என்றால், மொத்தம் ஆயிரம் நபர்கள் வாழக்கூடிய இடத்தில் ஒரு புதிய மையம் தொடங்கலாம். அதேசமயம் 500 பேர்கள் வாழக்கூடிய இடத்தில் ஒரு மினி மையம் தொடங்க வாய்ப்பு உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடங்களில் அவ்வாறு வாய்ப்புகள் இருந்தால், நிச்சயம் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதனையும், பரிசீலிக்கும் என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2006 ஜனவரி 19

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *45*, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**45—**

## பணி ஓய்வுப் பலன்கள்

***11668—திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், தொழில் வணிகத் துறை தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் விருப்பப் பணி ஓய்வு பெற்றுள்ள அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு அதற்கான பலன்களை உடன் அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழில் வணிகத் துறையின்கீழ் செயல்பட்டுவரும், தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் பணியாற்றி விருப்பப் பணி ஓய்வு பெற விண்ணப்பம் அளித்துள்ள அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அரசு ஊழியர்கள் இல்லாததால், அவர்களுக்குச் சேர வேண்டிய பலன்களை அந்தந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டே, கூட்டுறவுச் சங்க சட்ட விதிகளுக்கு உட்பட்டு வழங்க இயலும். அதற்கான பலன்களை அரசே ஏற்று அளிக்க இயலாது.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் ஆண்டிலே நான் கேட்ட கேள்வி, இறுதி ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் கேட்டிருப்பது, ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு முன்பு 'இன்கோ'விலே நடந்த நிகழ்வு. அப்போது 'இன்கோ' தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், அதிலும் குறிப்பாக நலிவுற்ற தேயிலைத் தொழிற்சாலைகளிலே man power complement என்பது மிக அதிகமாக இருந்த காரணத்தினால் ஆட்குறைப்புச் செய்ய வேண்டுமென்று அரசு திட்டமிட்டது. அதன் அடிப்படையிலே நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும், பணியாளர்களும் VRS என்கின்ற பேரிலே CRS அளிக்கப்பட்டார்கள். அதாவது விருப்ப ஓய்வு என்கின்ற அடிப்படையிலே, கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டார்கள். அவ்வாறு



2006 ஜனவரி 19]

கட்டாய ஓய்வு அளிக்கப்பட்ட நேரத்திலே அவர்களுக்கு ஒரு பெரும் தொகையானது compensation-ஆக, ஈட்டுத் தொகையாக அளிக்கப்படும் என்று அரசுத் தரப்பிலே அறிவிக்கப்பட்டது. அதை நம்பி, அங்கு பணியாற்றிய நூற்றுக்கணக்கான பணியாளர்களும், தொழிலாளர்களும் அதிலும் குறிப்பாக கோத்தகிரி, கீழ்கோத்தகிரி, கட்டபெட்டு, கரும்பாலம், கின்னக்கோரை ஆகிய தொழிற்சாலைகளிலே பணியாற்றி வந்த பணியாளர்களும், தொழிலாளர்களும் தங்களது பணியை ராஜினாமா செய்தார்கள். ஆனால் அவர்கள் வேலை இழந்து வீட்டிலே இருப்பதுதான் இன்றைக்கு மிச்சம். வீதியிலே தூக்கி எறியப்பட்டதுதான் மிச்சம். அவர்களுக்கு அரசு அறிவித்த ஈட்டுத் தொகை இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதனை ஆய்வு செய்து அவர்களுக்கு—ஏனென்றால், அரசு அறிவித்த திட்டத்தின் காரணமாகத்தான் அவர்கள் பணியை ராஜினாமா செய்தார்கள்—அந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளிலே அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட ஈட்டுத் தொகை அளிப்பதற்கான பண வசதி, நிதி வசதி இல்லாத நிலை இருந்தது. ஆகவே, அரசு இதனை மறுபரிசீலனை செய்து, பாதிக்கப்பட்டு இன்றைக்கு நிர்கதியாய் நிற்கின்ற அந்தப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஈட்டுத் தொகை அளிக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்காண்டுக் காலத்திற்கு முன்னாலே போட்ட கேள்வி. இதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்து, அதன் அடிப்படையிலே விருப்ப ஓய்வு பெற்றவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் குந்தாவில் பணியாற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை *10* பேருக்கு *18.64* இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. கரும்பாலத்திலே *3* பணியாளர்களுக்கு *8.54* இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. மேற்குநாடு – *16* பேர் பணியாளர்களின் எண்ணிக்கையில் *23.72* இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. மகாலிங்கா – *15* பேருக்கு ரூ.*19.29* இலட்சம், மஞ்சூரில் *13* நபர்களுக்கு ரூ.*23.89* இலட்சம், இத்தலாரிலே *13* பேருக்கு ரூ.*24.37* இலட்சம், பந்தலூரில் *7* பேருக்கு ரூ.*13.13* இலட்சம், கைக்காட்டியிலே *13* பேருக்கு ரூ.*22.46* இலட்சம், கட்டபெட்டு *12* பேருக்கு ரூ.*19.57* இலட்சம்; சாலிஸ்பெரியிலே *5* பேருக்கு ரூ.*7.37* இலட்சம், ப்ரான்டியரிலே *9* பேருக்கு ரூ.*15.05* இலட்சம், கின்னக்கோரையில் *5* பேருக்கு ரூ.*5.63* இலட்சம், இன்கோசெர்விலே *36* பேருக்கு ரூ.*56.57* இலட்சம் ரூபாய் ஈட்டுத் தொகையாக மாண்புமிகு அம்மா அவர்களின்

உத்தரவின்பேரில் கிட்டத்தட்ட 2 கோடியே, 58.23 இலட்சம் ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்க உத்தரவிட்டு வழங்கப்பட்டும்விட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மஹேஸ்வரி அவர்கள் சொன்ன கீழ்கோத்தகிரி என்பது, அங்கே சரியான முறையில் சங்க உறுப்பினர்கள் கொண்டுவந்து தராத காரணத்தால், தேயிலை வரத்து குறைந்து பெருத்த நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால், இரண்டிலே ஒன்று கலைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது மறுபடியும் திறக்க வேண்டுமென்று சங்க உறுப்பினர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 8000 கிலோ வரத்து வருகிறபோதுதான் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வரக்கூடிய தேயிலையின் மூலமாகத்தான் இலாபத்தைக் கொண்டுவர முடியும். ஆனால், 5,000 கிலோ மட்டும் வழங்குகிற காரணத்தால் நஷ்டத்திலே செயல்பட்டு வந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி மஹேஸ்வரி, நன்றி சொல்லுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய பதில் 2003, 2004 ஆம் ஆண்டுகளிலே 'இன்கோ'வில் நடைபெற்ற வி.ஆர்.எஸ். பற்றியது. ஆனால், நான் கேட்பது, 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வு. ஆகவே, அந்த நேரத்திலே, அதிலும் குறிப்பாக, கோத்தகிரி, கீழ்கோத்தகிரி தொழிற்சாலைகளிலே பணியாற்றிவந்த தொழிலாளர்களும் பணியாளர்களும்தான் இதில் அதிக அளவு பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், இந்த இரண்டு ஆலைகளும் தற்போது கலைப்பிலேதான் இருக்கின்றது. ஆனால், அந்தக் கலைப்பு செய்வதற்கு முன்பே தொழில் வணிகக் கூட்டுறவுத் துறையின் அறிக்கையை நம்பி, அவர்கள் தங்கள் பணிகளை இராஜிநாமா செய்தார்கள். அந்த நிலையிலே அந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கு அவ்வளவு பணம், நிதிவசதி அவர்களிடத்திலே இல்லை. அரசுதான் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டது. அந்த நேரத்திலே அங்கு பணியாற்றிய தொழிற்சங்கங்கள் நிர்வாகத்தோடு, அந்தத் தொழில்





கூட்டுறவு நிர்வாகத்தோடு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். 18(1) settlement அல்லது 12(3) settlement செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். அதற்காக வழக்கறிஞர் என்ற முறையிலே அந்த நிறுவனங்கள் என்னை அணுகின. நான்தான் அவர்களுக்கு 18(1) settlement கூட தயாரித்துக் கொடுத்தேன். அந்த ஒப்பந்தம் கையெழுத்தான நேரத்திலே நானும் அங்கே இருந்தேன். அந்த அடிப்படையிலேதான் கேட்கிறேன். பாதிக்கப்பட்ட இந்தப் பணியாளர்கள் பலர், இன்றைக்கு நீதிமன்றங்களைக்கூட அணுகி, தங்களுக்கு ஈட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று வழக்கு போட்டிருக்கின்றார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் மீண்டும் அதனை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் சொல்லி, ஏதேனும் ஒருவகையிலே அவர்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்த compensation package அடிப்படையிலேயே ஈட்டுத் தொகை வழங்கிடவும், அதேபோன்று இந்த விடுபட்ட காலத்திற்கு வட்டியுடன் வழங்கவும் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்கோத்தகிரி தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையினுடைய சங்கம் கலைப்பு நடவடிக்கையில் உள்ளது என்பதை அவரே ஒத்துக்கொண்டிருக்கிறார். கீழ்கோத்தகிரியில், 34 தொழிலாளர்கள், 26 அலுவலகப் பணியாளர்கள். அவர்களில் 12 பணியாளர்கள், 12 தொழிலாளர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்வதற்கு 2000 ஆம் ஆண்டே விண்ணப்பித்தனர். அவர்களுக்கு வழங்க வேண்டிய பணிக்கொடை தொகை ரூ.34 இலட்சத்து 65 ஆயிரம் ஆகும். அந்தச் சங்கப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய விருப்ப ஓய்வூதியத்தை தமிழ்நாடு மாநில புதுப்பித்தல் நிதியிலிருந்து பெற்றுத் தரவேண்டுமென்று 31–07–2000 அன்று பிரேரணை அனுப்பப்பட்டது. ஆனால், அரசு அந்தக் காலகட்டத்தில் மிகுந்த நிதி நெருக்கடி இருப்பதாகக் கூறி, மேற்கூறிய நிதியை வழங்க வாய்ப்பில்லை என்று தெரிவித்த காரணத்தால், 'தாய்கோ' வங்கியின் உதவி இயக்குநர் கலைப்பு அலுவலராக நியமிக்கப்பட்டு, கீழ்கோத்தகிரி கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை விற்று, அதிலே வரக்கூடிய பணத்தை அந்த ஓய்வு பெற்றவர்களுக்குத் தர வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, அந்த அடிப்படையில் இப்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது ஒருபுறம். இன்னொருபுறத்திலே, கீழ்கோத்தகிரியைச் சேர்ந்தவர்கள்

[2006 ஜனவரி 19

ஒருசாரார் மறுபடியும் இந்தக் கலைப்பு நடவடிக்கையிலே இருக்கக்கூடிய தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக, சொத்துக்களை விற்றுவிட்டு, அவர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்குவதா அல்லது மறுபடியும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வேலை வழங்குவதா என்பது குறித்து தீவிரமாக அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே மீண்டும் நடவடிக்கை, சங்க உறுப்பினர்களைக் கலந்து எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலைத் தந்தார்கள். கீழ்கோத்தகிரி, கோத்தகிரியில் இருந்த தொழிற்சாலைகள் இரண்டும் மூடப்பட்டு இருக்கின்றன. நாங்கள்தான் மீண்டும் திறக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். காரணம் என்னவென்றால், அந்த உற்பத்தியாளர்கள், கட்டபெட்டுவிற்கும், இன்னும் 25 கிலோமீட்டர் தூரம் உள்ள எப்பநாடுக்கும் பசுந் தேயிலையை அனுப்ப வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுடைய நல்வாழ்விற்காக மீண்டும் திறக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சில தொழிலாளர்கள் இந்த விருப்பப் பணி ஓய்வு சம்பந்தமாக நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக நாங்கள் அறிகிறோம். மேலும், 15 கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் அந்தத் தொழிலாளர்கள், அலுவலர்களுக்கெல்லாம் விருப்ப ஓய்வு வேண்டுமென்று சொன்னால், அரசு மூலமாகவோ, அல்லது தொழிற்சாலை மூலமாகவோ அவர்களுக்கு ஓய்வுப் பலன்கள் கிடைக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அமைச்சர் பதில் சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 46 திரு. கே.வி. முரளிதரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்



2006 ஜனவரி 19]

**46—**

### பயோ டீசல் உற்பத்தி

***65913—திரு. கே.வி. முரளிதரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதியில், 940 ஏக்கர் பரப்பளவில் உள்ள கோலட்டி பட்டுப் பண்ணை நிலத்தில் காட்டாமணக்கு பயிரிட்டு, என்.ஜி.ஓ. மகளிர் குழுக்கள் மூலமாக பயோ டீசல் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோலட்டி பட்டுப் பண்ணையில் பட்டு விதைக்கூடுகள் உற்பத்தி செய்வதைத் தவிர, காட்டாமணக்கு பயிரிட்டு, என்.ஜி.ஓ. மகளிர் குழுக்கள் மூலமாக பயோ டீசல் உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்வி கேட்டவர் இருக்கையில் இல்லை. வினா எண் 47, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**47—**

### பயிற்சி மையங்கள்

***41535—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் இந்திய அளவில் நடைபெறும் I.A.S./I.P.S. தேர்வுகளில் பங்கு பெறுவதற்கு இலவச பயிற்சி மையங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 19

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் I.A.S., I.P.S., தேர்வு பெறுவதற்காக இலவசப் பயிற்சிக்கு சென்னைக்கு வந்து செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. போக்குவரத்து காரணங்களுக்காகவும், மற்றும் காலவிரயம் ஆவதாலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்க்கு ஏற்காடு தொகுதியிலேயே இந்த I.A.S. பயிற்சி மையத்தை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய ஆவன செய்வார்களா எனப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I.A.S., I.P.S., எழுத்துத் தேர்வுகள் முதல் நிலை தேர்வு, இரண்டாம் நிலை தேர்வு என இரண்டு கட்டத் தேர்வுகளாக நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகளை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சென்னையில் மட்டுமே எழுத முடியும். பிற இடங்களில் எழுத மையங்கள் ஏற்படுத்தப்படவில்லை. இரண்டாம் நிலை தேர்வுக்கு 21-க்கும் மேற்பட்ட பாடப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அத்தனைப் பாடப் பிரிவுகளுக்கும் வல்லுநர்களை அழைத்து அந்தந்தப் பாடப் பிரிவில் பயிற்சி அளிக்கும் வசதி சென்னையில் மட்டுமே உள்ளன. எனவே, பிற இடங்களில் பயிற்சி மையம் ஏற்படுத்த சாத்தியக்கூறு இல்லை.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த I.A.S., I.P.S., அதிகாரிகள் எவ்வளவு பேர் உள்ளார்கள் என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய நடவடிக்கைகளின் விளைவாகத்தான் இப்போது தேர்ச்சிகள் அதிகமாகப் பெற்று வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 19]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் எத்தனை இடங்களில் I.A.S., மற்றும் I.P.S., பயிற்சி மையங்கள் உள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ—மாணவிகளுடைய முன்னேற்றத்தைக் கருத்திலேகொண்டு ஒவ்வொரு மாவட்டந்தோறும் இந்தப் பயிற்சி மையத்தைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் மட்டும் 1966 ஆம் ஆண்டு முதல் இது தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2000 ஆம் ஆண்டு முதல் சென்னை அண்ணா மேலாண்மை நிலையம் பயிற்சிகளை வழங்கி வருகிறது. ஏற்கெனவே நான் சொன்ன இரண்டாம் நிலை தேர்வுக்கு 21-க்கும் மேற்பட்ட பாடப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துணை பாடப் பிரிவுகளுக்கும் வல்லுநர்களை அழைத்து அந்தந்தப் பாடப் பிரிவில் பயிற்சி அளிக்கும் வசதி, சென்னையில் மட்டுமே உள்ளது. எனவே, பிற இடங்களில் பயிற்சி மையங்களை ஏற்படுத்த சாத்தியக்கூறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இந்திய ஆட்சிப் பணி தேர்வு என்பது, அவர்களைச் சமூகத் தரத்தில் உயர்த்துவதற்கு மிக மிக இன்றியமையாத ஒரு சூழலை உருவாக்குகிற கேந்திரமாக இருக்கிறது. அந்தவகையிலே பிற மாநிலங்களிலே தனியார் நிறுவனங்கள் இத்தகைய முயற்சியிலே ஈடுபடுமேயானால் அரசு அவர்களுக்கு நிதி வழங்குகிற ஒரு முறை இருந்துகொண்டிருக்கிறது. அதைப்போல தமிழகத்திலும் அரசே தனியார் பயிற்சி நிறுவனங்களுக்கு நிதி தருகின்ற, உதவி தருகிற சூழலை உருவாக்க முடியுமா, அரசுப் பயிற்சி நிலையங்களிலே தேர்ச்சி சதவிகிதம் பெருமளவிற்கு உயர்ந்து வருகிறதா, குறைந்து வருகிறதா, இந்த ஆண்டு தேர்ச்சி சதவிகிதம் எந்த நிலையிலே உள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

[2006 ஜனவரி 19

முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலமாகத்தான் 2002–ல் 2 பேர் வெற்றி பெற்றார்கள், 2003–2004 ஆம் ஆண்டில் 6 பேர்கள் வெற்றி பெற்றுள்ளனர். 2004–2005 ஆம் ஆண்டில் 11 பேர் வெற்றி பெற்றுள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் தனியார்மூலம் நடத்துவதற்கு அரசு உதவி செய்யுமா என்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுடைய நலன் கருதி ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், I.A.S., I.P.S., தேர்வு வகுப்புகள் சென்னையில் மட்டும் இயங்குவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். 21 பாடப் பிரிவுகளிலே வல்லுநர்களை வைத்து அரசு அந்தப் பயிற்சி நிலையத்தை நடத்திக்கொண்டிருப்பதாக இங்கே குறிப்பிட்டார்கள். அண்ணா நகரிலே இருக்கின்ற I.A.S., I.P.S., Coaching Centre-ல் அமைச்சர் கூறியதுபோன்று வல்லுநர்கள் இல்லை. அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற பழைய மாணவர்களை வைத்துத்தான் பாடம் நடத்துகிறார்களேதவிர, அதிலே Doctorate வாங்கியவர்கள், ஒரு Professor, ஒரு கல்லூரியினுடைய பேராசிரியர் போன்றவர்களைக்கூட வைத்து நடத்தலாம். அதுகூட இல்லை அங்கே. அமைச்சர், நான் சொல்வது தவறு என்று சொல்வார். அது தவறு. என்னுடைய மகனே இன்றைக்கு அங்கே படித்துக்கொண்டிருக்கிறான். அதனால்தான் அந்த உண்மையை நான் சொல்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னுக்கு வரவேண்டும் என்பதற்காக இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட நல்ல செயல்களைச் செய்துகொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களிலே பார்க்கின்றபோது, இந்த Centre–லே நிறைய பேர் pass பண்ணுகிறார்கள். நம்முடைய மாநிலத்திலே அது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** கேள்விக்கு வருகிறேன். இங்கேகூட நம்முடைய உறுப்பினர் தமிழரசன் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று தனியார் வைத்திருக்கிறார்கள். தனியார் வைத்திருக்கிறார்கள் மதராசிலே.



2006 ஜனவரி 19]

அதிலே வருகிற result, நம்முடைய மாநில அரசிலே நம்முடைய State Government நடத்துகிறதிலே வரவில்லை. அதற்குக் காரணம் சரியான பயிற்சியாளர்கள் அங்கே இல்லை. அதற்கு அரசு முனைந்து சரியான பயிற்சியாளர்களை நியமிக்க வேண்டும். அதோடு, அங்கே கட்டட மையங்கள் சரியாக இல்லை. Class நடத்துவதற்குக்கூட room இல்லை. ஒரு Master Degree படித்தவர்கள் அங்கே சென்று படிக்கிறார்கள். நல்ல நிலைக்கு வரவேண்டும் என்றால், நல்ல வசதியான திட்டம் வேண்டும். ஆகவே, அதையும் மாற்றியமைத்து நல்ல நிலையிலே உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன, தனியார்கள் நடத்துவதுபோன்ற பயிற்சிகள், போதுமான இட வசதி, அதற்குண்டான பயிற்சி வல்லுநர்கள் அதையெல்லாம்கொண்டு சரியான முறையில் பயிற்சிகள் நடைபெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 48 மற்றும் 49 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 50, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**50—**

**மாணவர் விடுதி**

***18617—திரு. இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் பிற்படுத்தப்பட்டேர் நலத் துறையின்கீழ் விடுதி கட்டிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்,

[2006 ஜனவரி 19

சீர்மரபினருடைய துறையின் 973 விடுதிகளில் 761 விடுதிகள், தனியார் கட்டடத்தில் அடிப்படை வசதி இல்லாமல் இருந்த நிலைமையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணர்ந்ததன் விளைவு, வரலாற்றிலேயே மொத்தம் 973 விடுதிகளில் 761 விடுதிகளுக்கு புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்காக உத்தரவு வழங்கி இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியைச் சொல்லிக் கொள்கிறேன், அதன் அடிப்படையில் பரமக்குடியில் பள்ளி மாணவர் விடுதி, பள்ளி மாணவியர் விடுதி, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, சீர்மரபினருடைய கல்லூரி மாணவர் விடுதி ஆகிய விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கைகள் துவக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகரில் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளும், கல்லூரி சீர்மரபினர் விடுதி ஒன்றும் இயங்கி வருகிறது. இந்த நிதியாண்டில் அப்படி இயங்கிவரக்கூடிய அந்தக் கல்லூரி விடுதிகள் அனைத்தும் வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டடங்கள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களாக கட்டிக் கொடுப்பதற்கு அரசு நிதியினை ஒதுக்கி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துள்ளார்கள். அதற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நயினார்கோவில், போகளூர், பரமக்குடி ஒன்றியங்கள், இந்த ஒன்றியத்திற்கு உட்பட்ட காடறுந்தகுடி, பொட்டகவயல், போகளூர், மஞ்சூர், பார்த்திபனூர் ஆகிய ஊர்களில் இயங்கி வரக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுடைய விடுதிகள் அனைத்தும் வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொண்டு, வருகின்ற இந்த நிதியாண்டிலேயே, தொகுதி முழுவதும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரக்கூடிய அந்த விடுதிகள் அனைத்திற்கும் அரசு நிதியினை ஒதுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–35

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல,



2006 ஜனவரி 19]

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருடைய மொத்தமுள்ள 973 விடுதிகளில் கடந்த ஆண்டு வரை ஆணையிட்ட 345 விடுதிகளில் 325 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க 416 விடுதிகளுக்கு ஆணை வழங்கப்பட்டு, அனைத்து விடுதிகளுமே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினருடைய விடுதிகளும் அரசு கட்டடங்களாக உருவாக்கப்பட வேண்டுமென்ற உன்னதமான திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியதில், இன்று அனைத்து விடுதிகளுமே அரசினுடைய புதிய விடுதிகளாக உருவாகக்கூடிய பொற்கால ஆட்சியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி விளங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியைப் பொறுத்தளவிலே 3 மேல்நிலைப் பள்ளிகள், சீர்காழி நகரத்தில் இயங்கி வருகின்றன. அங்கு இதுநாள்வரையிலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கான புதிய மாணவர் விடுதி ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை, சீர்காழி நகரில், பள்ளி மாணவ, மாணவியரின் நலன் கருதி புதிதாகத் தொடங்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு ஆளுநர் உரையிலே குறிப்பிடுகின்றபோது, இந்த விடுதிக் கட்டடங்கள் கட்டியதோடு, மேலும் 108 விடுதிகள் புதிதாகத் தொடங்கப்படும் என்கிற அறிவிப்பு இருக்கிறது. அவற்றிலே மிகவும்

பின்தங்கியவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இடம் இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் விடுதிகளுக்கு மட்டுந்தான் 108 விடுதிகள் என்று கவர்னர் உரையில் இருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் விடுதிகள் அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதுவும் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவர் விடுதிகள் கட்டுவதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு வருடங்களாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு எங்களுடைய மாவட்டத்திலே, நான் அளித்த 10 இலட்சம் ரூபாயைத் திரும்பவும் அனுப்பி, வேறு பணிகளுக்கு நீங்கள் அனுமதி பெறுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கடிதம் வந்தது. அப்படியானால் இப்பொழுது அமைச்சர் அவர்கள் கூறுவதைப்போல, கட்டடங்கள் கட்டப்பட்டுவிட்டன என்பதுதான் அதனுடைய பொருள். ஆனால் என்னுடைய தொகுதியிலேயே இன்னும் கட்டப்படவில்லை. அதற்கான இடமே தேர்வு செய்யப்படாதபோது, அளிக்கப்பட்ட நிதியே திரும்புகிறது என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையின்மூலமாக மாணவர் இல்லங்கள் கட்டுவதற்குரிய முயற்சியைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டது என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்பதோடு, மாணவர் இல்லங்களிலே போதுமான இடம் இருந்தும், மாணவர்களுக்கு இடம் கிடைக்காத சூழ்நிலை எங்களுடைய மாவட்டத்தில் தொடர்ந்து இருக்கிறது. குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லங்களில் இடம் இருக்கிறது, ஆனால் தேவையான அளவிற்குரிய இடம் இருந்தும் மாணவர்கள் இன்றைக்குக் குறைந்த அளவிலே சேர்க்கப்படுகின்ற காரணத்தினாலே இந்தப் பகுதியிலே பாதிக்கப்படுகிறார்கள், முற்றிலும் கிராமப் பகுதியைச் சேர்ந்தது என்ற முறையில் ஒவ்வொரு மாணவர் இல்லங்களிலேயும் அதிக எண்ணிக்கையை அனுமதிப்பதற்கான முயற்சியை அரசு எடுக்குமா எனவும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறும்போது, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 31 ½ இலட்சம் ரூபாய் ஓர் அரசு விடுதிக்கு ஒதுக்கப்பட்டதில், 5 இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினருடைய நிதியாக அளிக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவு வழங்கி, இந்த ஆண்டு மீதம் இருக்கின்ற 416 விடுதிகளில், இன்று 304 விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட கால்கோள் விழா நடைபெற்றுள்ளது. மீதம் இருக்கின்ற 112 விடுதிகளில் 87 விடுதிகளுக்கு நிலம் தெரிவு செய்யப்பட்டுவிட்டது. அதில் கிட்டத்தட்ட பாதிக்கு மேலே வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற 25 விடுதிகளுக்கும் விரைவில் இடம் தேர்வு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாமன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்பொழுது கூடுதலாக மாணவர்களை விடுதிகளில் சேர்க்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்லூரி விடுதிக்கு என்று, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்களுக்கு 775 கூடுதல் மாணவர்களைச் சேர்க்கக்கூடிய உத்தரவையும், அதேபோன்று 2,500 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பள்ளி மாணவர்களைக் கூடுதலாக விடுதிகளில் சேர்ப்பதற்கான உத்தரவையும் வழங்கினார்கள் என்ற நல்ல செய்தியை சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன், (குறுக்கீடு) திரு. ப. அரசன், நீங்கள் உட்காருங்கள், பிறகு கேளுங்கள். திரு. எச்.எம். ராஜு கேட்கிறார்.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அருமையான பதிலைச் சொன்னார்கள். மாநிலத்திலிருந்து அநேக இடங்களிலிருந்து மாணவிகள் வந்து ஊட்டி கல்லூரியில் தங்கிப் படிக்கின்றார்கள். அவர்களுக்காக — தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட கல்லூரி மாணவிகளுக்கும், பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவிகளுக்கும் விடுதிகள் கட்டுவதற்காக — ஏற்கெனவே என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தேன். இரண்டு விடுதிகளும் இன்னும்

கட்டப்படவில்லை. மாநிலத்தின் அநேக இடங்களிலிருந்து மாணவிகள் வந்து அந்தக் கல்லூரியில் தங்கிப் படிக்கின்றார்கள். அவர்களுக்கு கடந்த வருடம் நான் கொடுத்த அந்தப் பணத்திலிருந்தும் மீதம் உள்ள அரசுப் பணத்திலும் மாணவிகளுக்கு உடனடியாக அந்த விடுதிக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருடைய அனைத்து விடுதிகளையுமே இந்த ஆண்டு கட்டுவதற்கான உத்தரவு வழங்கப்பட்டு விட்டது. உத்தரவு வழங்கப்பட்டு இடம் தேர்வு செய்யப்பட்டு கிட்டத்தட்ட 304 விடுதிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 90 விடுதிகளில் இன்று பாதிக்குப் பாதி வேலைகள் முடிவுற்ற நிலையில் இருக்கின்றன. 416 விடுதிகளில் இன்னும் 25 விடுதிகளுக்கு மட்டும்தான் இடங்கள் தேர்வு செய்யப்படவிருக்கின்றன என்ற நல்ல செய்தியை நான் ஏற்கெனவே கூறியிருந்தேன். அதேபோன்று உங்களுடைய விடுதிகளுக்கும் விரைவில் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன், கேட்கவில்லையா? (குறுக்கீடு) திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியிலே பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று தேவைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம், கூப்பிடும்போது எங்கே போயிருந்தீர்கள்?

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் செந்நீர்குப்பம் பெண்கள் விடுதியானது இட வசதி குறைவாக உள்ளதால் அதில் 12 மாணவிகளே படிக்கின்றார்கள். அதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆவடி மாணவர் இல்லத்தில் 27 மாணவர்களே படிக்கின்றார்கள். ஆனால் 50 மாணவர்கள் படித்ததாகக் கணக்குக் கொடுத்து அரசிடமிருந்து பணம் பெறுகிறார்கள். அதை விசாரித்து தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கைமீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**51—**

**கால்நடை மருத்துவமனை**

***37597—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, நரியம்பள்ளி பகுதியில் கால்நடை மருத்துவமனை நடப்பாண்டில் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், அவினாசி தொகுதி நரியம்பள்ளி பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. மேலும் இதன் அருகில் 4 கி.மீ. தூரத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் அம்மா அவர்களுடைய நல்லாசியோடு பதுவம்பள்ளியில் தொடங்கப்பட்ட கால்நடை கிளை நிலையமும், 3 கி.மீ. தூரத்தில் கருவலூர் மற்றும் அல்லப்பாளையம் பகுதிகளில் கால்நடை மருந்தகங்களும் 5 கி.மீ. தூரத்தில் உள்ள அன்னூரில் கால்நடை மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் பெறப்படும் சிகிச்சைப் பணிகள் நரியம்பள்ளி பகுதியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானவையாக உள்ளன. எனவே நரியம்பள்ளி பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஜனவரி 19

முற்பகல் 10–45

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியை வென்ற சூறாவளியாய், வறட்சியை வென்ற மகாசக்தியாய், கேட்போரின் நிலைமை கருதி, கொடுக்கும் நெஞ்சமாய், எதிரிகளை வெல்வதில் சிங்கமாய், தாழ்த்தப்பட்ட மக்களைத் தலை நிமிரச் செய்த தங்கத் தலைவியாய், வாரி வழங்குவதில் பாரி வள்ளலாய், தென்னகத்தின் ஜான்சி ராணியாய், அகிலம் போற்றும் அன்னையாய், இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிவிட்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இலவச மிதி வண்டிகள், இலவசப் பாடநூல்கள், ஆலயங்களில் அன்னதானத் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் நிவாரணம் எனவும், கால்நடைத் துறையில் புதிய கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கவும் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதை இந்த இனிய நேரத்திலே நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரியம்பள்ளி மற்றும் அப்பகுதியைச் சுற்றியுள்ள கால்நடைகளை நம்பி வாழும் ஏழை எளிய மக்கள், தங்கள் கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை நரியம்பள்ளி கிராமத்தில் பெற, மறுபரிசீலனை செய்து கால்நடைக் கிளை நிலையமாவது அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கால்நடைக் கிளை நிலையம் தொடங்க விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டபின், தகுதியின் அடிப்படையிலும், நிதிநிலைமைக்கேற்பவும், நரியம்பள்ளி பகுதியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகாலிங்கம்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. கால்நடை துறையில் இதுவரை வரலாறு காணாத அளவிற்கு 316 கால்நடைக் கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு



2006 ஜனவரி 19]

அவற்றிலே எனது அவினாசி தொகுதியில் அல்லப்பாளையம் கிராமத்தில் உள்ள கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் அனைவரும் பயன்பெற்று வருகின்றார்கள். ஆகவே, அதற்குப் புதிதாக கட்டடம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வாயில்லா ஜீவன்களுக்குச் சிறந்த சிகிச்சை கிடைப்பதற்கு ஏதுவாக கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டவும், உபகரணங்கள் வழங்கவும் 60 கோடி ரூபாய் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு தரம் உயர்த்தப்பட்ட அல்லப்பாளையம் கால்நடை மருந்தகம் மற்றும் அவினாசி தொகுதியைச் சேர்ந்த கருவலூர் கால்நடை மருந்தகத்திற்கும் புதிய கட்டடங்கள் கட்ட மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதை இந்நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியிலே, அனைத்து மக்களுக்கும், நெசவாளப் பெருமக்களாக இருந்தாலும் சரி, விவசாயப் பெருமக்களாக இருந்தாலும் சரி, அரசு அலுவலர்களாக இருந்தாலும் சரி, மீனவப் பெருமக்களாக இருந்தாலும் சரி, அனைத்து மக்களின் வாழ்க்கையிலும் ஒளிவிளக்கை ஏற்றி வைத்து, அவர்கள் வாழ்க்கையிலே புரட்சியைச் செய்து வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கால்நடை நிலையங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 8 கி.மீ. என்ற இடைவெளியை நீக்கி, அதை 5 கி.மீ. ஆக ஆக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். அதைப்போலவே, நாம் கேட்காமலும், தட்டாமலும் கொடுக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, அவருடைய

[2006 ஜனவரி 19

தொகுதிக்கு எத்தனை கால்நடை கிளை நிலையங்கள், மருந்தகங்கள் வேண்டுமானாலும், இந்த நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப கனிவுடன் பரிசீலித்து செய்து கொடுப்பார்கள் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானமூர்த்தி.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் அடங்கிய மடப்பட்டு மற்றும் ஆனத்தூர் ஆகிய கிராமங்களில் இயங்கி வந்த கால்நடைக் கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவமனைகளாக அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பாக கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவமனைகளுக்குப் போதிய கட்டட வசதி இல்லாத காரணத்தால், இந்த இரண்டு இடங்களுக்கும் கட்டட வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையில் எந்த ஆண்டும் இல்லாத இமாலய சாதனையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு, இந்த ஆண்டு 90 கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்காக ரூபாய் 60 கோடியை ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, அந்த இரண்டு கிராமங்களிலேயும் அவர்கள் கேட்டபடி, இந்த நிதியாண்டில், அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலித்து கட்டிக் கொடுக்க, வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், என்னுடைய திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே ஜவ்வாது மலை இருக்கிறது. அங்கே மூன்று ஊராட்சிகள் இருக்கின்றன, 32 குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கு மலைவாழ் மக்கள்



2006 ஜனவரி 19]

வாழ்ந்து வருகிறார்கள். இதுநாள் வரை, அங்கே 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருந்தாலும்கூட, கால்நடை மருத்துவமனை இல்லை. ஏலகிரி மலையிலேயிருந்துதான் ஜவ்வாது மலைக்கு நடமாடும் மருத்துவமனை செல்ல வேண்டும். நீண்டகால கோரிக்கையாக கால்நடை மருத்துவமனை ஒன்று வேண்டுமென்று கேட்கிறார்கள். திருப்பத்தூரிலிருந்து அந்தக் கிராமங்கள் 50 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற காரணத்தினாலே, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினாலே, மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற காரணத்தினாலே, உடனடியாக அங்கே கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கான நிபந்தனைகள் – தடையாணை — இன்னும் அமலில் இருக்கிறபடியால், இந்த நிதியாண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி ஜவ்வாது மலையில் நிச்சயமாக அம்மாவினுடைய அரசு நிதிநிலைக்கேற்ப கனிவுடன் பரிசீலித்து கால்நடை மருந்தகம் கட்டிக் கொடுக்க சீரிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**52—**

### கால்நடை மருத்துவமனை

***75160—திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை, இளந்தோப்பு, வடவஞ்சார் பகுதியில் கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : மயிலாடுதுறை, இளந்தோப்பு, வடவஞ்சார் கிராமத்தின் அருகில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் தலைஞாயிறு கால்நடைக் கிளை

நிலையமும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் கிழாய் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் பெறப்படும் சிகிச்சைப் பணிகள் வடவஞ்சார் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. மேலும் தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதலால் வட்டவஞ்சார் கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையிலே நான் பேசுவதற்குக் கூடுதலாக நேரம் ஒதுக்கிக் கொடுத்தமைக்கு நான் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, நான் ஒரு மாற்றுக் கட்சிக்காரன் என்பதைக்கூட பொருட்படுத்தாமல், மயிலாடுதுறை தொகுதியைப் பொறுத்தவரை, நான் கேட்டிருக்கிற எல்லா கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மயிலாடுதுறை, இளந்தோப்பு, வடவஞ்சார் பகுதியிலே கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தரவும், அதைப்போலவே மயிலாடுதுறை கால்நடை அரசு மருத்துவமனையிலே சுற்றுச்சுவர் இல்லாமல் அருகில் பன்றி வளர்ப்பவர்களுடைய பன்றிகள் எல்லாம் அங்கே வந்து தொல்லை கொடுக்கின்றன. நானேகூட நேரில் சென்று பார்த்தேன். எனது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் அந்தக் கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். ஆனால் அந்தத் தொகை போதவில்லையென்று சொல்கிறார்கள். அதை முழுமையாகக் கட்டித்தர தமிழக அரசும் நிதி ஒதுக்கித் தருமா என்று கேட்க விரும்புகிறேன். அதேபோல, அதே கால்நடை மருத்துவமனையிலே 5 கால்நடை உதவியாளர்கள் பணி காலியாக இருக்கிறது. அதையும் நிரப்பித் தருமா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சரையும் அம்மா அவர்களையும் பணிவோடு கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் துவக்க விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டபின், தகுதியின் அடிப்படையிலும், நிதிநிலைமைக்கேற்பவும், இப்பகுதியில் புதிய கால்நடைக் கிளை நிலையம்





ஏற்படுத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, மயிலாடுதுறை கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்து நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய பதவிகள் ஏற்படுத்த விதிக்கப்பட்ட தடையாணை நீக்கப்பட்ட பின்னர், இம்மருத்துவமனையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, இக்கால்நடை மருத்துவமனைக்கு அன்றாடப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் நேற்றே ஆணை பிறப்பித்ததன் பேரில், நாளையே அங்கே இரண்டு கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** அமைச்சருடைய பதிலுரைக்கு நன்றி. அதைப்போல கேட்ட மாத்திரத்திலேயே எங்கள் குறையைப் போக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் மீண்டும், மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதிக்குப் பக்கத்திலுள்ளதுதான் என்னுடைய சீர்காழி தொகுதி. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல சலுகைகளை மயிலாடுதுறைக்குச் செய்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றியை நாங்கள் தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், என்னுடைய சீர்காழி தொகுதியில் கொள்ளிடம் ஆற்றின் ஓரத்தில் இருக்கக்கூடிய மாதிரவேளூர் என்ற பெரிய கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்திலே

[2006 ஜனவரி 19

கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அவர்கள் அந்தக் கால்நடைகளுக்குச் சிகிச்சை பெற வேண்டுமென்றால், மாதிரவேளூர், அந்தக் கொள்ளிட ஆற்றின் கரையிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரம் உள்ள சீர்காழி கால்நடை மருத்துவமனைக்கு வரவேண்டியுள்ள சூழ்நிலை உள்ளது. ஆகவே, மாதிரவேளூர் கிராமத்தில் ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கோரும் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டு இருக்க வேண்டும். தினசரி கால்நடைகளின் வருகை சுமார் 10-க்கும் மேற்பட்டு இருக்க வேண்டும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கோரும் கிராமத்திற்கும் அருகிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்று சொல்கின்ற காரணத்தால், இந்த நிதியாண்டில் அம்மா அவர்களுடைய அரசு, நிதிநிலைமைக்கு ஏற்ப அந்தக் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் கட்டுவதற்கு உண்டான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியிலே கால்நடை துறை மருத்துவமனை இருக்கிறது. ஆனால் சுற்றுச்சுவர் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச்சுவர் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக ஒரு கோடி ரூபாயை உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். (குறுக்கீடு) கட்டுகிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஜெக. வீரபாண்டியன்கூட ஒரு இலட்ச ரூபாய் கொடுத்து கட்டி இருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நிதிநிலைமைக்கு ஏற்ப



2006 ஜனவரி 19]

இந்த நிதியாண்டிலேயே பரிசீலித்து சுற்றுச்சுவர் கட்டுவதற்கு உண்டான முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. சி. சண்முகம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**53—**

### சுற்றுச்சூழல்

*** 7315—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை புறநகர் பகுதிகளில் செங்கல் தொழிற்சாலையின் புகையினால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) சென்னை புறநகர் பகுதியில் செங்கல் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க சேம்பர் செங்கல் தொழிற்சாலைகளில் விறகு, மரக்கரி மற்றும் நிலக்கரி போன்ற எரிபொருட்களைக் காற்றுடன் தகுந்த விகிதத்தில்...

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினருடைய துணைக் கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லுகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** கலந்து எரிக்க வேண்டும் எனவும், நகரக்கூடிய புகை போக்கிக்குப் பதிலாக நிலையான புகைபோக்கியைப் பொருத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 250–க்கு மேல் செங்கல் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் அமைச்சர் அவர்கள் கூறியபடி, மாசுபடுவதைத்

[2006 ஜனவரி 19

தடுக்க இதுவரை எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை. நிலக்கரியையே – மாசுபடும் நிலக்கரியையே — உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்பதையும், அடுத்து இந்தத் தொகுதியில் உள்ள 250 செங்கல் தொழிற்சாலைகளிலுள்ள நிலங்கள் அனைத்தும் அரசு விதிப்படி, கனிம விதிப்படி 5 அடிதான் எடுக்க வேண்டும்; 15 அடிக்குமேல் ஆழம் எடுத்து நன்றாக ஆழப்படுத்தி விட்டார்கள் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அங்கு மாசு ஏற்படுவதைத் தடுக்க மாசுக் கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) நேற்றே பதில் சொல்லிவிட்டேன். மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்)

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடுகள்)



2006 ஜனவரி 19]

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரையிலே வந்திருக்கிறது. ஆளுநர் உரையிலே பேசலாம் அதை. (குறுக்கீடுகள்) ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையிலே பேசலாம். (குறுக்கீடுகள்) என்னுடைய அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. உட்காருங்கள், உட்காருங்கள்.

## 3. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

### (அ) பொதுக் கணக்குக் குழு—தொடர்ச்சி

**திரு. கே.என். இலட்சுமணன்:** 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் (குறுக்கீடுகள்) இருநூற்று எழுபத்து மூன்றாவது முதல் இருநூற்று எண்பத்து மூன்றாவது வரையிலான (குறுக்கீடுகள்) 11 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்)

## 4. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன? என்ன? துரைமுருகன் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநிலத்தில் அந்த அரசு ஒரு அணையைக் கட்டப்போவதாகச் செய்தி வெளியாகியிருந்தது. அது மிகப்பெரிய ஒரு பிரச்சினையை வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களிலே உருவாக்கிவிடும். பாலாறு சஹாராவாகக்கூடிய நிலைமை உருவாகிவிடும், விவசாயிகள் மத்தியிலே பீதி ஏற்பட்டு பல இடங்களில் ஆர்பாட்டங்களை நடத்தினார்கள். இதுகுறித்து அந்த அரசுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட கடிதம் எழுதியிருக்கிறார்கள். பல விவசாயச் சங்கங்கள் சார்பிலே தந்திகள் அனுப்பியிருக்கிறோம். பல இடங்களிலே ஆர்பாட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நேற்றைக்கு வந்த செய்தி,

இன்னும் அதிர்ச்சி தரக்கூடிய அளவிற்கு இருக்கிறது. அதிகாரிகள் அங்கு அளவெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு, கட்டுவதற்கு பணம் ஒதுக்கலாம். இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளலாம் என்ற செய்தி எல்லாம் இன்றைக்குப் பத்திரிகையிலும், தொலைக்காட்சி மூலமாகவும் அறிந்தோம். இப்பொழுதும் விவசாயிகள், பொது மக்கள் மத்தியிலே— ஏனென்றால் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் அதுதான் எங்களுக்கு ஒரே ஒரு ஆறு – – மிகப்பெரிய கொந்தளிப்பு, பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன்...

**திரு. துரைமுருகன்:** அதைத் தடுப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கிறதா என்பதை அறிவதற்காகத்தான் நாங்கள் இப்பொழுது இந்தப் பிரச்சினையைக் கிளப்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** எனவே இதுகுறித்து, கொஞ்ச நேரம் இந்த அவையின் அலுவலை ஒத்தி வைத்தோ அல்லது முதலமைச்சருடைய பதில் கிடைக்குமானால், என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்குச் சாதகமாக இருக்கும். எனவே, அதற்குத்தான் எங்களுக்கு permission–ஐக் கொடுங்கள் என்று கேட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். பேசிவிட்டீர்கள், பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** அதையேதானே சொல்லப்போகிறீர்கள்? பதில் சொல்கின்றேன். அதையேதானே? எல்லோருடைய சார்பிலேயும் — ஒரே மாவட்டம். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? ஞானசேகரன், துரைமுருகன் ஏற்கெனவே சொல்லிவிட்டார். அதற்கு முதல்வர் அவர்கள் பதில் சொல்கிறேன் என்கிறார்கள், உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு point, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொன்னதோடு. நேற்று materials எல்லாம் இறங்கிவந்து, கட்டடமே கட்டத் துவங்கி விட்டார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகையிலே உங்கள் பெயரையும் சேர்க்கச் சொல்லிவிடுவோம்! ஒன்றும் கவலைப்படாதீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** எல்லாம் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மணி பெயரையும் சேர்த்து விடுங்கள். சார், மணி பெயரையும் சேர்த்து விடுங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர அரசு, சித்தூர் மாவட்டத்தில் குப்பம் என்னும் பகுதிக்கு அருகே, பாலாற்றின் குறுக்கே அதிக அளவு நீரை, அதாவது 2 டி.எம்.சி. அடி நீரைத் தேக்குவதற்கு ஓர் அணை கட்ட இருப்பதாகவும், அதற்கான பணிகள் விரைவில் தொடங்க உள்ளன எனவும் செய்தித்தாள்களில் 4–1–2006 அன்று செய்திகள் வெளியாகி உள்ளன.

பாலாறு நதி, கர்நாடக மாநிலத்தின் கோலார் மாவட்டத்தில் உற்பத்தியாகி தென் கிழக்காக கர்நாடக மாநிலத்தில் 93 கிலோமீட்டர் தூரமும், ஆந்திரப் பிரதேசத்தின் சித்தூர் மாவட்டத்தில் 33 கிலோமீட்டர் தூரமும் ஓடி, தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டத்தில் நுழைந்து, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சதுரங்கப்பட்டினத்தில் கடலில் கலக்கும் முன்னர், தமிழ்நாட்டில் 222 கிலோமீட்டர் தூரம் செல்கிறது. வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் சென்னை போன்ற வட மாவட்டங்கள் வழியாகப் பாலாறு செல்கிறது.

பாலாறு, பன்மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற நதியாகும். 1892 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தில் அட்டவணை 'அ'–ல் குறிப்பிடப்பட்டுள்ள பதினைந்து முக்கிய நதிகளில் பாலாறும் ஒரு முக்கியமான நதியாகும். இந்த ஒப்பந்தத்தின் சரத்து 2–ல், அட்டவணை 'அ'–ல் குறிப்பிடப்பட்டுள்ள நதிகளின் குறுக்கே, மேற்பகுதியில் உள்ள மாநிலங்கள், கீழ்ப்பகுதியிலுள்ள மாநிலங்களின் முன் அனுமதி இல்லாமல் எந்த ஒரு புதிய அணைக்கட்டோ அல்லது நீரைத் தடுப்பதற்கான கட்டுமானங்களையோ கட்டக் கூடாது எனவும், நீரைத் திருப்புவதற்கோ அல்லது நீரைத் தேக்குவதற்கோ எந்த ஒரு செயலையும் மேற்கொள்ளக் கூடாது எனவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக, 5–1–2006 அன்று மாண்புமிகு ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் ஒன்றை நான் எழுதி

உள்ளேன். தமிழகத்தின் வட மாவட்டங்களில் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன ஆதாரமாக பாலாறு அமைந்துள்ளது. வேலூர், காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் உள்ள பல நகரங்கள் மற்றும் ஊராட்சிகளில் வாழ்ந்துவரும் மக்கள், குடிநீர் ஆதாரத்திற்குப் பாலாற்றையே பெரிதும் நம்பி உள்ளனர். பாலாற்றின் குறுக்கே அணை எதையும் கட்டுவது, தற்போது நடைமுறையில் உள்ள 1892 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். இத்திட்டம் தொடர்பாக ஆந்திர அரசு, தமிழக அரசினை இதுவரை எந்தத் தொடர்பும் கொள்ளவில்லை. இதுசம்பந்தமாக எந்தத் தகவலும் ஆந்திர அரசிடமிருந்து தமிழக அரசுக்கு வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு பாலாற்றின் குறுக்கே குப்பம் பகுதியில் அணை கட்டும் திட்டத்தினைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளேன். இக்கடிதத்திற்கு இதுவரை எந்தப் பதிலும் ஆந்திர முதலமைச்சரிடமிருந்தோ, ஆந்திர அரசிடமிருந்தோ பெறப்படவில்லை.

எனது ஆணையின்பேரில், தமிழ்நாடு பொதுப் பணித் துறை அலுவலர்கள், 5–1–2006 அன்று ஆந்திர அரசு, அணை கட்ட உத்தேசித்துள்ளதாகக் கூறப்படும் குப்பம் பகுதியைப் பார்வையிட்டனர். இத்திட்டம் தொடர்பாக எந்த ஒரு ஆரம்பக் கட்ட நடவடிக்கையும் தொடங்கப்படவில்லை என்றும், இத்திட்டம் கருத்து நிலையிலேயே, conceptual stage–லேயே உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தமிழக அரசின் பொதுப் பணித் துறை களப் பணியாளர்கள், குப்பம் மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளில் நடைபெறும் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்ட உத்தேசித்துள்ள இடம் முழுமையாக காப்புக் காட்டுப் பகுதியில், —Reserve Forest Area-ல்— அமைந்துள்ளதால், இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும். மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தைத் தன்வசம் வைத்துக்கொண்டு எனது அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு வரும் தி.மு.க., இந்தத் திட்டம் குறித்து என்ன செய்யப் போகிறது என்பதைத் தமிழக மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் என்ன முடிவு எடுத்தாலும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை எதையும் கட்டுவதை எனது அரசு, தனது ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தித் தடுக்கும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி)



இந்த அவையில் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவையெனில், நீதிமன்றத்தை அணுகவும் எனது அரசு தயங்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கிடையில், ஆந்திர அரசு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டதாக இன்றையதினம் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதுபோல், நான் அனுப்பிய கடிதத்திற்கு இதுவரை ஆந்திர முதலமைச்சர் எந்தப் பதிலையும் அனுப்பவில்லை. ஆகவே, இந்தப் பணிகள் தொடங்கப்பட்டது உண்மைதானா என்பதை உறுதி செய்துகொண்டு அடுத்த கட்டமாக ஆந்திர அரசுக்கு அணை கட்டுவதற்கு தடை விதிக்குமாறு உச்ச நீதிமன்றத்தை அணுகப் போகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள், சுற்றுச்சூழல் அமைச்சரை வைத்துக்கொண்டு, இதில் என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்கின்றார்கள். சுற்றுச்சூழல் அமைச்சகம் தடை விதித்தால்கூட மீறிக் கட்டுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று. நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் வேலூர் பத்திரிகையில் பார்த்தேன். மேல்அரசம்பட்டு அணை கட்டுவதற்கு 13 கோடி ரூபாயை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருப்பதாக அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஒரு விளம்பரம் கொடுத்து நன்றி தெரிவித்திருந்தார். மேல்அரசம்பட்டு அணைக்கு இதுவரையில் சுற்றுச்சூழல் பகுதியிலே இருந்து அந்த அமைச்சகம் அனுமதி கொடுக்கவில்லை என்று அறிகிறேன். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன்... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் எப்படி நீங்கள் ஆரம்பிக்கிறீர்களோ அப்படித்தான்... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் பேசும்போது நான் நினைக்கிறேன், கொள்கிறேன் என்றெல்லாம் பேசக்கூடாது. ஒரு செய்தியை உறுதிப்படுத்திக் கொண்டுதான் பேசவேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். நான் கேட்ட கேள்வி இதுதான். இந்த அணை கட்ட ஆந்திர அரசு உத்தேசித்துள்ள

இடம் Reserve Forest Area -காப்புக் காட்டு ஏரியாவில்தான் இருக்கிறது. ஆகவே மத்திய அரசின் சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் வனப் பகுதித் துறையின் அனுமதி இல்லாமல், ஆந்திர அரசு அந்த அணையைக் கட்ட முடியாது. ஆகவே அந்தப் பொறுப்பில் இருக்கின்ற தி.மு.க. மத்திய அமைச்சர் என்ன செய்யப்போகிறார் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கு நூறு அந்த அமைச்சர் இந்த அணை கட்டுவதற்கு நிச்சயமாக permission கொடுக்க மாட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடியுங்கள். (குறுக்கீடு) குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) கேட்டதற்கு பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது, தாங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. லா. சந்தானம். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன? சொல்லுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவது என்பது தமிழ் நாட்டினுடைய உரிமையைப் பறிக்கக்கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதையெல்லாம் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## 3. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடுகள்)

## 4. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்—தொடர்ச்சி

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, Speaker Sir, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் சொல்லிவிட்டார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி., என்ன? சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். விளக்கத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்றுக்கொள்கிறேன். குறிப்பாக, அது காப்புக் காட்டுப் பகுதியாக இருக்குமேயானால் அதைத் தடை செய்ய வேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. என்றாலும்கூட, கடைசி முயற்சியாக முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் செல்ல முடியாவிட்டாலும்கூட, பொதுப் பணித் துறை அமைச்சரையாவது அனுப்பி ஆந்திர அரசோடு ஒரு முறை பேச்சுவார்த்தை நடத்துவது தவறில்லை. ஏனென்றால் விவசாயிகள், நாம் பேசுவதன்மூலமாக நிறுத்த முடியும் என்று திடமாக நம்புகிறார்கள். எனவே

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்][2006 ஜனவரி 19

அதைச் செய்ய வேண்டும். நீண்டகாலமாக, அண்ணா அவர்கள் தேர்தலில் நின்ற காலத்திலிருந்து நீரோடும் பாலாறாக அது மாறவேண்டும் என்பது நம்முடைய கனவாக இருந்து வருகிறது. அது நீரோடும் பாலாறாக ஒரு பகுதியிலே இருந்தாலும்கூட, மறு பகுதியிலே நீரோடும் பாலாறாக இல்லை. நீரோடும் பாலாறாக இருக்க வேண்டும் என்று சொன்னால் மேலே அணை கட்டக்கூடாது. மேலே அணை கட்டுவதை நிறுத்த வேண்டும். அதற்கு நிச்சயமாக நாம் பேச்சுவார்த்தை நடத்துவது பயன் அளிக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் இதுதொடர்பாக ஆந்திர முதலமைச்சருக்கு நான் கடிதம் அனுப்பியும்கூட, இதுவரை ஆந்திர முதலமைச்சர் பதில் ஏதும் அனுப்பவில்லை. அதேசமயத்தில் அவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த முதலமைச்சர். காங்கிரஸ் கட்சியின் ஆட்சிதான் ஆந்திராவில் நடைபெறுகிறது. காங்கிரஸ் கட்சிக்காக தமிழக மக்கள் இத்தனை வாக்குகளை அளித்து, இத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மத்தியில் உள்ள அரசில் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். ஏன், காங்கிரஸ் தலைமை ஆந்திர முதலமைச்சரை அழைத்து இந்த அணையைப் பாலாற்றின் குறுக்கே க்ட்டும் திட்டத்தை, எண்ணத்தை விட்டுவிடுங்கள் என்று சொல்லலாமே? (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் மீது அக்கறை இருந்தால் இதைச் செய்யலாமே?

*முற்பகல் 11–15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நாங்கள் உறுதுணையாக இருப்போம். அதிலே எந்தவிதமான சந்தேகமும் உங்களுக்குத் தேவையில்லை. என்றாலும்கூட, ஒரு கட்சியின் ரீதியிலே பேசுவதைக் காட்டிலும் அரசுக்கு அரசு பேசுமேயானால் அது நல்ல பலன் அளிக்கும். எங்களைப் பொறுத்தவரையில் நிச்சயமாக நாங்கள் வலியுறுத்துவோம் என்பதை நான் மீண்டும் உறுதி அளிக்கின்றேன். நீங்கள் முறையாக, தமிழக அரசு, ஆந்திர அரசை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கட்சி ரீதியாகப் பேசவில்லை. மத்திய அரசு ஆந்திர அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றுதான் கூறினேன்.



2006 ஜனவரி 19]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி. பழனிசாமி:** மணி, கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு நிமிஷம், One minute. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். பொதுவாக (குறுக்கீடு) பேசலாம் இருங்கள், மணி. எனக்கு மைக் கொடுத்திருக்கிறார்கள் இல்லையா ? உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், கொடுத்திருக்கிறார்கள் இல்லையா, உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, திரு. பழனிசாமி கேட்டு முடித்தவுடனே, உங்களுக்கு மறுபடியும் வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனேகமாக இந்தப் பிரச்சினையில் எந்தவொரு கட்சிக்கும் மனமாச்சரியம் கிடையாது. ஆந்திர அரசு அணை கட்டுவதிலே தமிழ்நாட்டிலே இருக்கிற அரசியல் கட்சிகளிலே எந்தவொரு கட்சிக்கும் அந்த அணை கட்டுவதை ஏற்றுக்கொள்கிற கட்சிகள் எந்தக் கட்சியும் கிடையாது. ஆகையால், நம்முடைய கட்சிகளால், தமிழ்நாட்டினுடைய உரிமையைப் பல தடவை இழந்திருக்கின்ற அனுபவம் நமக்கு இருக்கிறது. அரசியல் காரணமாக, ஆளும் கட்சி, எதிர்க்கட்சியாக என்று மாறி மாறி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை பழனிசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) தெளிவாக விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியிருப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது காப்புக் காடுகள் திட்டத்திலே வருகிற காரணத்தினால் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் என்ன செய்யப் போகிறார் என்று கேட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி அங்கே ஆளுகிற காரணத்தினால் காங்கிரஸ் கட்சி என்ன செய்யப் போகிறது என்று கேட்டிருக்கிறார்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதோடு முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்த மாநிலத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலேயும் எந்தக் கட்சி ஆட்சி புரிந்தாலும் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, ஜி.கே. மணி, என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) மணி. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உரிமைகளை இழப்பதற்கு நாம் தயாராக இல்லை. யார் வேண்டுமானாலும் ஆளட்டும். தமிழக அரசு இதை அரசியல் ஆக்காமல் இந்தப் பிரச்சினைகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள். பழனிசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உரிமையைப் பெறுவதற்கு நாம் ஒருமித்த குரலில் ஒலிக்க வேண்டும். ஆனால், ஆந்திர மாநிலத்திலே அங்கே இருக்கக்கூடிய ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி, பாரதிய ஜனதாக் கட்சி, தெலுங்கு தேசம், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்ல முன்வருகிறீர்கள்? என்ன விவரத்தை...

**திரு. ஜி.கே. மணி:** சொல்லிவிடுகிறேன், அதைத்தான் சொல்ல விடமாட்டேன் என்கிறீர்களே? அந்த அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அங்கே ஒரே நாளில் முதலமைச்சர் உருவ பொம்மையைக் கொளுத்துகிறார்கள். எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் ஐயா அவர்களுடைய உருவ பொம்மையையும் கொளுத்துகிறார்கள். ஒருமித்த குரலில் நம்முடைய உரிமையை மறுக்கிறார்கள். அதனால் நாமும் இங்கு கட்சி வேறுபாடின்றி ஒரே குரலில் ஒலிக்கின்ற வகையிலே இந்தச் சட்டமன்றத்தில் ஏகமனமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிய முழு விளக்கத்தையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். மேற்கொண்டு பேசுவதற்கு ஒன்றும் இல்லை. மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடு)



**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அனைவரும் (குறுக்கீடு) நாம் அனைவரும் (குறுக்கீடு) நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து பிரதமரின் உருவ பொம்மையை எரிப்போமா? (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து பிரதமர் மன் மோகன் சிங் அவர்களின் உருவ பொம்மையை எரிப்போமா?

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. என்ன? சொல்லுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் இப்போது பேசுகிறார்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. என்ன? திரு. எஸ்.ஆர்.பி. என்ன? சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பதில் திருப்தி அளிப்பதாக இல்லை. பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறது. எனவே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அம்மா அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களைக் கூறிவிட்டு, திமுக.–வினரும், காங்கிரஸ் கட்சியினரும் இங்கே வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழக அரசு தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது என்று குற்றஞ்சாட்டி, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்கிறது என்று அறிவித்தது வேடிக்கையிலும் வேடிக்கை. ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணை கட்ட உத்தேசித்துள்ளது என்றால், அதைத் தடுத்து நிறுத்தும் இடத்தில், அதிகார பீடத்தில் காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியிலே அமர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியில் ஆளுகின்ற கூட்டணி ஆட்சிக்கு காங்கிரஸ்தான் தலைமை ஏற்றிருக்கிறது. அதற்கு அனுமதியை மறுக்கக்கூடிய இடத்தில் சுற்றுச்சூழல் துறை அமைச்சராக தி.மு.க.–வைச் சேர்ந்த அமைச்சர் உட்கார்ந்திருக்கிறார். அவர் அனுமதியை மறுத்தாலே அந்த அணையைக் கட்ட முடியாது. ஆகவே, தி.மு.க.வும் சரி, காங்கிரஸ் கட்சியும் சரி, மத்திய ஆட்சியிலேயே இருந்து கொண்டு, அவர்கள் செய்ய வேண்டிய கடமையைத் தட்டிக் கழித்துவிட்டு, அவர்கள் ஆற்ற வேண்டிய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு, இங்கே மாநில அரசுமீது பழி போட நினைப்பது, வேடிக்கையிலும் வேடிக்கை. மக்கள் இதைப் பார்த்து எள்ளி நகையாடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–20*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே நாங்கள் ஏற்கெனவே வலியுறுத்தி இருப்பதைப்போல, அண்டை மாநில முதலமைச்சரைச் சந்தித்துப் பேசுவதற்குத் தமிழக முதலமைச்சரோ அல்லது அமைச்சரவையிலேயிருந்து அமைச்சர்களோ தயாராக வேண்டும், அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாநில அரசுகளுக்கிடையே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சில வழிமுறைகள், சில மரபுகள் இருக்கின்றன. இதுகுறித்து நான் ஆந்திர முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்திற்கு ஆந்திர முதலமைச்சர் இதுவரை பதில்கூட அனுப்பவில்லை. அப்படியிருக்கின்றபோது, பேச்சுவார்த்தைக்கு என்று சென்றால் அவர்கள் சந்திப்பதற்காக appointment கொடுப்பார்கள் என்று



என்ன நிச்சயம்? ஆகவே, மேற்கொண்டு பதில் வரவில்லையென்றால், அணை கட்டுகின்ற பணிகள் தொடருமேயானால் அடுத்தகட்டமாக, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தமிழக அரசு பேசுவதற்கு முன்வராததைக் கண்டித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன் நீங்கள் முதலிலேயே போக வேண்டியதுதானே? ஏன் வம்பு பண்ணிவிட்டுப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) இதற்கு முன்னாலேயே போயிருக்க வேண்டியதுதானே? (குறுக்கீடுகள்)

*(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

## 3. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து ஆறாவது முதல் நூற்று இருபத்து ஒன்பதாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஒன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும்.

திரு. கே.சி. கருணாகரன், திரு. என். நன்மாறன், திரு. மு. அப்பாவு, திரு. கோவை தங்கம், திரு. கா. கந்தசாமி, திரு. எச்.எம். ராஜு ஆகியோர் இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

"புதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழியுங்கள். திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ப. அரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன், திரு. கு. பிச்சாண்டி, திரு. வி.கே. லட்சுமணன் ஆகியோர் இருக்கையில் இல்லை. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்–தொடர்ச்சி. திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்திருக்கின்ற இந்தப் பேருரையின்மீது எனது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அனுமதி தந்திருக்கின்ற தங்களுக்கு என்னுடைய உளப்பூர்வமான நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறுவார்கள். அதுபோலதான் இன்றைக்கு நமது சட்டமன்றத்திலே நடந்து கொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகளையெல்லாம்





கூர்ந்து கவனிக்கின்ற வேளையில், இனிய பல நல்ல செய்திகள் இருக்கின்றபோதும், அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளைத் தடை செய்வது போன்ற பல்வேறு வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கின்றன. இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த அளவிலே, இங்கு குறிப்பிடுகின்றவர்கள், பக்கங்கள்தான் கூடியிருக்கிறது என்று சொல்கின்ற ஒரு நிலையில், என்னைப் பொறுத்த அளவில் இந்த உரையிலே பக்கங்கள் மட்டும் கூடவில்லை; மக்களினுடைய நலத் திட்டங்கள் வரிசையும் கூடியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் உண்மையான நிகழ்ச்சி. எனவே, நமது அன்பர்கள் சுவையான பல செய்திகள், இனிய கனிகளாக பல்வேறு செய்திகள் மக்களுக்கு இருக்கின்றபோது அந்த நல்ல கனிகளைப் பருகுவதற்குப் பதிலாக காய்களை உண்கின்ற நிலையை நாம் இங்கு காண்கின்றபோது உண்மையிலேயே அதற்காக வருந்தவேண்டிய ஒரு சூழல் இருக்கிறது. ஜனநாயக நாட்டிலே தேர்தல்கள் வரலாம், அந்தத் தேர்தல்களிலே மிகப் பெரிய தலைவர்களுக்குக்கூட சில நேரங்களிலே சறுக்கல்கள் ஏற்படுவது வாடிக்கை. அந்தச் சறுக்கல்கள், இன்றைக்குத் தமிழக மக்கள் இதயங்களில் எல்லாம் என்றைக்கும் சிம்மாசனம் அமைத்து வீற்றிருக்கின்ற பேரறிஞர் அண்ணா பெருந்தகைக்குக்கூட வந்தது உண்டு. பெருந்தலைவர் காமராஜருக்கு ஏற்பட்டது உண்டு. அன்னை இந்திரா காந்தி அவர்களுக்குக்கூட ஏற்பட்டது உண்டு. ஆனால் அவர்கள் எல்லாம் இன்றைக்கும் மக்களுடைய மனங்களிலே நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதுபோல, இன்றைக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள், அவர் செய்திருக்கின்ற இந்த ஆற்றல் மிகுந்த செயல்களால், தமிழகத்திற்கு அவர்கள் கடந்த 4 ஆண்டுகளாக ஆற்றியிருக்கின்ற அந்த அருந்தொண்டுகளால், வருகின்ற காலத்தில் தமிழக மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெறுகின்ற ஒரு சரித்திர நாயகியாக இருப்பார்கள் என்பதிலே எனக்கு எள்ளளவும் ஐயப்பாடு இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–25*

கடந்த *2001* ஆம் ஆண்டிலே இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, இந்த அரசு சந்தித்திருக்கின்ற சோதனைகளும், வேதனைகளும், சவால்களும் கொஞ்சநஞ்சமல்ல. கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ச்சியான வறட்சி. அந்த வறட்சியின் காரணமாகத் தமிழகம் ஒட்டுமொத்தமாக பாதிக்கின்ற நிலை. எங்கு பார்த்தாலும் குடிநீர் இல்லை என்கின்ற பிரச்சினை. ~~மக்களுக்கு~~ உணவு இல்லை என்கின்ற தட்டுப்பாடான ஒரு

சூழ்நிலை. இவற்றையெல்லாம் எவ்வளவு ஆற்றலோடும், திறமையோடும் இந்த அரசு சந்தித்து, தண்ணீர் இல்லை என்று குடங்களைத் தூக்கிக்கொண்டு பெண்கள் சாலைகளுக்கு வருகின்ற நிலை இல்லாத அளவிற்கு அதைச் சாமர்த்தியமாக சமாளித்திருக்கிறது என்று சொன்னால், அந்த அரசினுடைய சாதனைகளை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மக்கள் குடிநீர்ப் பற்றாக்குறையின் காரணமாக அல்லலுறுகின்ற நேரத்திலே புதிய வீராணம் திட்டம் ஒரு செயலற்ற திட்டமாக, செயல்படுத்த முடியாத ஒரு திட்டமாக இருக்கும் என்று இந்தச் சட்டப் பேரவையிலே ஏற்பட்ட சவால்களையெல்லாம் சந்தித்து அந்தத் திட்டத்திலே வெற்றிகண்டு, இன்றைக்கு சென்னை மக்கள் குடிநீர் அருந்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது அந்த அரசினுடைய சாதனை என்று நாம் பாராட்டவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல அதற்குப் பின்னால் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே ஏற்பட்ட சுனாமிப் பேரலை ஒரு 5 நிமிட நேரத்திலே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளையும் மயானங்களாக ஆக்கியிருக்கின்ற அந்த நிலைமையை, இந்த அரசு எப்படியெல்லாம் சீராக, சிறப்பாகக் கையாண்டு, அதன்மூலமாக உலக நாட்டுத் தலைவர்கள் எல்லாம், பில் கிளிண்டன் போன்றவர்கள் எல்லாம் வந்து பார்த்துச் சென்று பாராட்டுகின்ற ஒரு நிலையைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த அவையிலே இருக்கின்ற நாம் அனைவரும் உணருவோம். அதற்குப் பின்னால், இந்த 4 ஆண்டுகள் வறட்சிச் சோதனை. சுனாமியிலே சற்றுத் தெளிவுபெற்று நிமிர்ந்து நிற்கின்ற நேரத்தில் மழை என்று வந்தது. மழை நமக்கு வேண்டியதுதான். இருந்தாலும் அது தேவைக்கு அதிகமாகப் பொழிந்துவிட்ட காரணத்தால் ஏற்பட்ட சேதங்கள், எண்ணற்ற அளவிற்கு, 22 மாவட்டங்களைப் பாதிக்கின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலை. பல்வேறு இடங்களிலே சாலைகள் உடைக்கப்பட்டன; பல்வேறு பாலங்கள் உடைக்கப்பட்டன. அந்தப் பாலங்கள் உடைக்கப்பட்டதிலேகூட சில சர்ச்சைகள் வந்திருக்கின்றன. அந்தச் சர்ச்சைகளுக்கு நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே விளக்கம் பெறுவதற்குக் கடமைப்பட்டவனாக இங்கே இருக்கிறேன். அந்தப் பெருமழையின் காரணமாக அமராவதி ஆற்றிலே ஏற்பட்ட வெள்ளத்தால் ஒரு பாலம் உடைக்கப்பட்டது. அதை நாங்கள்கூட எங்களுடைய குழுவின் சார்பிலே சென்று பார்த்தோம். அந்தப் பாலம் உடைக்கப்பட்டதற்கு இந்த அரசு அதற்குரிய நடவடிக்கைகளை



மேற்கொண்டிருக்கின்ற நேரத்தில் எதிர்க் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். இந்தப் பாலம் உடைக்கப்பட்டதற்கு இந்த அரசு ஏற்படுத்தியிருக்கின்ற நிலையினை, "சட்டத்தின் வாயிலாக நான் அணுகுவேன்" என்று சொன்னதோடு, "அதே நேரத்திலே இந்த ஆட்சியிலே கடலூர், சிங்காரத்தோப்பில் கட்டப்பட்டிருக்கின்ற பாலம் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றது; நாகப்பட்டினம் அருகிலே ஒரு கோடி ரூபாய்க்குக் கட்டப்பட்டு இருக்கின்ற பாலம் வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றது; அக்கரைப்பேட்டை பாலம் காணாமல் போய் இருக்கின்றது; இராமநாதபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட தொழுவலூர்–காரையேந்தல் பாலம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றது; திருவள்ளூர் மாவட்டத்திலே இலட்சுமிபுரத்திலே கட்டப்பட்ட பாலம் வெள்ளத்தில் கரைந்திருக்கிறது; அதற்கெல்லாம் என்ன நீதி விசாரணை நடத்தப்படப் போகிறது?" என்கின்ற ஒரு கேள்வியினை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் அமராவதி ஆற்றின் குறுக்கே தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பாலம், கட்டி முடிக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் சேதமுற்ற காரணத்தால் இதுகுறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்று நான் கூறியவுடன் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி வழக்கம்போலவே, "என் ஆட்சியில் கட்டிய பாலம்தான் சேதம் அடைந்ததா?" என்று லாவணி பாடி "அந்தப் பாலம் என்ன ஆயிற்று? இந்தப் பாலம் என்ன ஆயிற்று?" என்று ஐந்து குற்றச்சாட்டுகளை எழுப்பியிருந்தார். அதைப்பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் இப்போது கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கான பதிலை இந்த அவை வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

முதலில், கடலூர் மாவட்டம், சிங்காரத்தோப்பில் கட்டப்பட்ட பாலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். "கடலூரில், சிங்காரத்தோப்பில் 6 கோடி ரூபாய் செலவில் பாலம் கட்டப்பட்டபோதே அது கடலில் விழுந்து உடைந்தது" என்பது திரு. கருணாநிதி அவர்களது முதல் குற்றச்சாட்டு. கடலூர் மாவட்டத்தில், சிங்காரத்தோப்பு அருகில்,

உப்பனாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி 24-9-2000 அன்று தொடங்கப்பட்டது. அதாவது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான். திரு. கருணாநிதி கூறியதுபோல் அதன் மதிப்பீடு 6 கோடி ரூபாய் அல்ல. இந்தப் பாலம் கட்ட ஆன செலவு 4.07 கோடி ரூபாய்தான். மொத்தம் 15 கண்கள் கொண்ட bow string girder, அதாவது வில் நாண் அமைப்புடைய இப்பாலம், கடலுக்கு அருகில் அலைகள் தொடுகின்ற அளவில் அமைந்துள்ளது. இதில் அதிகமான அகலம் கொண்ட நான்காவது கண் கட்டுமானத்தின்போது கடலில் எழுந்த உயர் அலைகளால் centering arrangement--கட்டுமானத்தின்போது கொடுக்கப்படும் முட்டு-- 28-8-2003 அன்று சேதமுற்றது. இதனால் மேல்தளம் முழுமையாக முடியும் முன்பே குறுக்குத் தொங்கல் cross girders சரிந்தது. இது கட்டுமானத்தின்போதே நடந்த நிகழ்வு என்பதால் ஒப்பந்தக்காரர், தானே பொறுப்பேற்று தனது சொந்த செலவில் மேற்கண்ட மேல்தளத்தைத் திரும்ப அமைத்து, அந்தப் பாலத்தைக் கட்டி முடித்தார். 4 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, 15-10-2004 அன்று மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது. திரு. கருணாநிதி, கடலில் விழுந்து உடைந்துவிட்டது என்று சொன்னாரே, அந்தப் பாலத்தின் வழியாகத்தான் சுனாமி அலை அடித்த நாளான 26-12-2004 அன்று அக்கரைப்பேட்டை, சிங்காரத்தோப்பு, சோனாங்குப்பம் பகுதிகளில் இருந்து சுமார் 5,000 பேர் காப்பாற்றப்பட்டார்கள் என்பதைக் குற்றச்சாட்டு கூறியோர் நினைவில் கொள்ளட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நாகப்பட்டினம் மாவட்டம், கல்லார் பாலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். "நாகப்பட்டினம் அருகே ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பாலம் ஒன்று, செப்டம்பர் 2004-இல் கல்லார் ஆற்றில் வெள்ளம் வந்ததால், கரைந்து காணாமலே போய்விட்டது" என்பது திரு. கருணாநிதி அவர்களின் குற்றச்சாட்டு.

முற்பகல் 11-35

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீச்சாங்குப்பம் வழியாக வடக்குப் பொய்யூரிலிருந்து அக்கரைப்பேட்டை செல்லும் சாலையில் 10 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணி, 18-7-2003 அன்று தொடங்கப்பட்டது. இந்தப் பாலம் வங்காள விரிகுடாவிலிருந்து 100 மீட்டர் தொலைவில் கடற்கழிப் பகுதியில் அதாவது Back Waters பகுதியில் கடுவையாற்றின் குறுக்கே அமைகிறது. இப்பணியோடு இணைந்து இதே சாலையில் வங்காள விரிகுடாவின் கடற்கழிப் பகுதியில்



கல்லார் ஊரின் அருகே 5 சிறு பாலங்கள் அமைக்கும் பணியும் மேற்படி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. இந்த 5 சிறு பாலங்களில் அடித்தள மட்டத்தில் முன்னேற்றத்தில் இருந்த 3 பாலங்களில் 2 பாலங்களின் அடித்தளம் 2004 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் சேதமடைந்தது. மேலும், இந்த 2 பாலங்களும் 26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமித் தாக்குதலில் சிக்கிப் பெரிதும் சேதமடைந்தன. இவ்விரு சிறு பாலங்களின் மதிப்பீட்டுத் தொகை 37.40 இலட்சம் ரூபாய்தானே தவிர, திரு. கருணாநிதி கூறியதுபோல ஒரு கோடி ரூபாய் அல்ல. இந்தச் சிறு பாலங்களின் அமைப்பிற்காக ஒப்பந்த நிறுவனத்திற்கு 16.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருந்தது. இத்தொகை அந்த நிறுவனத்திடமிருந்து திரும்பப் பெறப்பட்டு விட்டது.

சுனாமியின் காரணமாக வங்காள விரிகுடாவில் இப்பாலம் அமைந்துள்ள கடற்கழிப் பகுதியின் ஆற்றின் போக்கில் மாற்றம் ஏற்பட்டதுடன் கடலும் உள்நோக்கி வந்து விட்டது. எனவே, மேற்படி கடற்பகுதியின் மாற்றத்திற்கேற்ப அப்பகுதியில் ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த 5 சிறு பாலங்களுக்குப் பதிலாக 24.60 மீட்டர் நீளமுள்ள 2 கண்கள் கொண்ட ஒரு பாலத்தை ஒரு கோடியே 57 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட வடிவமைப்பும், மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஆக, அந்தப் பகுதியில் உள்ள காகங்கள் காலையில் எழுந்து கரைகின்றனவே தவிர, பாலம் எதுவும் கரையவில்லை என்பதைக் குற்றஞ்சாட்டியோருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவதாக, நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டை பாலத்தைப் பற்றி குற்றஞ்சாட்டியிருக்கிறார். அக்கரைப்பேட்டை பாலம் ஒன்று அவ்வாறுதான் அடித்துச் செல்லப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பாவம் திரு. கருணாநிதி. அக்கரைப்பேட்டையில் அமைக்கப்பட்டுவரும் பாலத்தில் எவ்விதச் சேதமும் ஏற்படவில்லை என்பதும், மேற்படி பாலம் மிகவும் சிறப்பான முறையில் கட்டப்பட்டு வருகிறது என்பதும், இந்தப் பாலப் பணி முடிவுறும் தருவாயில் இருக்கிறது என்பதும் அவருக்குத் தெரியாதுபோல் இருக்கிறது. இந்த உண்மைகளை இப்போதாவது அவர் தெரிந்து கொள்ளட்டும்.

நான்காவதாக, இராமநாதபுரம் பாலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இராமநாதபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட தொழுவலூர்-காரையேந்தல் கிராமங்களுக்கு இடையே உள்ள ஆற்றில் சுமார் 2 கோடி ரூபாய் செலவில்

பாலம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவுக்குத் தயாராகும் நிலையில் அந்தப் பாலம் இடிந்து உடைந்து விட்டது என்று கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. இதுகுறித்த உண்மை நிலை என்ன என்பதை இப்போது எடுத்துக் கூறுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதியில், இராமநாதபுரம்–நயினார்கோயில் சாலையிலிருந்து தொழுவலூர்–காரையேந்தல் வழியாகக் குமரியேந்தல் செல்லும் சாலையில் ஒரு கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணி 29–9–2004 அன்று தொடங்கப்பட்டது. 20–11–2005 அன்று வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் இப்பாலத்தில் தொழுவலூர் பக்க அணுகு சாலையில் 30 மீட்டரும், காரையேந்தல் பக்க அணுகு சாலையில் 40 மீட்டரும் சேதமுற்றது. பாலம் மற்றும் அணுகு சாலைகள் கட்டி முடிக்கப்படாத நிலையில் வெள்ளம் ஏற்பட்டதால் இந்தச் சிறு சேதம் ஏற்பட்டது. இந்தப் பாலம் இம்மாத இறுதிக்குள் முழுவதுமாகக் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாவதாக, திருவள்ளூர் மாவட்டம், இலட்சுமிபுரம் அணைக்கட்டு பற்றிக் குறிப்பிட்டார். திருவள்ளூர் மாவட்டம், இலட்சுமிபுரத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 5.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலம் வெள்ளத்தில் அப்படியே உடைந்து விட்டது என்ற ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், இலட்சுமிபுரத்தில் எந்த ஒரு பாலமும் கட்டப்படவில்லை. இலட்சுமிபுரத்தில் அணைக்கட்டு ஒன்றுதான் கட்டப்பட்டுள்ளது. இலட்சுமிபுரம் கிராம எல்லையில் ஆரணி ஆற்றின் குறுக்கே 1965 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அணைக்கட்டு 1994 ஆம் ஆண்டு முற்றிலுமாகச் சேதம் அடைந்தது. சேதம் அடைந்த பழைய அணைக்கட்டிற்கு 50 மீட்டர் மேற்புறம் 5.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அணைக்கட்டு கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள், 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவங்கப்பட்டு, 2005 ஆம் ஆண்டு முழுமையாக முடிக்கப்பட்டது. எனவே, இந்த அணைக்கட்டின் வழியாக 14–10–2005 அன்று முதல், தண்ணீர் திறந்துவிடப்பட்டு, இதன்மூலம், பயன்பெறும் பாசன ஏரிகள் முழு கொள்ளளவிற்கு நிரப்பப்பட்டன. ஆந்திர மாநிலத்தில் ஆரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பிச்சாட்டூர் நீர்த்தேக்கத்தில் 4–12–2005 அன்று கரையை வெட்டி உபரி நீரை வெளியேற்றிய காரணத்தால், ஆரணி ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக பழைய அணைக்கட்டின் இடதுபுறக் கால்வாயின் சரிவில் அடுக்கப்பட்டிருந்த அலை கற்கள் (revetment) மட்டும் சரிந்து விழுந்தன.



கால்வாய் கரைக்குச் சேதம் ஏற்படாத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த வெள்ளப் பெருக்கால் புதிதாகக் கட்டப்பட்ட இலட்சுமிபுரம் அணைக்கட்டில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. தற்போதும், அணைக்கட்டில் முழு அளவிற்கு நீர் தேக்கப்பட்டுள்ளது.

எனவே, உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுக்களைக் கூறி மக்களைத் திசை திருப்ப முயற்சிக்க வேண்டாம் என்று இந்தக் குற்றச்சாட்டுகளைக் கூறியுள்ள திரு. கருணாநிதியை நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடலூர் சிங்காரத்தோப்பு பாலத்தைப் பற்றி இங்கே வாசித்தார்கள். அதிலேகூட சிங்காரத்தோப்பு, சோனாங்குப்பம், அக்கரைக்கோரி என்ற கிராமங்கள்தானே தவிர, அக்கரைப்பேட்டை என்பது கிடையாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அந்த மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்களினுடைய கோரிக்கைகளை என்னுடைய அன்புத் தலைவர் கலைஞர் ஏற்று, சிங்காரத்தோப்பிலே உப்பனாற்றிலே பாலம் கட்ட அனுமதித்து, 2000 ஆம் ஆண்டிலே அதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. கட்டுமானப் பணிகள் தொடங்கப்படுகின்றபோது 6 கோடி ரூபாய் அதற்கான estimate. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிவுற்ற பிறகு, அது 6 மாத காலம் நிறுத்தப்பட்டு, அதனுடைய மதிப்பீடு 4 கோடி ரூபாயாக குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டு, மீண்டும் கட்டுமானப் பணி தொடங்கியது. அ.தி.மு.க. காலத்தில் கட்டிய அந்தப் பகுதிதான் இடிந்து விழுந்தது. அதைத்தான் என்னுடைய தலைவர் கலைஞர் குறிப்பிட்டார் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் சொன்னார்கள். அந்தப் பாலத்தின் மூலமாகத்தான் பல பேர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்கிற விளக்கத்தைச் சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரத்தைப் பற்றியும், கும்மிடிப்பூண்டி பகுதியிலே ஒரு பாலத்தைப் பற்றியும் சொன்னார்கள். இராமநாதபுரத்திலே நடுக்காட்டு பாலத்தில் பாலம் அப்படியேதான்

இருக்கிறது. அணுகுசாலைதான் இருபுறமும் பழுதுபட்டது என்று சொன்னார்கள். கரூரிலே என்ன நிலைமை என்று கேட்டால், பாலம் அல்ல, அணுகுசாலைதான் பழுதுபட்டிருக்கிறது. இரண்டாவது, அது B.O.T. மூலம் கட்டப்பட்டது. உடனே இந்த அரசு என்ன செய்திருக்கவேண்டும்? யார் B.O.T. மூலம் கட்டினார்களோ அவர்கள்தான் பழுதுபார்க்க வேண்டும்; செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் ஏற்றுக்கொள்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட சில கேள்விகளுக்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** எப்படி சிங்காரத்தோப்பிற்கு அவரே ஏற்றுக்கொண்டாரோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில கேள்விகளுக்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** Right. எப்படி சிங்காரத்தோப்பை ஏற்றுக்கொண்டாரோ, அப்படியே அதற்காக வசூல் செய்கிற அந்த B.O.T. மூலம் கட்டியவரைக் கூப்பிட்டு அவரையே வேலை செய்யச் சொல்லியிருந்தால் ஒரு வாரத்திலே முடித்திருப்பார். ஆனால், இதை அரசியலாக்க வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் போனார் என்பதற்காகப் போய், உடனே இதன்மீது விசாரணை என்று சொல்லிவிட்டு, இப்போது நான் கேட்கிறேன். அதை B.O.T. மூலம் கட்டிவிட்டுப் போனவர்களுக்கு என்ன பண்ணினீர்கள்? அவர்கள் மேலே என்ன action எடுத்தீர்கள்? அவர்கள் மேலே action எடுக்கவில்லை. கலைஞர் மேலே action எடுப்பது, அல்லது இதற்கு ஒரு பரிகாசம் காட்டுவது. ஒரு முதலமைச்சர் பார்த்து அணுகுசாலை போயிருந்தால், கூப்பிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசும்போது விரிவாகப் பேசுங்கள். ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசும்போது இதைப் பற்றிப் பேசுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திரு. சந்தானம் அவர்கள் வைத்த சில கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். மற்ற பிரச்சினைகள் ஏதாவது பேசுவதாக இருந்தால் நீங்கள் ஆளுநர் உரை மீதான விவாதத்திலே பேசுங்கள். திரு. சந்தானம், பேச்சைத் தொடரலாம். (குறுக்கீடுகள்)



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள், கடலூர் மாவட்டத்தில் இருக்கின்ற சிங்காரத்தோப்பில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு கட்டிய பகுதிதான் இடிந்து விழுந்தது என்ற தவறான, உண்மைக்குப் புறம்பான செய்தியை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இங்கு அந்தப் பாலம் கட்டியதன் விவரங்களையும் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பாலத்தினுடைய கட்டுமானப் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஒவ்வொரு கண்ணாக கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டு வந்தது. நான்காவது கண் கான்கிரீட், முதல் நாள் இரவில் போட்டு முடித்திருந்த வேளையில், அந்தப் பகுதியினுடைய கடல் அலை அதிகமாக இருந்ததன் காரணமாக அந்தப் பாலத்திற்கு முட்டுக் கொடுத்திருந்த அத்தனைக் கம்பங்களும் சரிகின்ற ஒரு சூழ்நிலை, மிக அதிகமான கடல் அலைகள் ஏற்பட்டதனால், கான்கிரீட் சரிந்ததேயொழிய, கட்டுமானப் பணி முடிந்ததற்குப் பின்னால் அந்தப் பாலம் சரியவில்லை என்பதை நான் இந்த அவையில் விளக்கிக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்குப் பின்னால் அவை சரிசெய்யப்பட்டு, இன்றைக்குப் பாலம் உறுதியாகவும், தரமுள்ளதாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம், பேச்சைத் தொடருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கருத்து. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்து. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்...

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த தெளிவான விளக்கத்திற்கு என்னுடைய நன்றியினைத்

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு தீமையிலும்கூட, கரூர் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு ஒரு மிகப் பெரிய நன்மையை நமது முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அந்தப் பாலம் உடைந்த காரணத்தினால், அதைச் செப்பனிடுகின்ற பணியினை அரசே ஏற்றுக்கொண்டு, அங்கு வாகனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சுங்க வரி வசூலை உடனடியாக நிறுத்தும்படியாக ஓர் ஆணையிட்டதன்மூலமாக, அந்தப் பகுதியிலே இருக்கின்ற அத்தனை மக்களும் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இன்றைக்கு இந்த அரசு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்போது கூறியதற்கும், அவரது தலைவர் முன்னாள் முதலமைச்சர் கூறியதற்கும் வேறுபாடு இருக்கிறது. தி.மு.க. தலைவர், கடலூரில், சிங்காரத்தோப்பில் 6.00 கோடி ரூபாய் செலவில் பாலம் கட்டப்பட்டபோதே, அது கடலில் விழுந்து உடைந்தது என்று கூறியிருக்கிறார். ஆகவே, இப்போது அந்தப் பாலமே இல்லை. அது விழுந்து உடைந்துவிட்டது என்பதுபோல அவர் கூறியிருக்கிறார். ஆனால், 26–12–2004 அன்று சுனாமி அலைகள் தாக்கியபோது, அந்தப் பாலத்தின் வழியாகத்தான் 5,000 பேர் காப்பாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சொல்லிவிட்டார்கள் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பினை ஏற்கின்றபோது, எப்படிப்பட்ட கடுமையான நிதி நெருக்கடிகளை எல்லாம் சந்தித்திருந்தது என்பதைத் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மக்களும் அறிவார்கள். (குறுக்கீடுகள்) நான்கூட மிக ஆச்சரியத்தோடும், வியப்போடும் பார்க்கிறேன். கடந்த காலத்திலேயிருந்த நிதி நெருக்கடியை எல்லாம் சமாளித்து, எப்படி இந்த அரசு இப்படி பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிறது என்று எண்ணிப் பார்க்கின்றபோது, (குறுக்கீடுகள்) எண்ணிப் பார்க்கின்றபோது, கடந்த காலங்களிலேதான் — நமது மணிமேகலை காவியத்திலே நான் அறிந்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) — எடுத்து வழங்க, வழங்கக் குறையாத



அட்சயப்பாத்திரம் ஒன்று ஆபுத்திரன் கையிலே இருந்தது என்பதனை நான் வரலாற்றிலே படித்திருக்கிறேன். அந்த அட்சயப்பாத்திரம் மணிமேகலையினுடைய கைக்கு வந்து, இப்போது தமிழகத்தை ஆட்சி செய்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய கைக்கு வந்திருக்கிறதோ (மேசையைத் தட்டும் ஒலி) என்று எண்ணுகின்ற அளவிற்கு (குறுக்கீடுகள்) அள்ள அள்ள, (கூச்சல்–குழப்பம்) தமிழக மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை வாரி வாரி வழங்க வழங்கக் குறையாத நிலை ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சட்டமன்றத்தின் பொது நடைமுறை விதிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, ஒழுங்கற்ற சொற்களாலோ," – நீங்கள் பயன்படுத்துகிறமாதிரி – "அல்லது கூச்சலாலோ" – நீங்கள் பயன்படுத்துகிறமாதிரி, – "அல்லது முறையற்ற வேறு வகைகளிலோ அவரை இடைமறித்தல் கூடாது". உட்காருங்கள். திரு. சந்தானம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நடப்பது விதிக்குப் புறம்பானது. சட்டமன்ற விதிகளுக்குப் புறம்பானது. (குறுக்கீடுகள்) திரு. சந்தானம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) திரு. சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்–குழப்பம்) இந்த அரசு... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தின் நடவடிக்கைகளைக் குழப்புகிற வகையில் கூச்சலிடக்கூடிய உறுப்பினர்களை அவையைவிட்டு அகற்றவேண்டிய நிலைமை வரும் என்று எச்சரிக்கிறேன். (கூச்சல்–குழப்பம்) சட்டமன்றத்தின் நடவடிக்கைகளைச் சீர்குலைக்கின்ற வகையில், வேண்டுமென்றே, திட்டமிட்டு குழப்பம் விளைவிப்பதற்காகவே வரவேண்டும் என்று வந்து குழப்பம் விளைவித்துக் கொண்டிருக்கின்ற உறுப்பினர்களை, அவையைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்கிற நிலைமை வரும் என்று நான் எச்சரிக்கிறேன். (கூச்சல்–குழப்பம்) மறுபடியும் சொல்கிறேன். ஒரு மூத்த உறுப்பினராக இருந்தும், பொறுப்பற்ற முறையிலே நடந்துகொள்ளக்கூடிய திரு. துரைமுருகனும் சரி, மற்றவர்களும் சரி, அவையைக் குழப்புகிற இந்த முயற்சியைத் தடுப்பதற்காக உங்களை வெளியேற்றவேண்டுமென்ற நிலைமை வரும் என்று எச்சரிக்கிறேன். (கூச்சல்–குழப்பம்) குழப்பம் விளைவிக்கிற உறுப்பினர்களை அவையைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

[2006 ஜனவரி 19

முற்பகல் 11–50

**திரு. துரைமுருகன்:** சபாநாயகர் அவர்களே...(கூச்சல்–குழப்பம்)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தரமற்ற வார்த்தைகளை, தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துவார்களேயானால், அந்தத் தரக்குறைவான வார்த்தைகளை நாங்களும் பயன்படுத்துவதற்கு நேரமாகிவிடாது என்பதை மட்டும் அவர்களுக்கு எச்சரித்துக் கொள்கிறேன். (கூச்சல்–குழப்பம்) இந்தக் கூச்சலுக்கெல்லாம் நேதாஜி அவர்களையும், தேவர் அவர்களையும் தலைவராகக் கொண்டிருக்கின்ற எங்களைப் போன்றவர்கள் நிச்சயமாக அஞ்சமாட்டார்கள்; பயப்படமாட்டார்கள். உங்கள் கூச்சலைக் கண்டு நாங்கள் ஒதுங்கிப் போகிறவர்கள் அல்லர் என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்முறையாக சந்தானத்திற்குக் கோபம் வந்ததை நான் இன்றைக்குத்தான் பார்க்கிறேன். (கூச்சல்–குழப்பம்)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்றைக்குச் சட்டமன்றத்திலே ஒருவனாக இருந்தாலும், எனக்குப் பின்னால் கோடானுகோடி மக்கள் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும். (கூச்சல்–குழப்பம்) அதை வருகின்ற காலம் அவர்களுக்குப் பதில் சொல்லத்தான் போகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூச்சல் போடக்கூடிய உறுப்பினர்களை அவையைவிட்டு உடனே அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்)

**திரு. லா. சந்தானம்:** எதிர்க்கட்சி நண்பர்கள் நீங்கள் எல்லாம் தயவுசெய்து இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எந்தத் தவறான கருத்துகளையும் நான் சொல்லவில்லை. அப்படி இருக்கும்போது தரக்குறைவான வார்த்தைகள் "போடா, வாடா" என்று உபயோகப்படுத்துவார்களேயானால், அது நன்றாக இருக்காது. (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் பேசுங்கள். (கூச்சல்–குழப்பம்) திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடுகள்)



2006 ஜனவரி 19]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி உட்கார்ந்துகொண்டு சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூச்சல் போடுகிற உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். கூச்சல் போட்டு குழப்பம் விளைவிக்கிற திரு. துரைமுருகன் அவர்களை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு நா. வீராசாமி, சொல்லுங்கள், சொல்லுங்கள். (கூச்சல்–குழப்பம்) திரு. ஆற்காடு நா. வீராசாமி.

(உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், அவைக் காவலர்களால் அவையைவிட்டு வெளியேற்றப்பட்டார்.)

*** திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல —அவர் ஒரு மூத்த உறுப்பினர் —அவரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் யாரும் "போடா, வாடா" என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசவில்லை, நீங்கள் பேசவில்லை. போன உறுப்பினர்கள் பேசியது அவர் காதில் விழுந்ததைத்தான் அவர் சொல்கிறார். (குறுக்கீடு) நீங்கள் பேசவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அப்படிச் சொல்லியிருந்தால் அதற்காக நான்கூட வருத்தப்படுகிறேன். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் பேசுங்கள். அப்படிச் சொல்லியிருந்தால் மன்னிப்புக் கேட்கிறேன் என்று திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சொல்கிறார்.

**திரு. லா. சந்தானம்:** உண்மையிலே அந்தப் பெருந்தன்மைக்காக மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** இந்த அரசு பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதை தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் அனைவரும் நன்றாகவே அறிந்திருக்கிறார்கள். எந்த அரசும் செய்யாத அளவிற்கு

இந்த அரசினுடைய சாதனைகள் ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்றடைந்திருக்கிறது என்பதற்கு உதாரணம், தமிழகத்திலே இருக்கின்ற எந்த இல்லத்திலாவது பள்ளிக்குச் செல்லாத குழந்தைகள் என்று இருக்கமுடியாது. எனவே, தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை இல்லங்களிலுமுள்ள அந்தக் குழந்தைகளுக்கு இந்த அரசின்மூலமாக வழங்கப்பட்ட இலவசப் பாடப் புத்தகங்கள் சென்றடைந்திருக்கின்றன. எனவே, இந்த அரசினுடைய சாதனைகள், ஒவ்வொரு இல்லத்தினுடைய வாசல்களிலும் ஒளிந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) அது அந்தக் குழந்தைகளுடைய படிப்புக்கு உதவியாக இருந்தாலும்கூட அந்தப் பெற்றோர்களுடைய சுமையை, அவர்கள் அந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கு வாங்கித் தருகின்ற புத்தகங்களுடைய விலையை, அவர்கள் வழங்குகின்ற அந்தப் பணத்தை மீதப்படுத்துகின்ற அளவுக்கு அந்தப் பெற்றோர்களுடைய இதயங்களையும் குளிரச் செய்திருக்கிறது என்பதன்மூலமாக இந்த அரசு தமிழகத்தில் இருக்கின்ற அத்தனைப் பெற்றோர்களினுடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. நான் வியப்போடு பார்க்கிறேன்.

*முற்பகல் 11–55*

இன்றைக்கு எல்லா மாணவ, மாணவிகளுக்கும் சைக்கிள் வழங்குகின்ற திட்டம், அதை அந்த ஆசிரியர்கள் எங்களிடத்திலே சொல்லுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் உடனடியாக வந்து வழங்கிவிட்டுச் செல்லுங்கள், காரணம் அங்கு அந்த மிதி வண்டிகளை வைப்பதற்குக்கூட இடம் இல்லாத அளவிற்கு அத்தனை மிதி வண்டிகளை இந்த அரசு வழங்கியிருக்கிறது; (மேசையைத் தட்டும் ஒலி) எனவே தயவுசெய்து இன்றைக்கே வந்து வழங்கிவிடுங்கள் என்று சொல்லுகின்ற ஒரு நிலை. இன்றைக்கு எல்லாப் பள்ளிகளிலும் எல்லா மாணவ, மாணவிகளுக்கும் வழங்கப்பட்டதன்காரணமாக எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் எங்களைப் போன்றவர்கள், கிராமத்திலே வசிக்கின்றவர்கள், ஒவ்வொரு கிராமத்திலும் பார்க்கிறோம், அங்கு மிதி வண்டிகள் நிற்கிறது என்று சொன்னால் அது அரசின்மூலமாக வழங்கப்பட்ட மிதி வண்டிகளாகத்தான் அங்கு நின்று கொண்டிருக்கிறது. எனவே, அந்தச் சாதனைகள் இன்றைக்கு மக்கள் மனதிலே ஆழப் பதிந்திருக்கிறது.

உழவர் பாதுகாப்புத் திட்டம். இங்கு சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட அந்தத் திட்டத்தை அறிவிக்கின்றபோது அதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை; அந்தத் திட்டம் செயல்படுமா; இந்த அரசு சொல்லுகின்ற திட்டங்கள் எல்லாம் ஏட்டளவிலேதான்



ருக்கும்; அது செயலுக்கு வருமா என்று கேட்டவர்கள், நிச்சயமாக வர்களுக்கு மனசாட்சி இருந்தால், அவர்கள் தங்களுடைய ள்ளங்களையே, மனசாட்சியையே திரும்பிப் பார்க்க நான் கட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தின் பயன், இன்றைக்கு ஒவ்வொரு ாவட்டத்திலும் அந்த விவசாயிகளுக்கு சென்று அடைந்து காண்டிருக்கிறது என்பதை நாங்கள் கண்கூடாகப் பார்க்கிறோம். மசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மதுரை மாவட்டத்தில்கூட சன்ற வாரத்திலே பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்து, ுந்தத் திட்டத்தை வழங்குகின்றபோது முதலாவதாக தன்னுடைய கள் திருமண உதவியாக ரூபாய் ஐயாயிரத்தைப் பெற்றவர், திராவிட ன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் என்பதை நான் ுவருக்கே குறிப்பெடுத்துக் காட்டினேன். (மேசையைத் தட்டும் ஒலி) ுந்தத் திட்டத்தின்மூலமாக அன்றைக்கு ஏழு இலட்சம் ரூபாய் ழங்கப்பட்டது.

இன்றைக்கு அந்தத் திட்டம் எப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது? ]ன்றைக்கு அந்தத் திட்டத்தின்மூலமாக கோடிக்கணக்கான விவசாய க்கள் பயன்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் எல்லாம் ]ன்றைக்கு இந்த அரசைப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; பாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

அதுபோல மருத்துவமனைகள். கிராமப்புறங்களாக இருந்தாலும் சரி, கர்ப்புறங்களாக இருந்தாலும் சரி, அங்கு வருகின்ற அந்த ஏழை எளிய நோயாளிகள், மருந்து இல்லை, இங்கு வைத்தியம் சரியாக இல்லை ான்கின்ற நிலையையெல்லாம் போக்கி, எல்லா வகையான மருந்துகளும், மிக உயர்ந்த விலையுடைய மருந்துகள்கூட இன்றைக்குக் கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கின்ற அளவிலே இந்த அரசாங்கம்.... (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களைப் பேரவையில் கலந்துகொள்ள அனுமதியளித்து அழைக்குமாறு வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டிருக்கிறபோது திடீரென்று எதற்கு எழுந்து விவகாரத்தைக் கிளப்புகிறீர்கள் ? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்,

உட்காருங்கள். திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு இதற்கு முன்னால் நடந்த அவையினுடைய கூட்டங்களையெல்லாம் பார்த்திருக்கிறோம். அந்த அவைகள் எல்லாம் எவ்வளவு மரியாதையோடும், மாண்போடும் நடந்திருக்கின்றன என்ற வரலாறுகள் எல்லாம் உண்டு. மற்ற எந்தச் சட்டப் பேரவைக்கும் இல்லாத ஒரு வரலாறு தமிழகச் சட்டப் பேரவைக்கு உண்டு. அந்த அளவிற்கு ஒழுக்கம் நிறைந்த ஒரு சட்டப் பேரவையாக தமிழகத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட தமிழகத்தினுடைய சட்டப் பேரவையைத் தயவுசெய்து கொச்சைப்படுத்தாதீர்கள் என்று மட்டும் நான் கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நீங்கள் எதையெதைச் சொன்னாலும் சரி, எப்படியெல்லாம் கூச்சல் போட்டாலும் சரி, ஒன்றை மட்டும் நான் இந்த அவையிலே சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

*நண்பகல் 12-00*

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அனுமதியில்லாமல் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லாமல் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அனுமதியில்லாமல் பேசக்கூடாது, உட்காருங்கள், உட்காருங்கள். திரு. சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்

தமியர் உண்டலும் இலரே; ...

... ... ... ...

அன்ன மாட்சி அனைய ராகித்

தமக்கென முயலா நோன்றாள்

பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!"



என்பது நமது சங்க இலக்கியங்களிலே சொல்கின்ற வாசகங்கள். உண்பதற்கு அருமையான, இளமை, முதுமை, இறப்பே இல்லாத அமிழ்தம் கிடைப்பதாக இருந்தாலும், அது இனிதானது என்று தானே உண்டு மகிழாது, மக்களுக்கு... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் நடவடிக்கைகளுக்குக் குழப்பம் விளைவிக்காதீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். திரு. சந்தானம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்களுக்கு எவ்வளவு நாகரிகம் தெரியும் என்பது எனக்குத் தெரியும். அன்றைக்கு உங்களைப் பேசவிடாமல், நான் உட்கார வைத்ததற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று, மீண்டும் மீண்டும் இரண்டு முறை பேச வைத்தேன். இரண்டு முறை பேசியபோதும், தனிப்பட்ட முறையில் முதலமைச்சரையே தாக்கிப் பேசினீர்கள். உங்களுடைய நாகரிகம், உங்களுடைய பண்பாடு எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும். தயவுசெய்து உட்காருங்கள். குழப்பம் விளைவித்தால் அவையைவிட்டு நான் வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெறாமல், எழுந்து நின்று பேசினால் அவையைவிட்டு வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். மாண்புமிகு திரு. சந்தானம், பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுடைய தலைவருடைய கட்டளையை ஏற்று, மீண்டும் அவைக்குள்ளே வந்து, குழப்பம் விளைவிக்க வேண்டும் என்கின்ற வகையிலே, குழப்பம் விளைவித்துக்கொண்டிருக்கிற தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் அவையைவிட்டு அகற்ற வேண்டுமென்று கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்) தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் அவையைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று கட்டளையிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இவ்வளவு நேரமும் நீங்கள் பார்த்துக்கொண்டிருந்தீர்களா, இல்லையா? நீங்கள் பார்த்துக்கொண்டிருந்தீர்களா, இல்லையா, இவ்வளவு நேரம்? கூட்டணிக் கட்சி என்பதற்காக எதை வேண்டுமானாலும் நீங்கள்

ஆதரித்துப் பேசக்கூடாது. அவையின் மரபுகளைச் சீர்குலைக்கிற எதையும் ஆதரித்துப் பேசவேண்டும் என்கிற முடிவிற்கு நீங்கள் வரக்கூடாது. இது ஒன்றும் கூட்டணிக் கட்சிக்கு அழகல்ல. (கூச்சல்–குழப்பம்) தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் அவையைவிட்டு அகற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்குக் கட்டளையிடுகிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)*

திரு. சந்தானம், பேச்சைத் தொடருங்கள். (கூச்சல்–குழப்பம்) திரு. சந்தானம், பேச்சைத் தொடருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்ற வேண்டாம் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து, பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி, அநாகரிகமான போக்கிற்குத் தயவுசெய்து வக்காலத்து வாங்காதீர்கள். அநாகரிகமாக நடக்கக்கூடிய போக்கிற்குத் தயவுசெய்து, கூட்டணி என்கின்ற காரணத்திற்காக வக்காலத்து வாங்காதீர்கள். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், பேசுங்கள். (குறுக்கீடு) சந்தானம், பேசுங்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker Sir, I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஞானசேகரனுக்கு அனுமதி கொடுக்கவில்லை. தயவுசெய்து உட்காருங்கள். பேரவைத் தலைவருடைய அனுமதியை வாங்காமல் பேசக்கூடாது. பேச உங்களை அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். திரு. சந்தானம், பேசுங்கள்.



பிற்பகல் 12–05

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றை மட்டும் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். நமது சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளதுபோல ,

"உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; ...
... ... ... ...
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!"

என்று சொல்வார்கள். இந்த உலகம் இப்படிப்பட்ட தீமைகளை எல்லாம் தாங்கிக் கொண்டு அழியாமல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு இளமை, முதுமை என்கின்ற நிலை இல்லாது சாகா வரத்தைத் தருகின்ற அமிழ்தத்தைத் கொடுப்பதாக இருந்தாலும், அதைத் தானே அருந்தி மகிழ வேண்டும் என்கின்ற எண்ணம் இல்லாது, பிறருக்குப் பிரித்துக் கொடுத்து, பிறருக்காக வாழுகின்ற எண்ணம் உடைய பலர் இருக்கின்ற காரணத்தினால்தான் இந்த உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதுபோல, இன்றைக்கு தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் தனக்குக் கிடைக்கின்ற அத்தனைச் செல்வங்களையும் தமிழக மக்களுக்குக் கொடுத்து, அந்த மக்கள் மகிழ வேண்டும் ( மேசையைத் தட்டும் ஒலி ) "என் கடன் பணி செய்து கிடப்பதே"; "யான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம்" என்கின்ற அளவிற்கு, தனக்குக் கிடைக்கின்ற அத்தனையும் தமிழக மக்களுக்குக் கொடுத்து மகிழ்கின்ற ஒரு ஆற்றல் மிக்க தலைவியாக இருக்கின்றார்கள் என்பதை இன்றைக்கு மக்கள் பட்டித்தொட்டிகளில் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிள்ளை இருக்கிறாரா? பேரன்–பேத்திகள் இருக்கிறார்களா? இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற தமிழ் மக்கள்தானே அவருக்கு அத்தனையும், அத்தனையும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற நிலையை இன்றைக்கு அத்தனை கிராமங்களிலேயும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பேச்சுதான் வருகின்ற தேர்தலிலே புரட்சித் தலைவியை மீண்டும் இங்கு முதலமைச்சராக உட்கார வைக்கின்ற பேச்சாக மலர்ந்திருக்கிறது என்பதை

*மட்டும் சொல்லி, நீங்கள் எத்தனைக் கூச்சல் போட்டாலும், கூக்குரல் போட்டாலும், மக்கள் மனதிலே பதிந்திருப்பது புரட்சித் தலைவிதான் என்பதைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன் *(குறுக்கீடுகள்)* திரு. கே.என். இலட்சுமணன் *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order கேட்டேன்; கொடுக்கவே மாட்டேங்கிறீர்களே ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே point of order ஒன்றுமில்லை.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே.. *(குறுக்கீடுகள்)*

*(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம்—அவைத் தலைவர் அவர்கள் கூட்டத்தைத் தொடங்குவதற்குமுன்பு, எப்போதும்போல திருக்குறளை மேற்கோள் காட்டி, பேசுவது வழக்கம். அதுபோல, நேற்றைய முன்தினம் — இங்கே பேசுகின்றவர்கள் அவையின் நேரம், அவையின் சூழ்நிலை ஆகியவை அறிந்து பேசுவது இலக்கணம் என்று திருக்குறளை மேற்கோள் காட்டிச் சொன்னார்கள். அதற்குத் தகுந்தாற்போல இந்த அவையின் பொன்னான நேரத்தைக் கருதியும்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் திருக்குறளுக்கு விளக்கம்தான் எழுதுவார்கள். திருக்குறள்படி நடக்க மாட்டார்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** நான் அதைத்தான் சொல்ல வருகிறேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிக் கொடுத்ததை, எந்த அளவிற்கு எதிர்க்கட்சிக்காரர்கள் நிறைவேற்றுகிறார்கள் என்பதைக் காண்பதற்கு உண்மையிலேயே மிக வேதனையாக இருக்கிறது.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்திலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, நேற்றையதினம் மயிலாடுதுறை உறுப்பினர் மாண்புமிகு ஜெக. வீரபாண்டியன் அவர்கள் இந்த உரையிலே இருக்கின்ற அரசினுடைய சாதனைகள் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள். பாராட்டியும் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அதையே திருப்பித்



திருப்பிச் சொல்லாமல், இந்த கவர்னர் உரையிலே தமிழக அரசு கூறியிருக்கின்ற பல்வேறு திட்டங்கள் விடப்பட்டிருக்கின்றன என நான் இந்த அவையின்மூலம், அரசுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். விவசாயத் துறையிலே, ஆண்டு முழுவதும் விவசாயம் செய்வதற்கு வாய்ப்பில்லை. 6 மாதம் விவசாயம் செய்கிறார்கள். 6 மாதம் அவர்கள் வெறுமனே விவசாயத்திலே கிராமத்திலே இருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம் பெருக்கப்பட வேண்டுமென்றால் கூடவே குடிசைத் தொழில், கிராமத் தொழில்களை மேம்படுத்துவதற்கு மிக விரைவான, ஆழமான ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–10*

விவசாயிகளுக்கு வாஜ்பாய் அரசு இருந்தபொழுது, green cards — பச்சை கடன் அட்டைகள் — வழங்கி, கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு அதை வழங்கி விவசாயிகள் கடன் பெறுவதற்கு அரசு வங்கிகளிலே அந்த அட்டையைக் காட்டி கடன் பெறுவதற்குத் திட்டம் வகுத்து, நடைமுறையிலே கொண்டுவந்தார்கள். அதுபோல தமிழக அரசு விவசாயிகளுக்கு green cards – கடன் அட்டைகளை வழங்கி, அவர்கள் உரம் வாங்குவதற்கோ, விதையை, தானியங்கள் வாங்குவதற்கோ, டிராக்டர் வாங்குவதற்கோ அல்லது பொருளாக, ரொக்கமாக உதவி பெறுவதற்கோ, கடன் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். நாட்டிலே உற்பத்தி ஆகின்ற அத்தனைப் பொருள்களையும் உற்பத்தியாளர்கள் விலையை நிர்ணயம் செய்கின்றார்கள். சோப்பு தயாரிக்கின்ற தொழிற்சாலை சோப்பினுடைய விலையை நிர்ணயிக்கின்றது. கார் உற்பத்தி செய்கின்றவன் காரினுடைய விலையை நிர்ணயிக்கின்றான். பென்சிலைத் தயாரிக்கின்றவன் பென்சிலின் விலையை நிர்ணயிக்கின்றான். பேனாவைத் தயாரிக்கின்றவன் பேனாவின் விலையை நிர்ணயிக்கின்றான். ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்கிற விலையை அவனால் நிர்ணயிக்க முடியவில்லை. ஆகையினால்தான், விவசாயத் துறையிலே வறுமை என்றென்றும் தாண்டவம் ஆடுகின்றது. ஆகவே பாரதிய ஜனதா கட்சியின் சார்பிலே நான் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளுக்கு விலையை நிர்ணயம் செய்கின்ற உரிமை கொடுக்கப்பட வேண்டும்; அமலுக்குக் கொண்டுவர வேண்டும். எப்படிக் கொண்டுவருவது என்றால், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் விவசாயிகள் உற்பத்தி செய்கிற உணவுப் பொருள்களுடைய விலை நிர்ணயக் குழு,

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே, இரண்டு பெரிய விவசாயிகள், இரண்டு குறு விவசாயிகள் அடங்கிய ஐவர் குழு நியமிக்கப்பட்டு, அவர்கள் அந்தந்த மாவட்டத்திலே எந்த விலை கட்டுப்படியாகிறது; குறைந்த இலாபம் வைத்து இந்த விலைக்குத்தான் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று நிர்ணயம் செய்தால், அந்த விலைக்கு அரசும் கொள்முதல் செய்ய வேண்டும்; தனியாரும் கொள்முதல் செய்ய வேண்டும். இந்தத் திட்டம் ஒன்றும் புதிதாக நான் சொல்லிவிடவில்லை. நாங்கள் ஆள்கின்ற மத்தியப் பிரதேசத்திலே இந்த விலை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டு சீராகச் செயல்பட்டு வருகிறது. அதை நம்முடைய தமிழக அரசும் பின்பற்ற வேண்டும். விவசாயிகளுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்து, பவுன் ஒன்றுக்கு 5 ரூபாய் இருக்கும்பொழுது, அரிசி மூட்டை ஒன்றுக்கு 5 ரூபாய் இருக்கும். 50 ரூபாய் பவுன் விலை இருக்கும்பொழுது அரிசி மூட்டை விலை 50 ரூபாய் இருக்கும். பவுன் விலை 500 ரூபாயாக இருக்கும்பொழுது அரிசி மூட்டை விலை 500 ரூபாய் இருக்கும். அதாவது, ஒரு மூட்டையினுடைய விலை எதுவோ, அதுதான் ஒரு பவுனுடைய விலை. இதுதான் பொருளாதாரத்திலே தமிழகத்திலே நீண்டநாட்களாக இருந்துவந்தது. இன்றையதினம் பவுன் ரூபாய் 5 ஆயிரத்திற்கு மேலே விற்கின்றது. ஆனால் அரிசி மூட்டை விலை என்ன விலைக்கு இருக்கின்றது? அதற்குப் பாதிகூட இல்லையே? விவசாயி எப்படிப் பிழைப்பான்? அவனுக்கு எப்படி வருமானம் அதிகரிக்கும்? ஆகையினால், அதற்கு அரசு என்ன செய்யவேண்டும் என்று யோசித்து செயல்பட வேண்டும். அதற்கு விலை நிர்ணயக் குழு மாவட்டம்தோறும் கண்டிப்பாக அமைப்பதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். விவசாயிகள் வெள்ளம் வந்தால் பாதிக்கப்படுகிறார்கள், வறட்சி வந்தாலும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் கடன் வாங்கி முதல்போட்டு, உழைத்து அவர்கள் பாடுபடுகின்றவை எல்லாம் வீணாகப் போய்விடுகின்றன. எல்லா முதலையும் போட்டு விடுகிறார்கள். ஆகையினாலே, அவர்களுக்குக் காப்பீடு திட்டம் அவசியம் இந்த அரசு தனியாகக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–15*

இன்றையதினம் தமிழகத்திலே படித்தவர்கள் சுமார் 57 இலட்சம் பேர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றார்கள். வருமானம் இன்றி அந்தக் குடும்பம் கஷ்டப்படுகிறது. கடன் வாங்கிப் படிக்க வைத்த பெற்றோர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த



வேலையற்ற குடும்பங்களுக்கு, அந்த வேலையற்ற இளைஞர்களுக்கு அரசு உதவ வேண்டும், மாதந்தோறும் 500 ரூபாயாவது நஷ்ட ஈடுபோல அவர்களுடைய குடும்பத்தை நடத்துவதற்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம்–ஒழுங்கு, பிற மாநிலங்கள் அல்லது அகில இந்திய அளவிலே பார்க்கும்போது, உண்மையிலேயே தமிழ்நாடு அரசு, அதன் கண்காணிப்புத் துறை, காவல் துறையினுடைய சாமர்த்தியத்தினாலே புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய நெறிமுறையினாலே (மேசையைத் தட்டும் ஒலி) மிக அமைதியான ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது என்பதைப் பாராட்டத்தான் வேண்டும். இன்றையதினம் கர்நாடகாவிலே ஒரு விஞ்ஞானி சுடப்படுகிறார், கேரளாவிலே தீவிரவாதிகள் புகுந்திருக்கிறார்கள், ஆந்திராவிலே புகுந்திருக்கிறார்கள், அது போதாதென்று, நக்சலைட்டுகள் வளர்ந்து வருகிறார்கள். இந்தத் தொல்லைகள் எல்லாம் அண்டை மாநிலங்களில் இருக்கும்போது, அகில இந்தியாவிலே இருக்கும்போது, தமிழ்நாடு அரசு தீவிரமாக இதைப்பற்றி கவனம் செலுத்த வேண்டும். இங்கே ஒன்றுமே இல்லை என்று வாளா இருந்துவிடக்கூடாது. தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், அமைதிப் பூங்காவாக இருக்கிற தமிழகத்திலே வளர்ந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் போராட்டம் மீண்டும் தொடங்கிவிட்டது. இதன் காரணமாக, அகதிகள் ரூபத்திலே இங்கே தீவிரவாதிகள் ஊடுருவலாம். ஏற்கெனவே, நமக்குத் தெரியும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கிற அமைப்புகள், கட்சிகள் இங்கே இருக்கிறது என்பதைக் கவனத்தில்கொண்டு, இந்த அரசு மிக கவனமாக இருக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

8 சதவிகிதம் பொருளாதார வளர்ச்சியை நாங்கள் காண்போம் என்று ஆளுநர் உரையிலே காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறோம், குறைந்தது 8% development கண்டிப்பாக ஆக வேண்டும். ஆனால் அதற்கு என்ன செய்யப் போகிறோம், எந்த வழிமுறைகளிலே செய்யப் போகிறோம் என்பதை விரிவாக நிதிநிலை அறிக்கையிலாவது வரும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

நெசவாளர்களுக்கு இந்த அரசு மிகப் பெரிய உதவிகளையெல்லாம் செய்திருக்கிறது. வேலைவாய்ப்பினை ஏற்படுத்துகின்றவண்ணம் சுமார் 215 கோடி ரூபாய்க்கு இலவச வேட்டி-சேலைகளை அளித்து, அதன்மூலம் நெசவாளிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்கிக்

கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக நன்றியைச் செலுத்துகின்றேன். அதுதவிர ஏழை நெசவாளிகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரண நிதிக்காக சுமார் 13,685 கோடி ரூபாயை நம்முடைய அரசு கணக்கு போட்டு கேட்டிருக்கிறது; சரியான கணக்குபடி கேட்டிருக்கிறார்கள். அது இந்த அவையிலே நேற்றைக்குக்கூட விரிவாகப் பேசப்பட்டது. அதையே நான் திருப்பிச் சொல்ல விரும்பவில்லை. ஆனால், மராட்டிய மாநிலத்தில், 6 நாட்கள்தான் பேய் மழை பெய்து, மும்பை நகரம் மட்டும் பாதிக்கப்பட்டது. அங்கே நிவாரண உதவி கொடுக்கக்கூடாது என்று பாரதிய ஜனதா கட்சி சொல்லவில்லை, கண்டிப்பாகக் கொடுங்கள். 6 நாட்களுக்கு, ஒரு நகரத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்காக ஆயிரம் கோடி ரூபாயைக் கொடுத்திருக்கின்றார்கள்; 60 ` நாட்களுக்கு தமிழகத்திலே மழை பெய்து, தமிழ்நாடு பூராவும் வெ ளக்காடு, பேரழிவு ஏற்பட்டது. இதற்குக் குறைந்தது 13,685 கோடி ரூபாய் ம கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு கேட்கும்போது வெறும் ஆயிரம் கே டி ரூபாய் வழங்கப்பட்டது. மராட்டிய மாநில அக்காவுக்கு உடனே அரிசி, தமிழகத் தங்கைக்குத் தவிடா? (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் நா ங்கள் கேட்க விரும்புகிறோம். ஒரு கண்ணிற்கு வெண்ணெய், தமிழக கண்ணிற்குச் சுண்ணாம்பா? (மேசையைத் தட்டும் ஒலி) அஸ்ஸாமிலே நே ற்றைய முன்தினம் 6 ஆயிரம் கோடி ரூபாய் மூலதனம் செய்ய முன்வந் திருக்கின்ற மத்திய அரசு, பீகாருக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற மத்திய அரசு, மராட்டிய மாநிலத்திற்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற மத்திய அரசு—காங்கிரஸ் அரசு, தமிழகத்திற்கு மட்டும் கிள்ளிக் கிள்ளிக் கொடு க்கின்றார்களே, நியாயம்தானா? (மேசையைத் தட்டும் ஒலி) தாராளமாகக் கொடுக்கவேண்டும்.

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கம்யூனிஸ்ட் கட்சிகள் உங்களை ஆதரிக்கின்றன, கவலைப்படாதீர்கள்! (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** இன்றைக்குத்தான் பேச்சையே ரசித்துக் கேட்கின்றோம். (சிரிப்பு)

**திரு. கே.என். இலட்சுமணன்:** கர்நாடக அரசிலே, கர்நாடக காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. மக்கள் தேர்ந்தெடுக்கின்றார்கள். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஜனநாயகம் வரட்டும். ஆனால் கிருஷ்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது என்ன சொன்னார்கள்? 'காவிரிக்கு



ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கொடுக்கமுடியாது' சொன்னாரா, இல்லையா, காங்கிரஸ்காரர்? மத்தியிலும் காங்கிரஸ். Supreme Court — உச்ச நீதிமன்றம் — தீர்ப்பு வழங்கியது. 'தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் உடனடியாகக் கொடுக்கவேண்டும்' உத்தரவிட்டது; நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைக் காட்டிலும் உயர்ந்த தீர்ப்பு எங்கேயுமே கிடையாது. அந்தத் தீர்ப்பை எடுத்துக் குப்பைத் தொட்டியிலே போட்டுவிட்டார்கள். உச்ச நீதிமன்றத்தையே அவமதித்தார்கள். காங்கிரஸ் ஆட்சி கர்நாடகாவிலே. தேர்தல் வந்தது. காங்கிரஸ் minority ஆகிவிட்டது. ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும் காங்கிரஸ்காரர்கள். சென்ற தேர்தலிலே 79 பாரதிய ஜனதா கட்சி, 65 தான் காங்கிரஸ். இன்றைக்கு minority அரசாங்கம். இன்றைக்கோ, நாளைக்கோ விழுந்துவிடும்போல் இருக்கிறது. தெரியவில்லை. ஆந்திராவிலே காங்கிரஸ் ஆட்சி. பாலாற்றின் குறுக்கே அணை. தமிழகத்திற்குத் தண்ணீர் விடக்கூடாது என்கிற நோக்கத்திலே செயல்படுகின்றது. தீர்மானம் போட வேண்டியிருக்கின்றது. போராட வேண்டியிருக்கின்றது. ஏன்? காங்கிரஸ்காரர்கள் அங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் மாநிலத்திலும், மத்தியிலும்.

கேரளாவிலே மேற்குத் தொடர்ச்சி மலை, ஆறுகள் ஓடுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையிலே நிறைய மழை பெய்கின்றது. நேராக மேற்கே பாய்ந்து உடனடியாகக் கடலிலே கலந்து விடுகிறது. அங்கே விவசாயம் செய்வதற்கு இட்டும் இல்லை. ஆகையினாலே அது வீணாகக் கடலிலே கலக்கிறது. மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளைக் கிழக்கே திருப்பிவிட்டால், தமிழகத்திற்குத் தண்ணீர் வரும்; விவசாயம் பெருகும்; மின்சாரம் எடுக்கலாம். அதை மின்சாரமாகக் கொடுக்கின்றோம் கேரளாவிற்கு என்று சொல்லியும்கூட, அங்கே காங்கிரஸ் ஆட்சி இருக்கின்ற காரணத்தினாலே அதையும் நிறைவேற்றிக் கொடுக்கவில்லை. ஆகையினாலே காங்கிரஸ் ஆட்சி மாநிலத்தில் இருந்தாலும் சரி, மத்தியிலே இருந்தாலும் சரி, தமிழகத்திற்கு என்றுமே அவர்கள் பயன்படமாட்டார்கள், உதவி செய்யமாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எடுத்துக் காண்பிக்க விரும்புகிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து மணித் துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். என்னுடைய மயிலாப்பூர் தொகுதியிலே இதற்கு முன்பு ஆட்சி செலுத்திய ஆட்சியாளர்கள் காலத்திலே தெப்பக்குளம்

வறண்டு போயிருந்தது. நேற்று போய்ப் பார்த்தால், கண் குளிர, கண்கொள்ளாக் காட்சியாக தெப்பக்குளத்தில் நீர் நிறைந்து இருக்கின்றது. அம்மா அவர்களுக்கு நன்றியை மயிலாப்பூர் மக்கள் சார்பாக நான் செலுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பட்டினப்பாக்கத்திலே பேருந்து நிலையம் ஒன்று அமைப்பதற்கு, தொகுதி நிதியிலிருந்து அது செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. பாதிதான் நடந்திருக்கிறது. இன்னும் பாதி செய்ய வேண்டும். தமிழக அரசு அதை விரைவாக அமல்படுத்த வேண்டும், முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடைசியாக தளி தொகுதியிலே அண்மைக் காலமாக யானைகளுடைய அட்டகாசம் மிகவும் அதிகரித்திருக்கிறது. அங்கே இருக்கின்ற விவசாயப் பயிர்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன. விவசாயிகளும் யானைகளால் மிதிபட்டு இறந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நிவாரணமும் இன்னும் அளிக்கப்படவில்லை. ஆகையினால் தளி தொகுதியிலே solar fences என்ற முறையில் ஒரு கி.மீ. க்கு போட்டால்.. (குறுக்கீடு)

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு, தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சோலார் வேலி அமைப்பதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அந்தத் தளி தொகுதியில் அவசியம் அந்த நிதியைப் பயன்படுத்தி சோலார் வேலி போட்டுக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக உறுதி கூறுகின்றேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மிக்க மிக்க நன்றியை தளி தொகுதி மக்கள் சார்பாக இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மேதகு ஆளுநர் உரையிலேயும் சொல்லப்பட்டிருக்கின்றது. இது கடைசி கூட்டத்தொடர். ஐந்தாண்டுக் காலம் முடிவடைந்து நாமெல்லாம் பிரிந்து செல்லுகின்ற நேரம். மீண்டும் வருக என்று நான் சொல்கின்றேன். ஓட்டல்களில் 'மீண்டும் வருக' என்று போடுவார்கள். சட்டமன்றத்தில் அப்படிப் போட முடியாது. ஆனாலும், 'மீண்டும், மீண்டும் வருக' என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். மீண்டும் நீங்களெல்லாம் வரவேண்டும்.



நல்லாட்சி தரவேண்டும் என்று அம்மாவையும் வாழ்த்தி வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாண்டுக் காலம் எதிர்க்கட்சியாகவும், ஆளும் கட்சியாகவும், எப்படி இருந்தபோதிலும்கூட, இந்த அவையில் மக்களுடைய நலனுக்காக நாமெல்லாம் ஒன்று சேர்ந்து பாடுபடுகின்ற வாய்ப்பினைப் பெற்றோம். வாய்ப்பு நமக்கு ஒரு முறைதான் கிடைக்கும். அந்த வாய்ப்பு நமக்கு ஒரு முறை கிடைக்கும்போது நாமெல்லாம் மாமன்றத்திலே சகோதரர்களாக, சகோதரிகளாக இருந்து பணியாற்றினோம் என்ற ஒரு இனிய செய்தியோடு நாமெல்லாம் இங்கிருந்து சென்று, மீண்டும் வரவேண்டும். ஆகவே, மீண்டும் வருவதற்கு மக்களுடைய சேவைதான் முக்கியம் என்பதை நாமெல்லாம் அறிந்திருக்கின்றோம். உங்கள் அனைவருக்கும், எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் நான் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, ஐந்தாண்டுக் காலம் எங்களோடு ஒத்துழைத்த அவைத் தலைவர்களுக்கும், அமைச்சர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்களுக்கும், மிக்க மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நிறைவு செய்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி.

*பிற்பகல் 12–30*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை இங்கே சொல்ல நான் விழைகின்றேன். முதலாவதாக, ஆளுநர் உரை, ஆளுகின்ற கட்சியினுடைய கொள்கை நிலையைத் தெளிவுபடுத்தி இருக்கின்ற காரணத்தால், இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கின்ற ஒரு சர்வதேச நிலையை இங்கே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் முதலிலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருந்தால், அவரிடத்திலே நான் ஒரு விளக்கத்தைப் பெறலாம் என்று எண்ணியிருந்தேன். முதலமைச்சர் இல்லாவிட்டாலும் இந்தச் செய்திகளுக்கு நிச்சயமாக அவர்கள் பதில் அளிக்கின்றபோது, எனக்கு பதில் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். 1991 ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திலே ஆற்றிய ஆளுநர் உரையை நான் படித்துப் பார்த்தேன். அதிலே அவர் சொல்லுகின்றார், 'இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுடைய வம்சாவழி வாழ்க்கை பாதுகாக்கப்பட

வேண்டுமென்ற நோக்கத்தில்' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசாங்கம் சார்பாக அந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டது, 'கச்சத் தீவை நான் மீட்டே தீருவேன் என்று உறுதிபடக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.' ஆனால் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்புக்கு வந்து – மேதகு ஆளுநர் அவர்கள் – ஆட்சிப் பொறுப்பிலேயிருந்து ஆட்சியை நிறைவு செய்கிற காலத்தில், இலங்கைத் தமிழர் இன மக்களுக்காக, அவர்களை வம்சாவழி மக்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்ல, தமிழக மக்கள், தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கின்றபோது ஓய்வெடுப்பதற்கும் வலைகளை உலர்த்துவதற்கும் இலங்கை அரசிடத்திலே அதை லீசுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்று சொல்கின்ற ஒரு முரண்பாட்டு நிலையை இந்த ஆட்சியிலே என்னால் காண முடிகிறது. ஏன் இந்த முரண்பாடு வந்தது? இது ஒரு சர்வதேச நிலை. முன்னாள் பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், பிரதமராக இருந்தபோது இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் ஒரு agreement நடந்திருக்கிறது. இரு அரசுகளும் சேர்ந்து போட்டதன்படி, மீனவ மக்கள் மீன் பிடித்து, ஓய்வெடுப்பதற்கும், வலைகளை உலர்த்துவதற்கும் நமக்கு அந்தக் கச்சத் தீவிலே உரிமை இருக்கிறது. அங்கிருக்கிற கோயிலிலே சென்று வழிபடுவதற்கு உரிமை இருக்கிறது. அப்படி ஒரு வாய்ப்பு இருக்கிறபோது, அந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்க வேண்டுமே தவிர, அதற்கு மாறாக இதை லீசுக்குக் கொடுங்கள் என்று சொன்னால், இந்த இலங்கை அரசுக்குக் கச்சத் தீவை ஒப்படைப்பதைப் போன்று ஆளுநர் உரையிலே ஒரு அரசாங்கத்தினுடைய கொள்கை நிலை எடுத்திருப்பது என்பது சரியில்லை என்று நான் முதலிலே குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலேயிருந்து அதை மாற்றுவதற்கு இந்திய அரசிடத்திலே சரியான தீர்மானங்களை இந்த மன்றத்திலே நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் தெளிவுபட இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல; எனக்கு முன்னதாக இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு சம்பவங்களை, கடந்த ஐந்து ஆண்டுக் கால ஆட்சியில் சாதனைகளைவிட வேதனைகள் நிறைந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் கூட இங்கே எடுத்துச் சொன்னார். அந்த... (குறுக்கீடு) சொன்னார், சொன்னார். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுத்திருங்களேன். அடாடா! (குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லாததை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் அதுபோலப் பேசவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. பழனிசாமி, குற்றங்கள் மட்டுமல்ல, சாதனைகளும் வளர்ந்திருக்கின்றன என்றுதான் சந்தானம் பேசினார்.

**திரு. ஜி. பழனிசாமி:** அந்த வரியை நான் சொல்வதற்கு எங்கே விட்டீர்கள்? அதுதான் நீங்கள் எடுத்துக்கொண்டுவிட்டீர்களே! ஆனால் அந்த சோதனைகள் நடந்ததையெல்லாம் அவர் நினைவுபடுத்தினார். உண்மையிலேயே அவருடைய அந்த வார்த்தைகளுக்கு எனக்கு உடன்பாடு உண்டு. இருந்தாலும் நமக்கு... (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பல்வேறு சோதனைகளையும் வேதனைகளையும் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சோதனைகள் எல்லாம் உங்களிடமிருந்து வந்தன என்று சொல்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** குறிப்பாக, தமிழகத்தில் கடந்த காலங்களில் நல்ல படிப்பினைகளை நாம் பெற்றிருக்கிறோம், இந்த அரசு பெற்றிருக்கிறது. ஒன்று, கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் கடுமையான வறட்சி. விவசாயிகளுடைய வேதனை. அநேகமாக பார்த்தோம் என்று சொன்னால், கரிசல் மண்ணைக் கிளறிவிட்டு தண்ணீர் எப்போது வரும் என்று மேகத்துக்காக — கருமேகத்துக்காகக்—காத்துக்கொண்டு, கஞ்சியும் பட்ட மிளகாயோடு உட்கார்ந்திருந்த விவசாயிகளுடைய நிலைமையை (குறுக்கீடு) பட்ட மிளகாய், பச்சை மிளகாய் கிடைக்காது வறட்சியிலே. பட்ட மிளகாயோடு காத்திருந்த நிலைமைகளை நம்மால் காண முடிந்தது. ஆகவே அப்படிப்பட்ட நேரங்களில் தமிழகத்திலே குடிதண்ணீர், விலை கொடுத்து வாங்கி சாப்பிட வேண்டிய அவசியம் இருந்தது. ஒரு பிடி சாதம் கிடைத்தால்கூட கிடைத்துவிடும்; ஆனால் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலைமை ஏற்பட்டது. அப்படிப்பட்ட சோதனையிலிருந்து ஒரு நல்ல, தமிழகத்தில் நீர் கிடைக்காதா என்ற ஒரு நிலைமை நமக்கு ஏற்பட்டது. காவிரி நதிநீர்ப் பிரச்சினை இறுதித் தீர்ப்பு நமக்குக் கிடைக்கவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர், மூத்த தலைவர், நான் மிக மதிக்கின்ற இலட்சுமணன் அவர்கள்கூட இங்கே மத்திய அரசுபற்றி

குற்றங் குறைகளை எடுத்துச் சொன்னார், அவருடைய கடமையைச் செய்தார். அவர் இருந்த ஆட்சிக் காலத்தில், ஐந்தாண்டுக் காலத்திலேயும் வாஜ்பாய் அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்யாமல் தமிழ்நாட்டுக்குத் துரோகம் விளைவித்துவிட்டுப் போனார்களே தவிர, நிறைவேற்றிக் கொடுக்கவில்லை. இதில் எல்லோருக்கும் அந்த உடன்பாடு உண்டு. அநேகமாக எதுவுமே பண்ண முடியவில்லை. ஆக, ஆளும் கட்சியாக இருந்தபோது செய்ய முடியாத காரியங்களை (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, அப்பாவு மறுபடியும் சுயேச்சையாகத்தான் செயல்படுகிறாரா? தி.மு.க.வுடன் இருக்கிறாரா? பதில் சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ அப்படி. என் தம்பி அருள் எப்படி இருக்கிறாரோ அப்பாவுவும் அப்படி. அப்பாவுவும் அப்படியே இருக்கிறேன், அருள் இருக்கிற மாதிரி. எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மிக்க நன்றி. சுயேச்சையாகவே இருங்கள். உட்காருங்கள்.

பிற்பகல் *12–35*

**திரு. ஜி. பழனிசாமி:** இப்போதும் மத்தியிலே ஆளும் கட்சியாக இருந்தாலும், மாநிலத்திலே ஆளும் கட்சியாக இருக்கிறபோதும் சரி, ஒரு ஆட்சி நிர்வாகத்திலே, அதிகாரத்திலே இருக்கிறபோது செய்யத் தவறியதை எதிர்க்கட்சியாக இருக்கிறபோது மட்டும் செய்ய வேண்டுமென்று பேசுகிற பேச்சு என்பது இந்த நாட்டுக்குப் பொருத்தமல்ல, நாட்டு மக்களுக்கு நன்மையான பொருத்தமல்ல. அதைத்தான் பாரதிய ஜனதாக் கட்சி இரண்டுதரமாக இந்தச் சட்டமன்றத்திலே பேசுகிறார்கள். அவர்கள் பேசுகிற பேச்சு எனக்கு நன்றாகப் புரிகிறது. பாவம், தமிழகத்திலே பரிதாபமாக இருக்கிறார்கள். எப்படியாவது வருகிற தேர்தலிலே ஆதரவு கொடுப்பீர்களா என்று எதிர்பார்க்கிறார்கள்; கொடுங்கள். அதிலே எனக்கு மனமாச்சரியமே கிடையாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** ஆனால்... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையிலே அடல் பிகாரி வாஜ்பாய்க்கு இருந்த அக்கறை இன்று வரை காங்கிரஸில் இருந்த பிரதமர்களுக்கு இருந்ததில்லை என்று சொல்லிக் கொண்டு, தேர்தலைப் பற்றிப் பேசுகிறார்கள். கூட்டணி பற்றிப் பேசுகிறார்கள். தாம்பரத்திலே ஒரு கட்சி முற்போக்காக இருக்கும் இவர்கள் கூட்டணியிலே. அது, குரோம்பேட்டையிலே பிற்போக்காக ஆகிவிடும். அதுபோல இன்றைக்கும் சொல்கிறேன். நாளைக்கு, அடுத்த முறை இங்கே இன்றைக்கும் சொல்கிறேன். நாளைக்கு, அடுத்த முறை இங்கே எம்.எல்.ஏ.–வாக வரவேண்டும் என்ற அவசியமே எனக்குக் கிடையாது. அந்தமாதிரியான ஒரு கற்பனையோடு பி.ஜே.பி. காரர்கள் இந்த அவையில் பேசுவது கிடையாது. அரசியல் ஆதாயம் கருதி என்றைக்குமே பேசியது கிடையாது. நேற்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, நாளைக்கும் சரி பாரதிய ஜனதாக் கட்சிக்காரர்கள் தேர்தலுக்காக மட்டும் பேசமாட்டான். ஆனால் நீங்கள் தேர்தலுக்காக பேசுவீர்கள். அண்ணா தி.மு.க. ஆதரவோடு வந்தீர்கள். ஆனால் (குறுக்கீடு) இல்லை, இல்லை, இருங்கள். நான் தி.மு.க. ஆதரவோடு வந்தேன். நான் தி.மு.க. ஆதரவோடு வந்தேன். ஆனால் (குறுக்கீடு) இல்லைங்க, அடுத்த நாளே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இந்த ஆட்சியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, திரு. பழனிசாமி பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** தேவையில்லாத விவாதம் இது. வேறு ஏதாவது பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள் திரு. ஜெக. வீரபாண்டியன் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனி மனிதனுடைய விமர்சனத்தைச் சொல்லவில்லை. அரசியலுக்காகச் சொன்னேன். அடுத்ததாக நமக்கு ஏற்பட்டிருக்கின்ற,

சுனாமியால் ஏற்பட்ட மிகப் பெரிய பாதிப்பு தமிழகத்திலே ஒரு சோகத்தை உருவாக்கியது. அதனுடைய துக்கத்திலிருந்து மீளுவதற்குள்ளாக ஒரு தடவை இல்லை, பல தடவை தமிழகத்திலே பெருமழை பெய்து, அரசியலைப் பார்க்கவில்லை மழை; சாதியைப் பார்க்கவில்லை, அரசியல் கட்சியைப் பார்க்கவில்லை; பெரும் சேதத்தை உருவாக்கி இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் தமிழகத்தினுடைய உணவு தானிய உற்பத்தி என்பது பெருமளவிற்குப் பெரிய பாதிப்புகளை உருவாக்கி இருக்கிறது. அந்த உணவு தானிய உற்பத்தி, விவசாயிகளுடைய பாதிப்பு என்பது எல்லோரையும் சார்ந்தது. யாரும் மறந்துவிட முடியாது. ஆனால் இன்றைக்கு நிவாரணப் பணிகள்கூட 22 மாவட்டங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் வழங்கியிருப்பதை நாங்கள் மறுக்கவில்லை. குற்றமும் சொல்லவில்லை. இருந்தாலும், கொடுக்கப்படாமல் இருக்கக் கூடியவர்களுக்கும், அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதுதான். பல தடவை முதலமைச்சர் பல்வேறு உத்தரவுகள்; ஒவ்வொரு ஊருக்குச் சென்று வருகிறபோதெல்லாம் ஒவ்வொரு உத்தரவிட்டார்கள். எங்களுடைய மாவட்டத்திலேயும், திருவாரூர் மாவட்டத்திலேயும்கூட இன்னும் சரிவர அந்த நிவாரணப் பணிகள் மேற்கொள்ள முடியாமல் அங்கு இருந்து கொண்டிருக்கிறது. அதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். குடிசை வீட்டிற்குக் கொடுத்தார்கள். ஓட்டு வீடு, மாடி வீடு என்கிற பெயரால் இன்னும் கொடுக்கப்படவில்லை. தினந்தோறும் சாலை மறியல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே பெண்களுடைய சுய நிதிக் குழு விழிப்படைந்திருக்கிறது. நூற்றுக்கணக்கான பெண்கள் சாலையிலே உட்கார்ந்து, அமர்ந்து தங்களுடைய உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு அதனை வழங்க வேண்டும் என்று நான் இந்தக் கோரிக்கையை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, அந்த மாவட்டத்திலே ஆறுகள், கால்வாய்கள் பெரும் உடைப்புகள் ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் சீர் செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், இவ்வளவு பெரிய மழையிலே—ஒரு 4 ஆண்டு, 5 ஆண்டுக் காலங்களில் ஆட்சி புரிந்திருக்கிற நம்முடைய அரசு, வறட்சியைச் சந்தித்திருக்கிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினையைச் சந்தித்திருக்கிறது. விவசாயத்தினுடைய பாதிப்பைச் சந்தித்திருக்கிறது. ஆனால் அதற்கான மாற்று ஏற்பாடுகளை இதுவரையிலும் 4 ஆண்டுக் காலத்திலே ஏதாவது செய்து இருக்கிறோமா என்று எண்ணிப் பார்த்தால், சில கால்வாய்களை மட்டும்



தூர் வாரினோமே தவிர, ஒரு சொட்டுத் தண்ணீர் நீராதாரத்தைச் சேமிப்பதற்கான ஒரு திட்டமும் அரசினிடத்திலே கிடையாது.

*பிற்பகல் 12-40*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

புதிய வீராணம் திட்டம், என்ன பண்ணிவிட்டீர்கள்? சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்ததுதானே! இந்த வருடம் மழை வரவில்லை என்றால், காவிரியிலே நாம் கேட்காமலே நான்கு இலட்சம் கன அடி தண்ணீர் வராமல் இருந்திருந்தால் சென்னை நாறிப் போய் இருக்கும். அது எங்களுக்குத் தெரியும். அதுதானே நிலைமை? இல்லையென்றால் தண்ணீர் வந்துவிடுமா இங்கே? கர்நாடகாவிலே அவர்களாலே கட்டுப்படுத்த முடியாத தண்ணீரைக் காவிரியிலே திறந்து விட்டதன் விளைவாக, கொள்ளிடம் நிரம்பியது; மேட்டூர் நிரம்பியது. இல்லையென்றால் தமிழகத்தில் தண்ணீர் கொடுப்பதற்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீராணத்திலிருந்து மட்டும் வரவில்லை. Bore போட்டு அதன் மூலமாக சென்னை மாநகராட்சிக்கு, மாநகரத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மழை நீரை அவ்வப்போது தேக்கி வைக்க, பண்ணைக் குட்டைகளுக்கென பிரத்தியேகமாக நிதி ஒதுக்கி ஒவ்வோர் ஆண்டும் பண்ணைக் குட்டைகள் புதிதாக உருவாக்கப்பட்டன. அதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. வாய்க்கால்கள் எல்லாம் சீரமைக்கப்பட்டன. ஏரி, குளங்கள் தூர் வாரப்பட்டன. மழை நீரைச் சேகரிப்பதற்கு இந்த நடவடிக்கை ஒவ்வோர் ஆண்டும் அரசு எடுத்துவருகிறது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது திருவாரூர் மாவட்டத்திற்கு நிவாரணம் சரியாக வழங்கப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அவருடைய தகவலுக்காக இந்தக் கருத்தை நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். குடிசை வீடுகள் சேதம் என்று சொல்லும்பொழுது, முழுமையாக சேதம் அடைந்த வீடுகள் 2628-க்கு ரூபாய் 2,000 வீதம், 52 இலட்சத்து

56 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. பகுதி சேதம் அடைந்த வீடுகள் 11,500-க்கு, ரூபாய் 1,000 வீதம் ஒரு கோடியே 15 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகமொத்தம் ஒரு கோடியே 67 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. சிறப்பு நிவாரணம் என்கின்ற வகையில் 24 கோடி ரூபாய் இந்த வட்டங்களுக்கு, அதாவது திருவாரூர், நன்னிலம், வலங்கைமான், குடவாசல், மன்னார்குடி, நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி ஆகிய ஒவ்வொரு வட்டத்திற்கும், திருவாரூருக்கு தலா 2 கோடியே 40 இலட்சம் ரூபாய், நன்னிலத்திற்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய், வலங்கைமானுக்கு 2 கோடியே 45 இலட்சம் ரூபாய், குடவாசலுக்கு 3 கோடியே 95 இலட்சம் ரூபாய், மன்னார்குடிக்கு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய், நீடாமங்கலத்திற்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபாய், திருத்துறைப்பூண்டிக்கு 5 கோடியே 25 இலட்சம் ரூபாய், ஆகமொத்தம் 24 கோடி ரூபாய் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். எனவே, எந்தப் பகுதியிலாவது விடுபட்டிருந்தால். அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி. பழனிசாமி:** கொடுக்கவில்லை என்று சொல்லவில்லையே? நீங்கள் நிவாரணம் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். முதலமைச்சரிடமும் சொல்லியிருக்கிறேன். பாக்கியிருப்பதையும் கொடுக்கவேண்டும் என்றுதான் சொன்னேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை அதனைக் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை; நீங்கள் ஏன் அதற்குப்போய் எனக்குப் பட்டியல் போட்டுச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, இன்னும் ஐந்து மணித்துளிகள்.

**திரு. ஜி. பழனிசாமி:** என்ன? பாரதிய ஜனதா கட்சியைவிட அவ்வளவு நாங்கள் மோசமாகப் போய்விட்டோமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் மூன்று பேர் பேசவேண்டி இருக்கின்றது.

**திரு. ஜி. பழனிசாமி:** பாரதிய ஜனதா கட்சியைவிட அவ்வளவு மோசமாகப் போய்விட்டோமா நாங்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவர்களை வம்புக்கு இழுக்காதீர்கள்.



**திரு. ஜி. பழனிசாமி:** உருப்படியாக நான்கு வார்த்தை நாட்டிற்குச் சொல்கின்றேன். (குறுக்கீடு) நாட்டிற்குச் சொல்லவேண்டிய பிரச்சினை. நம்முடைய மாநிலத்திற்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் நாட்டிற்குத்தான் சொல்கிறார்கள். பேசக்கூடிய எல்லோரும் நாட்டிற்குத்தான் சொல்கிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையாலே நான் சொல்வது என்பது. நீர் ஆதாரத்தைச் சேமிப்பது என்பது, ஆந்திராவைப்போல, கேரளாவைப்போல, அப்படிச் சேமித்து வைத்திருந்தால் கிட்டத்தட்ட 4 இலட்சம் டி.எம்.சி தண்ணீர் கடலிலே போய்ச் சேர்ந்திருக்காது. ஒரு 100 டி.எம்.சி தண்ணீரைக்கூட நம்முடைய தமிழகத்திலே, இவ்வளவு பெரிய சாதனையைப் படைக்கக்கூடிய நம்முடைய ஆட்சியில் ஏன் செய்யமுடியவில்லை என்ற கேள்விதான். பண்ணைக் குட்டை எவ்வளவு இருக்கும்? பண்ணைக் குட்டை எவ்வளவு வெட்டியிருக்கிறோம் என்கிறீர்கள்? கிண்ணம் பெரியது இருக்கிறது, பண்ணைக் குட்டை. வேறு ஒன்றும் பெரியதாக இல்லை. என்ன நடந்தது? நாலரை இலட்சம் டி.எம்.சி. தண்ணீர் கடலுக்குப் போயிருக்கிறது. நான் சொல்லவில்லை. நம்முடைய விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறையினுடைய ஆய்வாளர்கள் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சோதனையிலிருந்து நீராதாரத்தைப் பாதுகாப்பதற்குத் திட்டங்களை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-45

அதோடு மட்டுமல்ல, இன்னும் சொன்னால் இந்த வெள்ளத்திலே இரண்டு பருவ மழை தொடங்கியபோதுகூட மிகச் சோகமான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்காவிலே காட்டாற்றிலே வெள்ளம் ஏற்பட்டபோது 53 பேர் இறந்துபோனார்கள். அனுதாபத் தீர்மானம் போட்டிருக்கிறோம். அதேபோன்று இராமநாதபுரம் மாவட்டத்திலே திருவாடானையில் ஏற்பட்ட பெருவெள்ளத்திலே 38 பேர் இறந்துபோனார்கள். அதோடு மட்டுமல்லாமல், இன்னும் சொன்னால், நீர்வள ஆதார அதிகாரியே பொதுப்பணித் துறை கட்டடத்தின் மேலே இருந்து கொண்டு (குறுக்கீடு) ஒரு தடவை அவர் மேலே இருந்துகொண்டு கூடலை ஆற்றிலே, இவ்வளவு தண்ணீர் வருகின்றதே என்று ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும்போதே வெள்ளம் கொண்டுபோய் விட்டது.

கட்டடத்தையே கொண்டு போய்விட்டது. இது யார் கட்டிய கட்டடம் என்றா இன்றைக்கு ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்க முடியும்? வெள்ளப் பெருக்கெடுப்பு, இயற்கைச் சீற்றம். அது பாலமாக இருக்கலாம், மரமாக இருக்கலாம், கட்டடமாக இருக்கலாம். இதைப் போய் யார் நபர் என்று இதற்கான ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி, இதற்கான ஒரு தேவையற்ற விவாதத்தை நடத்துவது என்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல இருக்கிறது, ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து சொல்வது. (குறுக்கீடுகள்) கொடுமை. என்ன பொருத்தம் அது? இவ்வளவு பெரிய இயற்கைச் சீற்றம். பாலங்கள் போகின்றன. ரோடு போகிறது, நூற்றுக்கணக்கான மக்களைக் கொண்டு போகிறது. பஸ்-ஐ அடித்துக்கொண்டு போகிறது. அப்படியென்றால் பஸ்-காரர்மீது நடவடிக்கை எடுக்க முடியுமா? யார் மேலே குற்றம் சொல்வது? இயற்கைச் சீற்றத்தில் ஏற்படுகின்ற பேரபாயங்களை, பேரழிவுகளை — சுனாமி ஐந்து நிமிடம்தானே, கப்பலை எங்கே கொண்டு வைத்திருந்தது? பல மாடிகளுக்கு அப்பால் கொண்டு வைத்திருந்தது கப்பலை. ஆட்களை வைத்து, கிரேன் வைத்து தூக்க முடியாத கப்பலையெல்லாம் அங்கே கொண்டு போய் வைத்திருந்தது, இயற்கைச் சீற்றம். அதற்காக, இவர் கட்டியதால்தான் இந்தக் கப்பல் மேலே போய் ஏறிக்கொண்டது என்று சொல்ல முடியுமா? அப்படிச் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதாரணத்தைச் சொல்வதிலே, அந்தப் பாங்கே சரியில்லை. கப்பலுக்கும், கட்டுமானத்திற்கும் ஒரு வித்தியாசம்கூட தெரியாமல் அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு surface, அதாவது நீரிலே ஒரு கப்பல் போகும்போது, அது காற்றிலே அந்த அழுத்தத்தின் காரணமாக கரை ஒதுங்கிவிடுவது உண்டு. ஆனால், கட்டுமானம் அப்படியல்ல. தரம் குறையும்போது அதனுடைய வெட்ட வெளிச்சம் நிச்சயமாக உலகத்திற்கு வந்துவிடும். எனவே, தரம் குறைந்த அந்தப் பாலத்தைக் கட்டியதற்குத்தான் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கின்றார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லை.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று இதுபோன்ற சுனாமியானாலும் சரி, வெள்ளப்



பெருக்கு எடுத்தாலும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று ஆறுதலும் வழங்கி, அதற்கான நிவாரணப் பணிகளையும் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் விளக்கத்திற்கு நன்றி. அதே மாதிரி வெள்ளம் ஏற்பட்டபோது, பஸ் அடித்துக்கொண்டு போனபோது, இரண்டு மூன்று பையன்கள், தங்களுடைய உயிர்களைத் துச்சமாக மதித்து அவர்களெல்லாம் பலபேரைப் பாதுகாத்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்தீர்கள் என்றால், இன்னும் சொன்னால், அண்ணா தி.மு.க.வினுடைய ஊராட்சி மன்றத் தலைவர் சின்னபிள்ளை, அங்கே இருக்கிற முத்துராமலிங்கம், அசோகன், மூன்று பேரும் கிட்டத்தட்ட 30 பேர் உயிரைப் பாதுகாத்தார்கள். அப்படித் தீவிரமாக ஈடுபட்டுப் பண்ணினார்கள். இப்போது, நம்முடைய அரசைப் பார்த்தீர்கள் என்றால், ஏதாவது ஒரு பிள்ளை குறுக்கே ஓடினால், நம்முடைய காவல் துறை பிடித்து, இப்படி எடுத்து வந்துவிட்டால், அவர்களுக்குப் பாராட்டு விழா; அவர்களுக்குப் பெரிய பரிசு கொடுக்கிறோம்; அதேமாதிரி சுதந்திர தினத்தன்று, இல்லையென்றால் குடியரசு தினத்தன்று அவர்களுக்குத் தங்க மெடல், பதக்கம் எல்லாம் கொடுக்கிறோம். எனவே, அவர்கள், எத்தனை உயிரைப் பாதுகாத்தார்கள்! எவ்வளவு உயிரை மீட்டுத் தந்தார்கள்! அவர்களுக்கு நம்முடைய அரசு சார்பாக நன்றியையாவது சொல்ல வேண்டும். சாதாரணமானதல்ல. இது அரசியல் அல்ல. இதையெல்லாம் முதலமைச்சர் இருந்தால் சொல்ல வேண்டுமென்று விரும்பினேன். அப்படிப்பட்ட இயற்கைச் சீற்றம் வருகிறபோது தன் உயிரை மதிக்காமல் பல பேரைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு செய்தியை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். இதுபோன்ற ஒரு இயற்கை இடர்பாடு ஏற்படுகின்ற நிலையில் உயிரினங்கள் காப்பாற்றப்படுவது, அம்மாவினுடைய கவனத்திற்கு வரும்போது, நிச்சயமாக அவர்களை வரவழைத்து வேண்டிய உதவிகள் வழங்கி, கௌரவப்படுத்தி எல்லாவிதமான சலுகைகளையும் அளிக்கின்றார்கள். சாமியார்பேட்டை என்ற கிராமத்தில் சுனாமித் தாக்குதலின்போது

மீரா என்கிற பெண்மணி பல மீனவர் உயிரைக் காப்பாற்றினார்கள். இதே கோட்டைக் கொத்தளத்திலே சுதந்திர தினத்தன்று அந்தப் பெண்மணிக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்து கௌரவப்படுத்தியவர் நம்முடைய அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இது அம்மாவினுடைய கவனத்திற்கு நிச்சயமாகத் தெரியும். தெரியும்போது நடவடிக்கை எடுப்பார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று நிகழ்வு கன்னியாகுமரி மாவட்டத்திலே கடந்த ஆண்டு நடந்தது. ஒரு இரயில் விபத்துக்குள்ளாகும்போது அங்கே ஒரு பெண்மணி அதைத் தடுத்தார்கள். அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இதே கோட்டைக் கொத்தளத்திலே 5 இலட்சம் ரூபாயைப் ப்ரிசாகக் கொடுத்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதோடு இவர்களுடைய பெயர்களையும் சேர்த்து — நான் சொல்வது உண்மையானது, நான் சம்பவத்தைப் பார்த்தவன், கேட்டு அறிந்தவன் — நீங்கள் அவர்களுக்கு அளித்த கௌரவத்தைப் போல, இவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே ஆளுங்கட்சியின் தரப்பிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களும், மற்றவர்களும் அவர்களுடைய சாதனைகளை, ஆளுங்கட்சித் தரப்பிலே சொல்வதிலே தவறே கிடையாது. அதைச் சொல்லித்தான் தீர வேண்டும். ஐந்து ஆண்டுக்கால ஆட்சி, கோடிக்கணக்கான ரூபாய் வரவு–செலவுத் திட்டம், சொல்லித்தான் ஆக வேண்டும். இருந்தாலும், உழவர் பாதுகாப்புத் திட்டம். பலபேருக்கு இந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிகிறது, சில பேருக்குத் திட்டமே தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் ஒரு கஷ்டமாக இருக்கிறது. தொடர்ந்து இந்தத் திட்டங்கள் வர வேண்டும் என்பதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ இந்த அவையிலே பல தடவை நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஏற்கெனவே இருந்த அரசிலேயும், இதற்காக அமைக்கப்பட்ட கோலப்பன் தலைமையிலான குழுவிலே உழவர்களுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டு, ஒரு வாரியம் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது. நல வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த நல வாரியம் மூலமாக 7 கோடி ரூபாய்க்கு மேலே அரசிடத்திலே பணத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். அதை யாரும் மறந்துவிட முடியாது. இப்போது அந்த வாரியம் கலைக்கப்பட்டிருக்கிறது. என்ன நியாயம் இருக்கிறது? ஏன் கலைக்க வேண்டும்? அதோடு இணைத்துக்கொள்ளுங்கள். இந்த ஆட்சியில் கொண்டுவந்திருக்கிற உழவர் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள். நாளைக்கு மாற்று ஆட்சி வருவது உறுதி. அது வந்தால் இது கலைந்துபோகும். (குறுக்கீடு)



பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) ஒரு நிமிடம். இருங்கள். மாமன்ற உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். அந்த ஆட்சியாளர்கள் எந்த அளவுக்கு அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், எப்படி அது பயன்படாமல் போனது என்று நன்றாகத் தெரியும். உறுப்பினர்களுடைய எண்ணிக்கையும், அதனோடு சேர்த்த தொகையும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில்தான், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாத சூழ்நிலையில்தான் இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு உணர்ந்து இருப்பார் என்று நான் உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கனிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், கடந்த காலத்தில் (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அவர் பேசி முடிக்கட்டும். அமைச்சர் பேச எழுந்திருக்கும்போது ஏன் குறுக்கிட்டுத் தொந்தரவு செய்கின்றீர்கள் ? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

[2006 ஜனவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகள் இருக்கின்றன. பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** ஒரு நிமிடம் இருங்கள் அண்ணே ! (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள் அண்ணே, ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியாளர்களாலே கொண்டுவரப்பட்ட வாரியம், வேளாண் பெருமக்களுக்கோ, வேளாண் சார்ந்த விவசாயக் கூலித் தொழிலாளர் பெருமக்களுக்கோ சடுகளவும் நன்மை பயக்காது என்று உலகமே வியக்கத்தக்க அளவுக்கு இன்றைக்குத் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்கிற சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவந்து ஒரு கோடியே 37 இலட்சம் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டி, அந்தத் திட்டத்தைப் பாராட்டுவதற்கு மனம் இல்லை என்றாலும்கூட, அதை விமர்சனம் செய்யாமல் இருக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை விடுத்து, இந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? இதுதான் நாட்டு மக்கள் கேட்கின்ற கேள்வி கம்யூனிஸ்ட் கட்சியை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** நான் சொல்வது, நிரம்ப அவசரப்படுகிறீர்கள். அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அவசரப்பட்டீர்கள் என்றால் என்ன செய்வது? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே அந்தத் திட்டத்தைக் கொண்டுவரும்போது சர்க்கரை விவசாயிகளிடம் வசூலிக்க வேண்டும், ஆலையாளர்களிடம் வசூலிக்க வேண்டும் என்று ஒரு தவறான சட்டத்தைக் கொண்டுவந்து, அந்தத் தொகையை அவர்கள் வாங்க முடியாமல் அந்தத் திட்டத்திற்கு முட்டுக்கட்டையிட்டதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஒரே ஒரு நிமிடம். குற்றச்சாட்டு சொல்கிறார். அதற்காக பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.



2006 ஜனவரி 19]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முந்தைய திமுக. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அந்த வாரியத்தைப் பற்றியும் அதன் பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள் உழவர் பாதுகாப்புக்காகக் கொண்டுவந்த திட்டத்தைக் குறை சொல்லியும் இங்கே பேசினார்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடம். இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் கேட்ட கேள்வி--நம்முடைய அம்மா அவர்கள் இந்த உழவர் பாதுகாப்புத் திட்டம் கொண்டுவந்து, கொண்டுவந்த சில மாதங்களிலேயே அதனுடைய பலனை இப்போது உழவர்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய கனியைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு ஏன் இந்த வருத்தம் என்று தெரியவில்லை. நம்முடைய அமைச்சர் கேட்பது--, நம்முடைய அம்மா கொண்டுவந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? இதுதான் கேள்வி. (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து ஒரே ஒரு விளக்கம். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதற்கு முன்னாலேயே அமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு) இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை. நாங்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நாங்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். பேசுவதற்கு எங்களுக்கு (குறுக்கீடு) அரசின் கருத்தைத்தான் சொல்கிறேன். கருத்து என்ன என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். இரண்டு பேரும் நின்றுகொண்டிருந்தீர்கள் என்றால் எப்படி? சிவபுண்ணியம், பழனிசாமி இரண்டுபேருமே நின்றுகொண்டிருந்தீர்கள் என்றால் எப்படி? வேளாண்மைத் துறை அமைச்சர் பேசட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நான் சொல்கிற விளக்கத்தைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், இரண்டு பேருமே நின்றுகொண்டிருந்தீர்கள் என்றால் எப்படி? உட்காருங்கள், இரண்டு பேருமே நின்றுகொண்டிருந்தீர்கள் என்றால் யாரைப் பேசக் கூப்பிடுவது?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நாங்கள் சொல்வது என்னவென்றால், (குறுக்கீடு) அண்ணே! ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம் இருங்கள் அண்ணே! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி பேசி முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** நான் கோபப்படவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி, 2 மணித் துளிகளிலே பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது என்பது, ஓர் அரசு கொண்டுவருகிற திட்டம் என்பது இன்னோர் ஆட்சி வந்தால், அதை மாற்றக் கூடாது, அதை நிரந்தரமாகச் செயல்படுத்த வேண்டுமென்பதுதான். நாம் உழவர் திட்டத்தைக் கொண்டுவந்து...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** அந்தத் திட்டம் எந்தவகையிலும் பயன்படாத காரணத்தால்தான், (குறுக்கீடு) அந்தத் திட்டத்தால் என்ன பயன்? (குறுக்கீடு) நீங்கள் கொண்டு வந்த, கடந்த கால ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட அந்த வாரியத்தாலே (குறுக்கீடு) உழவர்களுக்கோ, விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கோ என்ன பயன்? (குறுக்கீடு) என்ன பயன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அன்வர் ராஜா. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** முடியவே முடியாது. நான் என்ன சொல்கிறேன் என்று கேட்க வேண்டும் இல்லையா? (குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நாங்கள் கேட்கிறோம், அந்தத் திட்டத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? (குறுக்கீடுகள்) கடந்தகால ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டத்தால் எந்தப் பயனும் இல்லை...

**திரு. ஜி. பழனிசாமி:** சொல்வதை ஏன் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். அதற்கப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) தவறான கருத்தே அல்ல. நீங்கள் தவறான கருத்து, தவறான கருத்து என்றால், அது எப்படி? (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல வாரியத்திற்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, ஒரேயொரு நிமிஷம், நான் பேசுகிறேன், இருங்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அனுமதி இல்லை. திரு. அ. அன்வர் ராஜா. திரு. பழனிசாமி உரையை முடித்துவிட்டார். திரு. அ. அன்வர் ராஜா. (குறுக்கீடு) இல்லையே? நீங்கள் இப்போது பேசவே இல்லையே? இரண்டு மணித் துளிகளில் உரையை முடிக்கச் சொன்னேன், உரையை முடிக்கவே இல்லையே, நீங்கள்? என்ன என்று பேசி முடியுங்கள். பேச்சை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போதும் சொல்கிறேன். அதை நான் தவறு என்றே சொல்லவில்லை. உழவர் பாதுகாப்புத் திட்டமே தவறு என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்று அமைச்சர் கேட்டார்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதுதான் சொல்கிறேனே, ஆதரிக்கிறோம். புரிந்து விட்டதா? ஆதரிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பா, ஆதரிக்கிறோம். ஆதரிப்பது மட்டும் இல்லை, உங்களைப் பாராட்டுகிறோம், இந்தத் திட்டத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், ஏற்கெனவே இருந்த வாரியத்தை ஏன் கலைத்தீர்கள் என்று கேட்கிறேன். அதுதானே கேள்வி. என்ன அவசியம் வந்தது அந்த நல வாரியத்தைக் கலைப்பதற்கு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்களே? (குறுக்கீடு) அதற்குத்தான் அமைச்சர் பதில் சொன்னார். நீங்கள் அடுத்த point ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை, ஒரேயொரு செய்தி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) பழனிசாமி, நீங்கள் பேசிய பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையாலே அதைத்தான் நான் சொல்ல வந்தேனே தவிர, அந்தத் திட்டத்தை நான் தவறு என்றே சொல்லவில்லை. நன்மை அடையவில்லை என்று சொல்லவில்லை. அந்த வாரியத்தோடு இணைத்திருந்தால் கண்டிப்பாக இது எந்தவொரு அரசு இருந்தாலும் நீக்க முடியாது என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன். (குறுக்கீடுகள்) சரி, விடுங்கள். (குறுக்கீடுகள்) சரி, விடுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களே, உட்காருங்கள். திரு. பழனிசாமி அவர்கள் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** சரி, நான் இப்போது அடுத்த பொருளுக்குப் போய்விடுகிறேன். இப்போது அந்தத் திட்டத்திலே ஒரு குடும்பத்திற்கு ஒரு அட்டைதான் கொடுக்கிறார்கள். அதையெல்லாம் தனி நபருக்காகக் கொடுப்பதற்கு முயற்சி பண்ணுங்கள். முடிந்தால் கொடுங்கள் இல்லையென்றால் விட்டுவிட்டுப் போங்கள்.

அப்புறம், தஞ்சை மாவட்டத்திலே, காவிரியின் வெள்ளத்தால் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டங்களிலே, நிறைய நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது பார்த்தீர்கள் என்றால் 17 சதவீதம் ஈரப் பதம் என்று பிடிக்கிறார்கள். விவசாயிகள் நிச்சயமாக நெல் கொள்முதல் நிலையத்திற்கு நெல்லைப் போடவே முடியவில்லை. அதைக் குறைக்க வேண்டும். நிறைய பாதிக்கப்பட்டிருக்கிறது.



அதேமாதிரி இப்போது பார்த்தீர்கள் என்றால் ஊக்கத் தொகை கொடுக்க முடியவில்லை. விவசாயிகளைப் பொறுத்தமட்டில் ஒரு குவிண்டாலுக்குக் குறைந்தபட்சம் 200 ரூபாயாவது அரசு ஊக்கத் தொகை வழங்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு குவிண்டாலுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும். அதேமாதிரி, ஏற்கெனவே நீங்கள் பார்த்தீர்கள் என்றால், நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கைகள் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அவர்களுடைய அறிக்கையைப் பார்க்கிறபோதெல்லாம் நான் பார்க்கிறேன், 100 மெட்ரிக் டன் தமிழகத்திலே உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று சொல்கிறார். வரவேற்கிறோம். என்ன கேட்கிறோம் என்றால், 645 கோடி ரூபாயைக் கடன் வட்டியைத் தள்ளுபடி செய்துவிட்டீர்கள் என்றால், 100 மெட்ரிக் டன்னை உற்பத்தி செய்துவிட முடியுமா விவசாயி? அனேகமாக எல்லோரும் சந்தியிலே நிற்கிறான், கோவணாண்டியாக நிற்கிறான் விவசாயி. 4 ஆண்டுக் காலமாக நட்ட நடவு, பட்டுப் போயிற்று. வெட்டிய கிணற்றிலே தண்ணீர் இல்லை. இந்தியாவிலேயே மகிழ்ச்சியாக இங்கு விவசாயம் செய்யுதாம். கடனையே கட்ட முடியாத நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடியுங்கள். கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இந்த ஆண்டு பார்த்தீர்கள் என்று சொன்னால், கடுமையாக இன்றைக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையாலே அவர்கள் பெற்றிருக்கிற கடன் சுமார் 2,000 கோடி ரூபாய்தான் இருக்கிறது. கவர்னரின் அறிக்கையிலேயே அதுதான் இருக்கிறது. இந்த 2,000 கோடியையும் வேளாண்மைக் கடனை நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அத்தோடு உரையை முடியுங்கள். திரு. அ. அன்வர் ராஜா. (குறுக்கீடு)

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு... (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** கொஞ்சம் இருங்கள், ஒரு வரியிலே உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடியுங்கள், முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு) சரி பேசுங்கள்.

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கடனைப் பொறுத்தவரைக்கும், அது மைய அரசு, நபார்டு வங்கி மூலம் கடனாகப் பெற்றுத் தருகிற கடன். அந்தப் பணத்தை இரத்து செய்ய வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் டெல்லிக்கு ஏற்கெனவே எழுதியிருக்கிறார்கள். அது மைய அரசினுடைய பணம். நபார்டு வங்கி மூலமாக வருகிற பணம். மாநில அரசு இரத்து செய்ய முடியாது. மைய அரசு இரத்து செய்ய வேண்டும். நீங்கள் மைய அரசிடம் சொல்லித்தான் நாம் அதை வற்புறுத்த வேண்டியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோதும் சரி, சுனாமியால் பாதிக்கப்பட்டபோதும் சரி, மத்திய அரசு நம்முடைய மாநில அரசுக்கு அதிகபட்ச நிதியைக் கொடுக்க வேண்டும் என்று இந்த சபையிலே நாங்கள் வலியுறுத்தியவர்கள். இன்றைக்கும்கூட எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பாரதப் பிரதமரைச் சந்தித்து மாநில அரசு கேட்கின்ற நிதியைக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். நீங்கள் வேண்டுமானால் இல்லையென்று சொல்லலாம். ஒட்டுமொத்தமாக, இருக்கிற கட்சிகளையெல்லாம் குறை சொல்லலாம். அது வேறு பிரச்சினை. இருந்தாலும் நாங்கள் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேமாதிரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான அறிக்கையை இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். நெல் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது ஹெக்டேருக்கு. வாழை எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. கரும்பு எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. பூராவும் புஞ்சை காணி நிலம் என்று சொன்னார்கள். அவர்களே ஏக்கருக்கு 8,000 ரூபாய் கொடுப்பதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த 8,000/– ரூபாயை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதோடு



மட்டுமல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருப்பார்கள் என்று நான் கருதினேன். அநேகமாக எங்களுடைய திருவாரூர் மாவட்டத்தில் சமீப காலத்தில்—நான் ஏதோ குற்றம் சொல்வதாக நினைக்காதீர்கள். சமீப காலத்திலே— சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போன நிலைமையிலே அங்கே இருக்கின்றது. அங்கு பார்த்தீர்கள் என்றால் தினந்தோறும்—அநேகமாக தினந்தோறும் என்று சொல்ல மாட்டேன்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றதையெல்லாம் பட்ஜெட் உரையிலே பேசுங்கள். (குறுக்கீடு) மற்றதையெல்லாம் பட்ஜெட் உரையிலே பேசுங்கள். (குறுக்கீடு) திரு. அன்வர் ராஜா. மற்றதையெல்லாம் பட்ஜெட் உரையிலே பேசுங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே 30 நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது. திரு. அன்வர் ராஜா. (குறுக்கீடு) திரு. அன்வர் ராஜா பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் சட்டம்–ஒழுங்கு கெடவில்லை. தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் சபையில் பதிய வைப்பதற்கு முயற்சி செய்கிறார். அதை அவர் தவிர்க்க வேண்டும் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் பட்ஜெட் உரையிலே பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்) பட்ஜெட் உரையிலே பேசுங்கள் அதையெல்லாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது சட்டம்–ஒழுங்கு கெட்டுப் போவதற்கும் சம்பவத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, அவரே சம்பவம் என்று சொல்லிக் கொண்டு, சட்டம்–ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்வது தவறான முன்னுதாரணமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா. (குறுக்கீடுகள்)

***திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மலர்களுக்குத் தலைநகரம் வசந்தம். வெள்ளி மணல்வெளிக்குத் தலைநகரம் சகாரா. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் பட்ஜெட் உரையிலே ஏதாவது வாய்ப்புக் கிடைக்கும்போது பேசுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை.

**திரு. அ. அன்வர் ராஜா:** அலைகளுக்குத் தலைநகரம் கடல்கள். பிள்ளை அரும்புகளின் தலைநகரம் அன்னை மார்பு. மலைகளுக்குத் தலைநகரம் இமயம். சிந்து பாட்டிற்குத் தலைநகரம் தென்றல் காற்று. மனிதனுக்குத் தலைநகராம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உரையை நான் துவங்குகின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. அ. அன்வர் ராஜா:** 'எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே' என்று ஒரு திரைப்படப் பாடல் உண்டு. அதைப்போல, தனி மனிதனுக்கு மட்டுமல்ல. ஒரு நாட்டிற்கும் இது பொருந்தும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பட்ஜெட் உரையிலே பேசும்போது பேசுங்கள். இவ்வளவு நேரம் உங்களைத்தான் பேச அனுமதித்தேன். இவ்வளவு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கும் உங்களுக்கு வாய்ப்பு அளித்தேன். இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்தேன். ஏற்கெனவே 5 மணித் துளிகளில் முடிக்கச் சொன்னேன். அதற்கு மேலும் 10 மணித் துளிகளுக்கு மேலே பேசியிருக்கிறீர்கள். உங்கள் விருப்பம்போலப் பேசுவதற்கு இது முடியாது. திரு. அன்வர் ராஜா, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அவையைவிட்டு வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் துக்ளக் நாளிதழில் காஷ்மீர் மாநிலத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் ஃபரூக் அப்துல்லாவினுடைய மகன் உமர் அப்துல்லா ஒரு பேட்டி அளித்திருந்தார். அந்தப் பேட்டியில் காஷ்மீருடைய நிலைமைகளை அவர் கோடிட்டுக் காட்டுகிறார். காஷ்மீர் ஒரு நல்ல வளமான மாநிலம். ஆனால் அந்த வளமான மாநிலத்திலுள்ள பிரச்சினை—என்ன பிரச்சினை என்பதை இந்த நாட்டுக்கு அவர் தெளிவாகத் தந்துகொண்டிருக்கிறார். அவர் சொல்லுகிறார்



காஷ்மீரைப் பொறுத்தவரை—காஷ்மீரிலே எந்தப் பொருளாதாரப் பிரச்சினையும் இல்லை. காஷ்மீரில் சொந்த வீடு இல்லாதவர்களே இல்லை. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திரு. அப்பாவு உட்காருங்கள். அவைத் தலைவர் அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*(உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவையைவிட்டு வெளிநடப்புச் செய்தார்.)*

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஷ்மீரினுடைய முன்னாள் முதலமைச்சர் ஃபரூக் அப்துல்லா அவர்கள்; அவருடைய மகன் உமர் அப்துல்லா, அவர் கடந்த வாரம் துக்ளக் இதழில் ஒரு பேட்டி தந்திருக்கிறார். அந்தப் பேட்டியில் அவர் சொல்கிறார்; "காஷ்மீரில் பிரச்சினை இருக்கிறது, ஆனால் அந்தப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை அல்ல. காஷ்மீர் வளமான மாநிலம். காஷ்மீரில் என்னுடைய தாத்தா கொண்டு வந்த சட்டத்தின் அடிப்படையில் எல்லோருக்கும் நிலம் வழங்கப்பட்டது. வீடு இல்லாதவர்களே காஷ்மீரில் இல்லை, காஷ்மீரிலே சேரிகள் இல்லை, காஷ்மீரிலே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை, காஷ்மீரிலே வறுமை இல்லை, பட்டினிச் சாவுகள் இல்லை, ஆனால் அங்கு இருக்கின்ற மக்களுடைய வாழ்வில் அமைதி இல்லை; நிம்மதி இல்லை; ஏனென்றால் வன்முறை, பயங்கரவாதம்." இது அவர் தந்த பேட்டியிலே சொல்லியிருக்கிறார். நான் அதைத்தான் இங்கு கவனப்படுத்த விரும்புகிறேன். அதற்குப் பிறகு பீஹார் மாநிலத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய நித்திஷ் குமார் அவர்கள், பொறுப்பேற்றுக் கொண்டவுடன் முதல் பேட்டியில் அவர் ஒரேயொரு கருத்தைத்தான் சொல்கிறார். அது என்ன கருத்து என்றால், "என்னுடைய இந்த வருங்கால 5 ஆண்டுக் கால ஆட்சியில், பீஹாரில் சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்துவதுதான் என்னுடைய ஆட்சியினுடைய மிகப் பெரிய இலட்சியமாக இருக்கும்" என்று அவர் சொல்கிறார். நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புவது, சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதுதான் தன்னுடைய இலட்சியம் என்று சொல்கிறாரே, எந்த இலட்சியத்திற்காக பீஹார் முதலமைச்சர் இப்படிச் சொல்கிறாரோ, எந்த நிம்மதி காஷ்மீரில் இல்லை என்று

காஷ்மீரினுடைய முன்னாள் முதலமைச்சர் வருத்தத்தினால் அவருடைய மகன் உமர் அப்துல்லா அவர்கள் சொல்லுகிறார்களோ, அந்த இலக்கை எல்லாம் தாண்டி அமைதிப் பூங்காவாக இன்றைக்குத் தமிழகத்தை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவைக்குள் 2001–இல் நாமெல்லாம் வந்தோம். வருவதற்கு முன்பு இந்தத் தமிழகம் எப்படி இருந்தது என்று பார்க்க வேண்டும். எங்கு பார்த்தாலும் மதக் கலவரம், எங்கு பார்த்தாலும் ஜாதிக் கலவரம், எங்கு பார்த்தாலும் இனக் கலவரம்—மதக் கலவரம், ஜாதிக் கலவரம், இனக் கலவரம்—இந்தக் கலவரங்களைக் கடந்த ஆட்சியாளர்களால் அடக்க முடியவில்லை. அடக்க முடியவில்லை என்பதோடு மட்டுமல்ல, காவல் துறையில் வீட்டில் இருக்கின்ற பெண்டு பிள்ளைகளே தெருவுக்கு வந்து எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்று கேட்டனர். கோவை நாடாளுமன்ற உறுப்பினர்—தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராமநாதன் அவர்கள், தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று தெருவுக்கு வந்து கேட்டார். தமிழகத்தில் இருக்கின்ற அன்றைய ஆட்சியாளர்களால், இங்கு சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்க முடியாமல் இராணுவம் வரவழைக்கப்பட்டது; மறந்துவிடக்கூடாது. இதுவரை இராணுவம் வரவழைக்கப்பட்டது இரண்டு முறைதான். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது ஒருமுறை, அதற்குப் பிறகு திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கோவையில் நடந்த கலவரத்தின்போது மற்றொரு முறை. பின்னர், இராணுவம் தமிழ்நாட்டிற்கு வரவழைக்கப்பட்டதில்லை. அம்மா அவர்கள் முந்தைய ஆட்சியில் முதலமைச்சராக இருந்தபோது பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, இங்கிருந்துதான் நம்முடைய போலீஸ் வெளி மாநிலங்களுக்குச் சென்று பாதுகாப்பு அளித்திருக்கிறதே தவிர, வேறு எங்கிருந்தும் போலீஸ் இறக்குமதி செய்யப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்குச் சட்டம்–ஒழுங்கை நேர்த்தியாகப் பராமரித்து இருக்கின்றவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2001–க்குப் பிறகு அந்த அமைதி வந்ததால்தான் தமிழகத்திலேயே 2001 வரை தமிழ்நாட்டை உலக வங்கி ஒதுக்கி வைத்திருந்தது. தமிழ்நாட்டின் பக்கமே உலக வங்கி தலைகாட்டவில்லை. 2001–க்குப் பிறகுதான் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான்—அம்மா அவர்கள் ஒரு தெளிவான நிலையை எடுத்ததற்குப் பிறகுதான்—பொருளாதார நடவடிக்கை எடுத்ததற்குப் பிறகுதான் உலக வங்கி இங்கு வந்தது. ஆசியாவிலேயே



உலக வங்கியினுடைய கிளையை எங்கே வைக்கலாம் என்று அப்படியே பார்த்துக்கொண்டு வந்து, இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களையும் பார்த்து, உலக வங்கியினுடைய back office, அந்த back office-ஐ எங்கே வைக்கலாம் என்று பார்த்தால் அதற்குத் தகுதியான இடம் அம்மா அவர்கள் ஆளுகின்ற சென்னைதான் என்று முடிவெடுத்து, உலக வங்கி தன்னுடைய அலுவலகத்தைச் சென்னையில் திறந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு சீராக சட்டம்–ஒழுங்கு பராமரிக்கப்படுகிறது என்பதற்கு இதைவிடச் சரியான எடுத்துக்காட்டுத் தேவையில்லை.

*பிற்பகல் 1–10*

அம்மா அவர்கள் இப்போது நிரம்ப கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்தியதன் விளைவாக, சென்னைக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் புதிய வீராணம் திட்டத்திலிருந்து உறுதி செய்யப்பட்டிருக்கிறது. சாலை மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. வீட்டுவசதி மேம்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வளவு கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டதற்குப் பிறகு, தடை இல்லாத மின்சாரத்திற்கு வசதி செய்யப்பட்டதற்குப் பிறகுதான் பன்னாட்டு நிறுவனங்கள் எல்லாம் சென்னையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். செல்ஃபோன்களின் ராஜா என்று சொல்லப்படுகின்ற "நோக்கியா" முதல், கார்களின் ராஜா என்று சொல்லப்படுகின்ற "B.M.W." வரை தன்னுடைய நிறுவனத்தைச் சென்னையிலே வந்து தொடங்க வேண்டுமென்று போட்டி போட்டுக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இப்படி ஓர் அருமையான சூழ்நிலையை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதை Business Standard, டெல்லியிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகை சொல்கின்றது: 'Tamil Nadu has climbed from the fifth spot to be the country's top State this year in terms of ease of business' -- 'தமிழ்நாடு ஐந்தாவது நிலையிலிருந்து எளிதில் தொழில் புரிவதற்கேற்ற கட்டமைப்பு வசதிகளைக் கொண்டிருக்கின்ற மிகச் சிறந்த மாநிலம் என்ற முதல் நிலையை டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே எய்தியிருக்கிறது' என்பது இந்தச் செய்திமூலம் சொல்லப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்கெல்லாம் என்ன காரணம்? சட்டம்–ஒழுங்கைச் சீராகப் பராமரித்ததுதான் காரணம். சட்டம்–ஒழுங்கைப் பராமரித்தது என்று நான் சொல்கிறபோது, வீரப்பனைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. அது இந்த கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே நான் அன்போடு என்னுடைய கருத்தை இதிலே பதியவைக்க விரும்புகிறேன். வீரப்பன் அவர்களை வீழ்த்தியது என்பது இரண்டு வெற்றி. ஒன்று தீவிரவாதத்தை ஒழித்தது, இன்னொன்று ஜனநாயகத்தைக் காத்தது. இதிலே ஜனநாயகத்தைக் காத்தது என்பது எங்கே வருகிறது என்றால், நான்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்—கவனப்படுத்த விரும்புகிறேன். இதிலே ஜனநாயகம் காக்கப்பட்டிருக்கிறது என்பது மிக முக்கியமான ஒன்று. என்னவென்றால், இதை ஓர் உதாரணத்தின்மூலம் நான் விளக்க விரும்புகிறேன். கடந்த ஆண்டு, 2004 ஆம் ஆண்டு அமெரிக்காவிலே ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் இன்றைய ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் அவர்கள் போட்டியிட்டார்கள். அவரை எதிர்த்து ஜான் கொர்ரி அவர்கள் போட்டியிட்டார்கள். இரண்டு பேருக்கும் கடுமையான போட்டி. யார் வெற்றி பெறுவார்கள் என்பதை யாராலும் கணிக்க முடியவில்லை. ஜார்ஜ் புஷ்தான் வெற்றி பெறுவார் என்று சில பத்திரிகையாளர்கள் எழுதினார்கள். இல்லை, இல்லை, ஜான் கொர்ரிதான் வெற்றி பெறுவார் என்று இன்னும் சில பத்திரிகையாளர்கள் எழுதினார்கள். இன்னும் சில பேர் இவரும் வெற்றி பெற முடியாது; அவரும் வெற்றி பெற முடியாது. அப்படியே யார் வென்றாலும் இரண்டு சதவீத வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெல்ல முடியும் என்று அவர்கள் சொன்னார்கள். தேர்தல் நெருங்கிக் கொண்டு வந்தது. வாக்குப் பதிவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு உலக வர்த்தக மையக் கட்டடத்தைத் தகர்த்தானே ஒசாமா பின்லேடன், அந்த ஒசாமா பின்லேடனுடைய அறிக்கை ஒன்று வந்தது. அந்த அறிக்கையிலே அவன் என்ன சொன்னான் என்றால், “சைத்தான் அமெரிக்காதான் எங்களுடைய எதிரி, அமெரிக்காவை மீண்டும் நிர்மூலப்படுத்தாமல் விடமாட்டோம்” — ஒசாமா பின்லேடனுடைய அறிக்கை. அந்த அறிக்கை பத்திரிகையிலே வந்தது, மீடியாக்களுக்கு வந்தது, எல்லா இடங்களுக்கும் போனது, இது மக்களுடைய பார்வைக்குப் போனதற்குப் பிறகு யாருக்கு ஓட்டுப் போடலாம் என்று அதுவரை முடிவு செய்யாமல் இருந்த அந்த இரண்டு சதவீத மக்கள், அமெரிக்காவைக் காப்பது என்றால், நிச்சயமாக ஜார்ஜ் புஷ்ஷுக்கே போட்டுவிடுவோம் என்று முடிவு செய்து ஜார்ஜ் புஷ்ஷுக்கு அந்த ஓட்டைப் போட்டார்கள். ஜார்ஜ் புஷ் மீண்டும் வெற்றி பெற்றார். இது நான் சொல்வதல்ல.



Washington Post என்று அமெரிக்காவிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகை தேர்தலுக்குப் பிறகு எழுதிய உண்மை நிலவரமாகும். என்ன நடந்திருக்கிறது பார்த்தீர்களா? ஒரு தீவிரவாதியினுடைய அறிக்கை. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலையே மாற்றியிருக்கிறது. அப்படி மாற்றியிருக்கிறது என்றால், எந்த அளவு தீவிரவாதிகளை ஒழித்து, ஜனநாயகத்தை அம்மா அவர்கள் காத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதுபோல் தமிழ்நாட்டிலும் நடந்திருக்கிறது.

*பிற்பகல் 1–15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு தேர்தலில் இந்தத் தீவிரவாதி வீரப்பனுடைய கேசட்டை எடுத்து, தி.மு.க. தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தினார்களே, நம்முடைய ஊரிலேயே இதற்கு உதாரணம் இருக்கிறது, தீவிரவாதம் ஜனநாயகத்தைப் பாதித்திருக்கிறது என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் வேறு தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவேதான் வீரப்பனை ஒழித்தது என்பது, தீவிரவாதத்தை ஒழித்தது என்பது மட்டுமல்ல, ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வீரப்பனை ஒழிக்க வேண்டுமென்று உண்மையிலேயே அம்மா அவர்கள் மட்டுந்தான் நினைத்தார்கள். தி.மு.க. நினைக்கவில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதி நினைக்கவில்லை. இதுதான் முக்கியமான விஷயம். அம்மாதான் S.T.F.–ஐ உருவாக்கினார்கள். அம்மா அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட ஒரு சிறு படையாக இருந்த வீரப்பனை அவர்களுடைய முந்தைய ஆட்சியில் குறைத்து, பத்துக்கும் குறைவான ஒரு குழுவாக ஆக்கினார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக தி.மு.க. ஆட்சி வந்தது. தி.மு.க. தலைவர் ஆட்சிக்கு வந்தார். அவர் ஆட்சிக்கு வந்த உடனேயே என்ன சொன்னார்? வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு அளிக்கிறோம் என்று தனது ஆட்சியைத் துவக்கினார். வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு என்று ஆட்சியைத் துவக்கியதற்குப் பிறகு வீரப்பனுடைய கூட்டாளிகளுக்கு எல்லாம் அரசு தூதுவர் என்ற அந்தஸ்தைத் தந்தார். தந்தாரா, இல்லையா? இன்னொன்றும் சொன்னார். வீரப்பனின் தீவிரவாதம், தமிழ்த் தீவிரவாதமாக இருக்குமானால், அதில் குறைகாண முடியாது என்று சொன்னார். ஆனால் அம்மா அவர்கள், இப்போது ஆட்சி பொறுப்பேற்ற பிறகு என்ன நடந்தது என்பதை நீ[illegible]ண்டும்.



227003
சென்னை-600 008

நான் இன்னொன்றையும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு கருத்தைப் பதியவைக்க விரும்புகிறேன். அம்மாவினுடைய முந்தைய ஆட்சியில் வீரப்பன் ஒரு சிறு குழுவாகக் குறைக்கப்பட்டான். ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ஒரு சம்பவம் நடந்தது. பவானிக்கு அருகே தாளவாடி என்று ஒரு காவல் நிலையம். அந்தக் காவல் நிலையத்தில் திடீரென்று ஒரு நாள் வீரப்பன் குழு அங்கு வந்து, அந்தக் காவல் நிலையத்தைத் தாக்கி உள்ளே போய் சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் எல்லோரையும் lock-up -க்குள்ளே தள்ளி கதவை மூடிவிட்டு, பூட்டை பூட்டி எடுத்துக் கொண்டு ஆயுதங்களை எல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு காட்டுக்குள்ளே போய்விட்டது. இது திமுக ஆட்சியிலே நடந்தது. மறந்துவிடக் கூடாது. அம்மா அவர்களுடைய ஆட்சி அவனிடமிருந்து ஆயுதத்தைப் பிடுங்கியது. தி.மு.க. ஆட்சியில் வீரப்பன் அரசாங்கத்திடமிருந்து ஆயுதத்தைப் பிடுங்கிக் கொண்டு காட்டுக்குள்ளே போனான். அப்படியானால் வீரப்பனை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் தி.மு.க.-வுக்கு இல்லை. இதை தயவுசெய்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதிலே இரு வேறு கருத்துகள் இல்லை. ஒரே வரியிலேயே நான் சொல்ல விரும்புகிறேன். வீரப்பனைக் காப்பாற்ற வேண்டுமென்பது கருணாநிதியினுடைய இலட்சியம். வீரப்பனிடமிருந்து இந்த நாட்டையும், மக்களையும் காப்பற்ற வேண்டுமென்பது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இலட்சியம் (மேசையைத் தட்டும் ஒலி) வழக்கம்போல் அம்மா அவர்களுடைய இலட்சியம்தான் இப்போது வென்றிருக்கிறது. அதனாலதான் வீரப்பனை, ஒழித்ததற்கு பிறகு எல்லோரும் பாராட்டினார்கள். 'இந்து' பத்திரிகை சொல்கிறது: "A lot of credit for bringing the Veerappan saga to an end must surely go to the Tamil Nadu Chief Minister, who redoubled the effort to capture the brigand after she returned to power in 2001"—எல்லா credit-உம் அம்மாவுக்குதான் என்று சொல்கிறது. எல்லா credit-உம், பெருமையும், புகழும் வீரப்பனைப் பிடித்ததில், வீரப்பனை ஒழித்ததில் இருக்கின்ற அவ்வளவும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் என்று, நம்மை விமர்சனம் செய்வதையே கரும்பு தின்பதைப்போல் கருதும் 'இந்து' பத்திரிகைகூட, மனந்திறந்து அம்மா அவர்களைப் பாராட்டுகிறது என்பதை நான் அன்போடு சுட்டிகாட்ட விரும்புகிறேன். அந்த அளவுக்கு டாகடர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டம்-ஒழுங்கை இன்று பாதுகாத்து வருகிறார்.



இன்னொன்று, நேற்றுகூட நம்முடைய சபையில் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே தெரிவித்திருக்கிறார்கள், நானும் சொல்ல விரும்புகிறேன். இப்போது மிகப் பெரிய மழை வெள்ளத்திலே நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். அரசு கேட்ட நிவாரண உதவியை மத்திய அரசு தரவில்லை. இருந்தாலும் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புவது மும்பை நகரத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். சரி. தமிழகத்திற்கு அம்மா அவர்கள் போனதற்கு பிறகு ஆயிரம் கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். ஒத்துக்கொள்வோம். ஒரிசாவிலே இடர்பாடு ஏற்பட்டது நிதி ஒதுக்கிடப்பட்டிருக்கிறது. ஒப்புக்கொள்வோம். நம்முடைய பிரதமர் அவர்கள் ஒரு 4 நாட்களுக்கு முன்பு அந்தமானுக்குச் சென்று வந்துவிட்டு ரூ. 2,600 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். சரி ஒப்புக்கொள்வோம். நாம் வேண்டாமென்று சொல்லவில்லை. ஒப்புக் கொள்வோம். ஆனால் நான் கேட்க விரும்புவது மழை இல்லை, வறட்சி இல்லை, வெள்ளம் இல்லை, எதுவுமே இல்லை. எந்த இயற்கை இடர்பாடும் இல்லை. ஒன்றும் இல்லாமல் 3,000 கோடி ரூபாயை நீங்கள் பீகாருக்கு ஒதுக்கித் தந்திருக்கிறீர்களே, என்ன காரணம்? அதற்கு என்ன காரணம் இருக்கிறது? சொல்லுங்கள் பார்க்கலாம். அதற்கு அரசியல்தான் காரணம். வேறு ஒன்றுமில்லை. 29 எம்.பி.-க்கள். அந்த எம்.பி.-க்கள் ஆதரவு வேண்டும். அதற்காக நீங்கள் ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள். அவ்வளவுதான். அரசியல்தான் காரணமே தவிர, வேறு என்ன காரணம் இருக்கிறது. நான் அன்போடு கவனப்படுத்த விரும்புகிறேன். இந்தியாவில் இருக்கின்ற நிதியமைச்சர்களிலே நிரம்ப நாட்கள் நிதியமைச்சராக இருந்தவர்கள், அந்த நிதியமைச்சர் பதவியை நிரம்ப நாள் வகித்தவர்கள் தமிழர்கள்தான். முதல் நிதியமைச்சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், தமிழர். டி.டி. கிருஷ்ணமாச்சாரி, தமிழர். சி. சுப்ரமணியம், தமிழர். ஆர். வெங்கட்ராமன், தமிழர். இப்போது இருக்கிற நம்முடைய சிதம்பரம் அவர்களும் தமிழர்தான். தமிழர்களிடம்தான் 16 ஆண்டுகளுக்குமேல் அந்த நிதியமைச்சர் பதவி இருந்திருக்கிறது. சி. சுப்ரமணியம் அவர்கள் இருக்கும்போது, வெங்கட்ராமன் அவர்கள் இருக்கும்போது, கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இருக்கும்போது ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் இருக்கும்போது நிதிகள் வந்து குவிந்தன. ஆனால் நான் சொல்ல மாட்டேன். இப்போது ஒரு நிதியமைச்சர் இருக்கிறார், நிதி வராமல் தடுப்பதற்கென்று இருக்கிறார். அவ்வளவுதான். அவர் செய்கிற வேலை அதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) நிதியே வந்துவிடக் கூடாது. தமிழ்நாட்டிற்கு வந்து விடக்கூடாது, அதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காகவே ஒரு நிதியமைச்சர் இருக்கிறார். அதை

நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சில மாதங்களுக்கு முன்பு, அமெரிக்காவில் 'காத்ரீனா' என்று ஒரு புயல் வந்தது. அமெரிக்கர்கள் உதவுவதற்கு முன்பு, பகை நாடு கியூபா, பக்கத்திலே இருக்கிறது. கியூபாவை ஒழிக்க வேண்டுமென்றுதான் அமெரிக்கா எப்போதும் நினைக்கிறது. ஆனால் கியூபாவினுடைய அதிபர் Fidel Castro, இங்கேயிருந்து 1,100 டாக்டர்களை அனுப்புகிறார். 26 டன் மருந்துகளை அனுப்புகிறார். அது தனி நாடு. பகை நாடு. அவர்களே உதவுகிறார்கள். ஆனால், இந்தியாவில் தமிழகம் இருக்கிறது. Be Indian என்கிறோம். Buy Indian என்கிறோம். இந்தியனாக இரு என்கிறோம். இந்தியப் பொருள்களை வாங்கு என்கிறோம். ஒரே இந்தியா என்கிறோம். இந்த இலக்கை எல்லாம் நாம் சொல்கிறோம். ஆனால், நீங்கள் நிதி தர மாட்டீர்கள். ஏன் கொடுக்க மாட்டீர்கள்? இது மாற்றுக் கட்சி அரசு. அம்மா அவர்களுக்குப் புகழ் வந்துவிடும் என்பதால் நாங்கள் நிதி தரமாட்டோம் என்று சொல்கிறீர்கள். இது என்ன பொருள்? இது எங்களுக்கு எதிரான வேலை அல்ல. நீங்கள் நிதி தரமாட்டோம் என்று சொன்னால், இதில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இது மக்களுக்கு எதிரான ஒரு செய்தி என்பதைத் தயவுசெய்து இந்தநேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-20*

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker, Sir. *(குறுக்கீடுகள்)*

**திரு. அ. அன்வர் ராஜா:** நேற்றையதினம் *(குறுக்கீடு)* நேற்றையதினம் பேசிய... *(குறுக்கீடுகள்)* நேற்றையதினம் பேசிய... *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker, Sir.

**திரு. அ. அன்வர் ராஜா:** உட்காருங்கள். ஏன் time waste பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். நான் நல்ல விமர்சனத்தைப் பண்ணுகிறேன். அவ்வளவுதான். நேற்றையதினம் பேசிய நம்முடைய தி.மு.க. உறுப்பினர் அன்பழகன் அவர்கள் ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவருக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். நேற்றையதினம் பேசிய... *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.



**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 42 பேர் சென்னையிலே இறந்தார்கள். நெஞ்சை உருக்குகின்ற ஒரு விஷயம். யாரும் இதை மறக்கமுடியாது. அம்மா அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்குப் போனார்கள். நிவாரண உதவிகளை வழங்கினார்கள். ஆறுதல் சொன்னார்கள். அதை டி.வி-யிலே நாம் எல்லாம் பார்த்தோம். அதைப் பற்றி நேற்று பேசிய தி.மு.க. உறுப்பினர் கொச்சைப்படுத்திச் சொன்னார். அவர் என்ன சொன்னார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் அப்படிச் சொன்னார். அந்த மக்கள், அம்மா அவர்களைப் பார்த்தவுடன் குமுறி வருகின்ற அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அழுது புலம்பினார்கள். அம்மா அவர்கள் அந்தச் சகோதரிகளை அரவணைத்து ஆறுதல் சொன்னார்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம். அன்றையதினம் அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு வந்து எங்களுடைய தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்று பகல் உணவு அருந்தவில்லை. உணவை மறுத்தார்கள். அப்படியொரு நிகழ்ச்சி அங்கே நடந்திருக்கிறது. மிகச் சோகமான நிகழ்ச்சி. ஆனால், அதை ஓர் உறுப்பினர் இவ்வளவு கீழே இறங்கி வந்து விமர்சிக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிவிக்க விரும்புகிறேன். நம்மிடையே பலர் உருவத்தில் மனிதர்களைப் போல் இருக்கிறார்கள். உடையில் மனிதர்களைப் போல் இருக்கிறார்கள். ஆனால், உள்ளத்தில் மனிதர்களாக இல்லை. உள்ளத்தாலும், உணர்வுகளாலும் மனித நேயம்மிக்க மாபெரும் தலைவராக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அவர்கள் இவ்வளவு நடவடிக்கைகளைத் தாங்கிக் கொண்டிருக்கக்கூடிய இதயத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தி.மு.க. உறுப்பினர் இங்கு இல்லை. அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது. அவருக்கு கண்ணதாசன் பாடல் வரிகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பாடல்: 'தவறுக்குத் துணிந்த மனிதன் அழுவதில்லையே; தவறுக்குத் துணிந்த மனிதன் அழுவதில்லையே; தவறியும் வானம் மண்ணில் விழுவதில்லையே'. இது கவியரசர் கண்ணதாசன் பாடல். 'தவறுக்குத் துணிந்த மனிதன் அழுவதில்லையே; தவறியும் வானம் மண்ணில் விழுவதில்லையே'. இதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் இன்னொன்றைச் சொன்னார். ஆரம்பிக்கும்போதே சண்டைக்குத்தான் வருகிறார். இதை எங்குப் புரட்டிப் பார்த்தாலும்

45 வருகிறது. ஐந்தும், நான்கும் ஒன்பது வருகிறது என்று சொல்கிறார். வரட்டும். நாங்கள் இல்லை என்று சொல்லவில்லையே! 57 point-கள் போட்டிருக்கிறோம். Paragraph அது ஏழும், ஐந்தும் பன்னிரெண்டு, மூன்று வருகிறது. அது ஒன்பது வரவில்லை. சரி, ஒரு தர்க்கத்திற்காக ஒப்புக்கொள்கிறேன் என்றாலும், நான் கேட்கிறேன். உங்கள் தலைவர் என்ன பகுத்தறிவுப் பகலவனா? உங்கள் தலைவர் என்ன பகுத்தறிவுப் பகலவனா? ஏன் மஞ்சள் துண்டைப் போட்டிருக்கிறார்? ஒன்று, மஞ்சள் துண்டு வேண்டுமா? பகுத்தறிவை விட்டுவிடுங்கள். இல்லை, பகுத்தறிவு வேண்டுமா? மஞ்சள் துண்டை விட்டுவிடுங்கள். இரண்டையும் எப்படிப் போட்டுக்கொண்டிருக்க முடியும்? மஞ்சள் துண்டைப் போட்டுக்கொண்டு திருமண விழாவிலே கலந்துகொண்டு பேசுகிறபோது, வாழ்க்கையைத் தீர்மானிப்பது பஞ்சாங்கம் அல்ல, பகுத்தறிவுதான் என்று பேசுகிறபோது, மஞ்சள் துண்டைப் போட்டுக்கொண்டு எப்படிப் பேச முடியும்? நான் பெரியாரின் தொண்டன். பெரியாருடைய கொள்கைக்காக எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருக்கிறேன் என்று மஞ்சள் துண்டைப் போட்டுக்கொண்டு எப்படிப் பேசமுடியும்? அப்படிப் பேச முடியாது. எனவே, நீங்கள் பகுத்தறிவுவாதி அல்ல. கடவுள் மறுப்பு கொள்கையில்கூட, தந்தை பெரியாரிலேயிருந்து பேரறிஞர் அண்ணா கொஞ்சம் மாறுபட்டார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதிலிருந்து மாறுபட்டார்கள். அது வரிசையாக வந்திருக்கிறது. பேரறிஞர் அவர்கள் மாறுபட்டார்களா, இல்லையா? நான் பிள்ளையாரையும் உடைக்க மாட்டேன், பிள்ளையாருக்குத் தேங்காயையும் உடைக்க மாட்டேன் என்று சொன்னாரா, இல்லையா? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பதை நான் தடுக்கமாட்டேன் என்று சொன்னார்களா, இல்லையா? அப்படி வந்ததா, இல்லையா? எனவே, நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போதுகூட சங்கரமடத்திலிருந்து வந்த, அவர்களுடைய தலைவரின் பிறந்த நாளுக்கு வந்த அந்தத் தட்டை பயபக்தியோடு வாங்கிக்கொள்கிறார். வாங்கிக் கொண்டாரா, இல்லையா? நாம் தொலைக்காட்சியிலே பார்த்தோமா, இல்லையா? இது நடந்ததா, இல்லையா? எனவே, நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று. இந்த ஊழல் அரசை மக்கள் அகற்றுவார்கள் என்கிறார். என்ன ஊழல் அரசு? மத்தியிலே நட்வர்சிங் சம்பந்தமாக ஒரு ஊழல் பிரச்சினை வந்தது. எல்லோரும் பார்த்துக்



கொண்டிருக்கிறார்கள். பிரதமர் பதைபதைக்கிறார். எப்படி இதைச் சமாளிப்பது என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், முதன்முதலில் அறிக்கை எங்கிருந்து வந்தது? தி.மு.க. தலைவர்தான் அறிக்கை விட்டார். "நட்வர் சிங்-ஐ இதை வைத்து ராஜினாமா பண்ணச்சொல்லி வற்புறுத்துவதை ஏற்க முடியாது". நீங்கள்தானே முதலில் அறிக்கை விட்டீர்கள்? ஆனால், அதற்குப் பிறகு என்ன நடந்திருக்கிறது? நீங்கள் தயவு செய்து கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். அவர் இலாகா இல்லாத அமைச்சராக ஆக்கப்பட்டார். அதற்குப் பிறகு ராஜினாமா செய்துவிட்டார். ஆனால், இந்த அரசைப் பார்த்து ஊழல் என்று எப்படிச் சொல்லமுடியும்? நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விவரங்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஜூலை மாதம் 2003 ஆம் ஆண்டு 12,130 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். நான்கே நாட்களில் அரசுப் பணியாளர்களையும் select பண்ணிவிட்டோம். இந்த 12,130 அரசுப் பணியாளர்களையும் select பண்ணிவிட்டோம். இந்த 12,130 அரசுப் பணியாளர்கள் Employment Office மூலமாக seniority அடிப்படையில் உடனே select பண்ணிவிட்டோம். எல்லாருக்கும் Appointment Order. யாருக்கு order கிடைக்கும் என்று அவர்களுக்கே தெரியாது. வீட்டிலே போய்க் கொடுத்தார்கள், கூப்பிட்டுக் கொண்டுவந்து கொடுத்தார்கள், Collectorate-லேயிருந்து கொடுத்தார்கள், 12,130 பேருக்குக் கொடுத்தார்கள். ஒரு சிறு தவறு இந்த நியமனத்திலே நடந்திருக்குமா? யாருடைய பரிந்துரையிலாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் யாருடைய பரிந்துரையிலாவது இந்த நியமனம் நடந்தது என்று சொல்லமுடியுமா?

டாஸ்மாக் ஊழியர்களாக 33 ஆயிரம் பேர் பணியில் இப்போது அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். கடையினுடைய மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள், bar மேற்பார்வையாளர்கள் 33 ஆயிரம் பேர் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில், கல்வித் துறையிலே 58,252 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறையில் 9,527 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையில் 18,183 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 11,826 இரண்டாம் நிலை ஆண் காவலர்கள், 4,366 இரண்டாம் நிலை பெண் காவலர்கள், 961 பெண் உதவி ஆய்வாளர்கள், 678 தீயணைப்பாளர்கள், 224 ஆண் சிறை வார்டன்கள், 128 பெண் சிறை வார்டன்கள் என்று காவல் துறையில் 18,183 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறையில் 1,699 உதவி மருத்துவர்கள், 2,322 தற்காலிக உதவி மருத்துவர்கள்,

876 கிராம சுகாதாரச் செவிலியர்கள், 215 மருந்தாளுநர்கள், 4,415 செவிலியர்கள், ஆகமொத்தம் 9,527 பேர் நியமிக்கப்பட்டார்கள்.

ஆகமொத்தம், 1,31,122 பேர் கடந்த 4¾ ஆண்டுக் கால ஆட்சியில், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் வேலைவாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அன்போடு தெரிவிக்க விரும்புகிறேன். இதில் எங்காவது, எந்த இடத்திலாவது, எந்தத் துறையிலாவது, எந்த நியமனத்திலாவது ஒரு சிறு குறை இருந்தது, ஒரு சிறு ஊழல் இருந்தது என்று சொல்ல முடியுமா? யாராவது சொல்ல முடியுமா? யாரும் சொல்கிறார்களா? இதுவரை சொன்னார்களா? இல்லை. இப்படியொரு நியமனம் இதுவரையில் எந்தக் காலத்திலும் நடந்ததில்லை. அவ்வளவு fair–ஆக நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) நடந்ததா, இல்லையா? தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய நம்முடைய பழனிசாமி அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டம் பற்றிச் சொன்னார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். அது நீதிமன்றத்திலே இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) அது நீதிமன்றத்திலே இருக்கிறது, உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசி முடியுங்கள், முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசவேண்டும். (குறுக்கீடு) கடைசியாக முடியுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** அதிலே 15–1–2006 அன்றைய நிலவரப்படி, இந்த 15 ஆம் தேதி வரையில், உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 77,774 பேர் மாநிலம் முழுவதும் பயனடைந்திருக்கிறார்கள். ரூ.29,46,56,300/–, 15 ஆம் தேதி வரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அன்புடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இது மக்களைக் காப்பாற்றுகின்ற திட்டம். 80 சதவிகிதம் மக்களுக்குப் பயனளிக்கிற திட்டம். இந்தத் திட்டம் நிச்சயமாக மிகப் பெரிய வெற்றியை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் அன்போடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனக்குத் தெரிய தமிழக மக்கள் ஒன்று திரண்டது இரண்டு முறைதான்.



ஒன்று, இந்தி எதிர்ப்புப் போராட்டம். அது மக்கள் ஆதரித்த போராட்டம் என்பதால் மிகப் பெரிய வெற்றி அடைந்தது. இன்னொன்று, 1972–ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நீக்கப்பட்டபோது, நாட்டு மக்கள் எல்லாம் திரண்டு நின்று ஒரு மிகப் பெரிய போராட்டத்திற்கு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நானும் இப்போது கவனப்படுத்த விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்கள் நன்றி மிக்கவர்கள். வரும் தேர்தலில் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அம்மா அவர்களைக் காப்பாற்ற மக்கள் திரளப் போகிறார்கள்; நீங்கள் மிரளப் போகிறீர்கள்; தோல்விப் பள்ளத்தாக்கிலே உருளப் போகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** சார், நான் point of order கேட்டபோது கொடுக்கிறேன் என்று சொன்னீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன் பேசுங்கள். (குறுக்கீடு) என்ன? point of order, என்ன?

**திரு. சி. ஞானசேகரன்:** மத்திய அரசைப் பற்றிச் சொன்னதற்கு, நான் கேட்டுத்தானே ஆகவேண்டும்? party நாங்கள் உட்கார்ந்திருக்கிறோம் அல்லவா? Mr. Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு, இப்போது கொடுக்கவில்லை என்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய அரசைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு point of order கிடையாது. (குறுக்கீடு) அதைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு point of order கிடையாது. முதலில் இது point of order–லேயே வராது. சட்டசபை விதியை முதலில் போய்ப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடு) திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மத்திய அரசைப் பற்றிச் சொல்லும்போது, நாங்கள் விளக்கம் அளிக்க வேண்டுமல்லவா? சபாநாயகர் அவர்களே, நான் point of order கேட்டபோது, தாங்கள் பேச வாய்ப்புத் தருவதாகச் சொன்னீர்கள்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நாளைக்கு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது சொல்லச் சொல்லுங்கள். அவையின் அனுமதியுடன் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லாமல் பேசக்கூடாது என்கிற அடிப்படை விதியை முதலில் புரிந்துகொள்ளுங்கள். திரு. ஞானசேகரன், உட்காருங்கள், (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் பேசுவது முறைகேடானது, உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன் பேசுங்கள். ஒலிபெருக்கியைப் பார்த்துப் பேசுங்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வருடத்திலே ஜனவரி 31–ஆம் தேதி ஆளுநர் உரை இந்த அவையிலே நிகழ்த்தப்பட்டபோது 33 பக்கங்கள்; இப்போது 2006, ஜனவரி 13 ஆம் தேதி 45 பக்கங்களைக் கொண்ட ஒரு அறிக்கை, இங்கே படிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைப் படித்த நேரத்திலே, எங்களுடைய ஊரிலே நடந்த ஒரு நிகழ்ச்சிதான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. வசதி படைத்த ஒருவரிடம் உதவி கேட்டு ஓர் ஏழை சென்று இருக்கிறான். அவன் என்ன சொன்னான் என்றால், 'நான் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறேன்; சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆகிவிட்டன; இப்படிப் பசித்துக் கொண்டிருக்கிற எனக்கு ஏதாவது உதவி செய்யுங்கள்' என்றான். உடனே அந்தப் பெரியவர் என்ன பதில் சொன்னார் என்றால், நீ வறுமையிலே வாடுவது உனக்கு மிகவும் நல்லது. ஏனென்றால், நீ எந்த அளவிற்கு வறுமையிலே கஷ்டப்படுகிறாயோ உனக்கு சொர்க்க இராஜ்யம் கிடைக்கும். சொர்க்க இராஜ்யத்திலே போனால் உனக்குப் பால் பாயாசமும் பாலடையும் கிடைக்கும். ஆகவே, அந்த பால் பாயாசமும் பாலடையும் உனக்குக் கிடைக்கும் என்பதனாலே நீ இங்கே பசியோடு இருப்பது உனக்கு நல்லது என்றார். அதுதான், இந்த ஆளுநர் உரையைப் படித்துப் பார்த்த நேரத்திலே எனக்கு ஏற்பட்டது. (குறுக்கீடு) ஏனென்றால், நான் சொல்வேன்



(குறுக்கீடு) ஏனென்றால் (குறுக்கீடு) பாலடையில், பால் பாயாசம். (குறுக்கீடு) அதாவது, மூன்று வருடங்கள் கடினமான வறட்சியை இந்த மாநிலம் சந்தித்தது; அடுத்த வருடம் சுனாமியைச் சந்தித்தது; ஐந்தாவது வருடத்திலே மிகப்பெரிய வெள்ளப் பெருக்கைச் சந்தித்தது. இந்த இயற்கையினுடைய சீற்றங்கள் காரணமாக, இந்தக் காலநிலை காரணமாக, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதுமான நிவாரணம் அளிப்பதற்கு இந்த அரசால் முடியவில்லை என்பது ஓர் உண்மை. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) It is my opinion. நான் சொல்கிறேன். I am going to explain. அதாவது இன்று வெள்ளத்தால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி ஏற்பட்டபோதும், சுனாமி ஏற்பட்டபோதும், சமீபத்தில் வெள்ளம் ஏற்பட்டபோதும், முழுமையாக பாதிக்கப்பட்ட அத்துணை மக்களுக்கும் நிவாரணம் முழுமையாக வழங்கப்பட்டு, எந்த இடத்திலேயும் புகார் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் யாருக்காவது நிவாரணம் வழங்காமல் பாதிப்பு ஏற்பட்டிருந்து, குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். பொத்தாம் பொதுவாக அரசின்மீது குற்றம் சொல்லவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் உரையாற்றுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் நிவாரணம் கிடைத்ததாகச் சொல்கிறார். யார் பாதிக்கப்பட்டு... (குறுக்கீடு) அந்தக் குற்றச்சாட்டுக்கு நான் ஒரு எடுத்துக்காட்டைச் சொல்கிறேன். தருமபுரி மாவட்டத்திலே... (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே நேற்று தடியடி உட்பட கண்ணீர்ப் புகை பிரயோகம் உட்பட நடந்திருக்கிறதே? பாதிக்கப்பட்ட மக்கள் வெள்ள நிவாரணம் வேண்டுமென்றுதானே மறியல் பண்ணியிருக்கிறார்கள்? நேற்றையதினம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். வறட்சி ஏற்பட்டபோதும், சுனாமி ஏற்பட்டபோதும் வெள்ளச் சேதம் ஏற்பட்டபோதும் உரிய நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. வேறு எங்காவது வழங்கப்படவில்லையென்றால், நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். ஏதாவது நிகழ்ச்சி இருந்தால் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

*பிற்பகல் 1–35*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் வேண்டுமென்றே சில எதிர்க்கட்சிகள் பாதிக்கப்படாதவர்களைத் தூண்டிவிட்டு அரசியல் காரணங்களுக்காக சில இடங்களிலே பிரச்சினையை அவர்கள்தான் உருவாக்குகிறார்களே தவிர, பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் முழுமையாக நிவாரணம் பெற்றிருக்கிறார்கள். நான் நேரடியாக பார்த்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இது உண்மைக்கு மாறானது. இன்று பத்திரிகை செய்தி வந்திருக்கிறது. தருமபுரி மாவட்டத்திலே ஓடசல்பட்டி அதாவது தருமபுரியிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில், அந்தப் பக்கத்திலே பாதிக்கப்பட்ட மக்கள் மறியல் செய்து, அவர்களைக் காவல் துறையினர் தடியடி நடத்தி அவர்கள் விரட்டப்பட்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், அங்கே relief கொண்டுபோகப்பட்ட நேரத்தில், யதார்த்தத்திலே, பாதிக்கப்பட்ட பலருடைய பெயர்கள் இல்லை. ஆனால் பாதிக்கப்படாதவர்களுடைய பெயர்கள் சேர்க்கப்பட்டு பொருள்கள் வழங்கப்பட்டதன் காரணமாக... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்களே சொல்கிறார்கள். அந்த மாவட்டத்தின் அமைச்சர்தான் அவர்.

*** மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது முழுமையும் தவறான தகவல். ஓடசல்பட்டி கூட்டு ரோடிலே மறியல் செய்யப்பட்டதாகக் கூறுகின்ற இடத்திலே அங்கே கிராமம் இல்லை. அருகில் இருக்கின்ற மணியம்பாடி கிராமத்திலே 1742 குடும்ப அட்டைகள் உள்ள அந்தக் கிராமம், அங்கே பாதிக்கப்பட்டவர்கள் 371 நபர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அங்கே அனுமதி அளிக்கப்பட்டது. அந்த 371 நபர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு, நிவாரணம் வழங்குகின்ற சூழ்நிலையிலே 20 ஆம் தேதி வழங்குவதாக



அறிவிக்கப்பட்டிருந்தது. அதை 17 ஆம் தேதியன்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற தேவையற்ற புல்லுருவிகள் தூண்டிவிட்டதன் காரணமாக 18 ஆம் தேதியன்று ஒரு மறியல் நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலே சென்று வட்டாட்சியர், மேலும் கோட்டாட்சியர் ஆகியோர் எல்லாம் அவர்களை அணுகி பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்கப்படும்; ஆகவே, நீங்கள் சாலை மறியலில் ஈடுபடுவதாக அறிவித்திருப்பது தவறு என்று கூறியதன் அடிப்படையிலே, அமைதியாக எல்லோரும் இருந்துவிட்டார்கள். அதற்கு அடுத்த கட்டமாக, நேற்றையதினம் மீண்டும் அவர்களைத் தூண்டிவிட்டு மறியல் செய்ய வேண்டுமென்று, ஓடசல்பட்டி கூட்டு ரோட்டிற்கு மணியம்பாடி கிராமத்திலிருந்து அவர்களை அழைத்துவந்து ஒரு கூட்டமானது மறியல் செய்தது. அங்கே அதிகாரிகள் சென்று அவர்களிடம் எடுத்துச் சொல்லுகின்ற சூழ்நிலையிலே சிலரால் தூண்டிவிடப்பட்டு, அந்த அதிகாரிகளைக் கற்களை எறிந்து தாக்கியும், பிடித்து தள்ளுமுள்ளு செய்ததினாலுமான காரணத்தினால், அந்தக் கூட்டத்தைக் கலைப்பதற்காகத்தான் அங்கே கண்ணீர்ப் புகையானது வானத்தை நோக்கி வீசப்பட்டதே தவிர, மக்கள்மீது எந்தவிதமான அடிதடியும் நடத்தப்படவில்லை. இது உண்மை. உண்மைக்குப் புறம்பாக பல்வேறு பத்திரிகைச் செய்திகளை எடுத்துக் கொண்டு இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லட்டும். அவர் பேசி முடிக்கட்டும். மணி, நீங்கள் நாளைக்குப் பேசும்போது சொல்லுங்கள். நாளைக்கு நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். நாளைக்கு பேசுகிற வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. அப்போது சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இயற்கை சீற்றம் வருகிற நேரத்திலே நிவாரணம் அளிக்கப்படுவது என்பது மூன்று முறையிலே அளிக்கப்பட வேண்டிய ஒன்று. ஒன்று immediate relief; அதற்கு அடுத்தது பாதிக்கப்பட்டவர்களுக்கு rehabilitation; மூன்றாவது, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருக்க ஏற்பாடு செய்வது. இந்த வெள்ளச் சேதம் ஏற்பட்ட பகுதிகளில், இந்த அரசு செய்யவில்லை என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஹேமச்சந்திரன் (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முற்றிலும் தவறான தகவலை அவைக்குத் தந்துகொண்டிருக்கின்றார். உடனடி நிவாரணத்திற்காக 591.10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில் 497.10 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுவிட்டது. அதேபோல அடிப்படை வசதிகளுக்காக 523 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதிலே இதுகாறும் 279.75 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை நிலை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக ஒன்றை விளக்கினார்கள். எல்லோருக்கும் 2000 ரூபாய் கொடுக்கப்படும் என்று உத்தரவு போடப்பட்டு, கொடுக்கப்பட்டது. நான் என்ன சொல்கிறேன் என்றால், relief எல்லோருக்கும் — அந்தப் பகுதியிலுள்ள எல்லோருக்கும் — மழை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 2000 ரூபாய் கொடுக்கப்படுவது தவறு என்று சொல்லவில்லை. ஆனால் யதார்த்தத்திலே வீடு இழந்தவர்களுக்கு அதேமாதிரி பொருள்களை இழந்தவர்களுக்கு திருப்பி ஒரு rehabilitation ஏற்பாட்டுக்கு, இந்த 2000 ரூபாய் போதுமா?

*பிற்பகல் 1–40*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அம்மா அவர்கள் சொல்லும்போது, நிரம்பத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, வெள்ளம் ஒரு பகுதியைச் சூழ்ந்தால் — guidelines G.O.-விலே clean–ஆக இருக்கிறது; வெள்ளம் ஒரு பகுதியை முழுமையாகச் சூழ்ந்தால் — ஒரு நாள் அந்தப் பகுதியை வெள்ளம் சூழ்ந்துவிட்டு, அந்த வெள்ளம் வடிந்தால், நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு, இந்த மூன்று category–யிலே வருபவர்களுக்கு நிச்சயமாக நிவாரணம் உண்டு.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய நேரத்திலேகூட, இப்படிப்பட்ட ஒரு definite plan–ஓடு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கதையை உதாரணமாகச் சொல்லி, இங்கே சபையில் பதியவைக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். அதில் துளி அளவும் உண்மையில்லை என்பதை





நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து, அனைவருக்கும் தெரியும். கடும் வறட்சி. மூன்றாண்டுக் காலம் தொடர் வறட்சி ஏற்பட்டபொழுது, வறட்சி ஏற்பட்ட அந்த வருடத்திலே பாதிக்கப்பட்ட தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்றார்கள். அங்கேயே அதிகாரிகளை அழைத்து ஆய்வு செய்து, உடனடியாக நிவாரணப் பணிகளுக்காக 162 கோடி ரூபாயை வழங்கி, பாதிக்கப்பட்ட அத்தனை மக்களுக்கும் வேலைவாய்ப்பினை, ஏழைத் தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்தார்கள். அதைப்போல, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட உடனே, மூன்று முறை, சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் கூறியதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, உடனடி தொகுப்பு நிவாரண உதவிகளைக் கொடுப்பதற்கு ஆணையிட்டார்கள். அடுத்த கட்டமாக, பாதிக்கப்பட்ட அத்தனை மக்களுக்கும் மறுவாழ்வு உறுதியளிப்பதற்காக, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கும், அவர்களுடைய தொழில் ஆதாரங்களைப் பெருக்குவதற்கு, படகுகள், வலைகள், இம்மாதிரியான உபகரணங்கள் கொடுப்பதற்கும், அவர்களுடைய வாழ்வாதாரங்களை உறுதி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு வாழ்வாதாரங்களை அளித்திட படகுகள், வலைகள் கொடுக்கப்பட்டு, வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது ஒரு கதையைச் சொன்னார்கள். ஏதோ பெரிய செல்வந்தர் இருந்தாராம். ஏழை அவரிடம்போய், "இரண்டு நாட்களாக நான் சாப்பிடவில்லை, எனக்கு உணவு கொடு" என்று சொன்னாராம். "நீ சாப்பிடாமல் இருந்தால்தான் உனக்கு சொர்க்கம் கிடைக்கும்" என்று அவர் பதில் சொன்னாராம். அதைப்போல இந்த அரசு இருக்கின்றது என்று உதாரணமாகக் காட்டிச் சொன்னார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வறட்சி என்றாலும், சுனாமி என்றாலும், வெள்ளம் ஏற்பட்டது என்றாலும், நேரடியாக அந்தப் பகுதிக்குச் சென்று, மக்களைச் சந்தித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரணத் தொகுப்பு உதவிகளை உடனடியாக வழங்குவதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற தலைவர்களைப்போல இருந்துகொண்டு, இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு ஆறுதல் சொன்னவர் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் அல்லர் என்பதை நான் இந்தக் கூட்டத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு சம்பவம் நடந்தபோதுகூட, அதற்கு பின்னால் அறிக்கையின் வாயிலாகச் சொன்னார்கள். பாதிக்கப்பட்ட அத்தனை மக்களுக்கும் நிவாரணத் தொகுப்புதவிகள் உறுதியாகக் கிடைக்கும். வழிமுறைகளின்படி நீங்கள் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கின்றது. பொறுமையாக இருந்து, எந்தப் பகுதியிலும், எந்த மக்களும் விடுபடப் போவதில்லை என்ற உறுதியையும் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் இவர்கள், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் கூறுகின்ற கதை எடுபடாது என்பதனை இந்தக் கூட்டத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், சாப்பிடாமல் இருந்தால்தான் சொர்க்கம் கிடைக்கும் என்று சொல்லி கதை சொன்னீர்கள். எங்களையெல்லாம் சொர்க்கத்திற்கு அனுப்பிவிடாதீர்கள். இரண்டு மணிக்குள்ளாவது பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து என்னவென்றால், முதலமைச்சர் அவர்கள் போய்ப் பார்க்கவில்லை என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்த நேரத்திலே நானும் அவர்களைச் சந்தித்து குறைகளைச் சொல்லியிருக்கிறேன். அதிலே சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அங்கேயே அறிவிக்கப்பட்டது. சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால். இந்த நிவாரணங்களைப் பொறுத்தளவிலே, வரவு கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது; expenditure கணக்கு எங்கே? இந்த ஆளுநர் உரையிலே இந்தச் செலவு செய்யப்பட்ட விவரங்களை ஒன்றும் சொல்லவில்லையே?

பிற்பகல் 1–45

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சொல்கிறேன் உங்களுக்கு expenditure கணக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியைப் பொறுத்தவரைக்கும் – மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 811.52 கோடி ரூபாய் மட்டும்தான், மைய அரசு தந்தது. ஆனால், மைய அரசு தருவதாகக் கூறியது 2347.19 கோடி ரூபாய்.



811.52 கோடி ரூபாய்தான் தந்ததேயொழிய, மீதிப் பணம் எதையும் இதுகாறும் மைய அரசு தரவேயில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், 1136 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே 880 கோடி ரூபாயை, ரிலீஸ் செய்து, பணிகள்–ஆக்கப் பணிகள்–நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைப்போலவே உலக வங்கியிடமிருந்து, ஒட்டுமொத்தமாக 1903.50 கோடி ரூபாய் அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பணத்தைத் திருப்பித் தருவதாகச் சொல்லி, கடனாக அதைப் பெற்றிருக்கிறது. அதிலே நடைமுறை என்னவென்றால், உலக வங்கி, பணத்தை உடனடியாகக் கையிலே தந்துவிடாது. மாநில அரசு தன் கையிலே இருக்கிற பணத்தைப் போட்டு பணிகளைச் செய்ய வேண்டும். பணி முடிந்த பிறகு பணி முடிந்துவிட்டதற்கான ஆதாரத்தை உலக வங்கியினுடைய அமைப்பிடம் கொடுக்கின்றபோது, அவர்கள் அதை ரிலீஸ் செய்கிறார்கள். அப்படி 263.26 கோடி ரூபாயை மாநில அரசு இதுகாறும் ஒதுக்கியிருக்கிறது. அதிலே 207.50 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுவிட்டது. அதைப் போலவே, Asian Development Bank என்ற வங்கியிடமிருந்து, மாநில அரசு அம்மா அவர்களுடைய அரசு கடனாக வட்டிக்கு வாங்கியிருக்கின்ற பணம் 647 கோடி ரூபாய் வாங்கியிருக்கிறது. இதிலே 568.86 கோடி ரூபாய் இதுகாறும் நாம் அதற்கு sanction செய்து இருக்கிறோம். அதைப்போலவே, International Fund for Agriculture Development என்ற அமைப்பின் மூலமாக 67.50 கோடி ரூபாய் மாநில அரசு பெற்றிருக்கிறது. இதுதான் நடைமுறை உண்மை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கருத்து இந்த நிவாரணச் செலவுகளைப் பொறுத்தளவிலே, All party committee அமைப்பதற்கு அரசு தயாராக இல்லை. இங்கு, நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு committee–கள் அமைக்கப்பட்டது என்று. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திலே.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய ஊர்க்காரர் சொல்கிறார், இருங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) முழுமையாகக் கேட்டுவிட்டுச் சொல்லலாமே? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) கருணாகரன் திசை திருப்பாதீர்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பேசினால் அர்த்தத்துடன் பேச வேண்டும். (குறுக்கீடு) தினந்தோறும் நாங்கள் பிரச்சினைகளைச் சந்தித்து கொண்டிருக்கிறோம். ஆய்வுக் கூட்டத்தையும் போடுகிறோம். அவருடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சுனாமியால் பாதிக்கப்படவில்லை. அதிலே அவர் உறுப்பினராகவும் இல்லவே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் வந்திருந்தார்கள். ஒழுங்காக எல்லாம் செய்யப்பட்டது. பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். நடைபெறவில்லையென்று பொய்யான குற்றச்சாட்டைச் சொன்னால், அதற்கு பதில் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடு) சரி உண்மைக்கு மாறான குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள் (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, beneficiaries–ஐ யார் முடிவு செய்தார்கள்? அந்த committee–களிலே முடிவு பண்ணவில்லை. நாடாளுமன்ற உறுப்பினரைக்கூட consult செய்யவில்லை. நாங்கள் அதைத் தெளிவாகச் சொன்னதற்குப் பிறகும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு சம்பவம் நடந்தாலும், பயனாளிகளைத் தேர்வு செய்வது நிர்வாகத்தில் இருப்பவர்கள்தான். அரசியல்கட்சிகள் அல்ல என்பதைத் தெளிவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, (குறுக்கீடு) நானும் நீங்களும் சேர்ந்து இருக்கிற மாதிரி படம் பேப்பரிலே வந்திருக்கிறது. இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், 'இன்று எங்களைப் பலர் பாராட்டியிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் உங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். உலக வங்கி கடன் தந்திருக்கிறது. அது ஒரு பெரிய சாதனை என்ற முறையிலே நண்பர் அன்வர் ராஜா அவர்கள் இங்கு சொன்னார்கள். என்ன அர்த்தம்? இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்கள்...

*பிற்பகல் 1–50*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளமானாலும், சுனாமியானாலும் மாண்புமிகு அம்மா



அவர்களுடைய அரசு எடுக்கின்ற அத்தனை நடவடிக்கைகளையும் அத்துணை அமைப்புகளும் பாராட்டி இருக்கின்றன. இலங்கை அரசு நம்முடைய அதிகாரிகளை, 'எங்களுடைய சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நீங்கள் எம்மாதிரியான சுனாமி நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றீர்கள் என்பதை விளக்கிக் கூறவேண்டும்' என்று கேட்டு, இங்கிருந்து அதிகாரிகள் அங்கு சென்றிருக்கிறார்கள். ஏன்? தற்போதும், வெள்ளம் ஏற்பட்ட போதும்கூட, மத்திய அரசு அனுப்பிய அந்தக் குழுகூட, உயர்மட்டக் குழு இங்கு வந்து பார்வையிட்டு அருமையான முறையில், நல்ல முறையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றது; துயர் துடைப்புப் பணிகளை மக்களுக்கு விரைவாக செய்து தந்திருக்கிறது என்று கண்காணிப்புக் குழுத் தலைவர் அவர்கள் பாராட்டிச் சென்றிருக்கிறார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுபடுத்துகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கண்டிப்பாக சொல்லித் தீர வேண்டும். W.H.O.-வினுடைய Secretary General அவர்கள், இங்கே ஆய்வுக்கு வந்தார்கள். சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்தார்கள். அன்றையதினம் கடலூரிலே பார்த்துக் கொண்டு – மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டார்கள். அருமையான தமிழ்நாடு என்று பாராட்டி – பாராட்டு மட்டுமல்ல; அவர்கள் பல இடங்களிலே பேட்டியும் அளித்து, புது டெல்லியிலே போய் அதற்கான சான்றிதழையும் வழங்கிச் சென்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடமிருந்து கடன் பெறுவது பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் குறை கூறுகிறார். அகில இந்தியாவில் அனைத்து மாநிலங்களும் உலக வங்கியிடமிருந்து கடன் பெறுகிறது. உங்களது கட்சி ஆளுகிற மேற்கு வங்க மாநிலமும் ஏராளமான கடனை உலக வங்கியிடமிருந்து பெற்றிருக்கிறது என்பதையும் நீங்கள் நினைவுகூர வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். மேற்கு வங்காள அரசு உலக வங்கியிடமிருந்து பெற்றிருக்கிற கடன், not at the dictates of the World Bank, but according to

the dictates of the State Government. *(குறுக்கீடு) என்ன?* I say. (Interruption) I say. You prove it (Interruption) You prove it. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நீங்கள்....

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** I know what is there *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள் *(குறுக்கீடு)* பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, உலகத்திலே நடக்கிற எல்லா விஷயங்களையும் அந்தந்த ஆட்கள் நேரடியாகத் தெரிந்துகொண்டுதான் பேசுகிறார்களா? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** என்னைப் பேச விடுங்கள், பேச விடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள்தான், West Bengal தான் dictation கொடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? World Bank-க்கு நாங்கள் dictation கொடுத்தோம் என்று சொல்கிறீர்கள். You are not the dictator. West Bengal Government is not the dictator for the World Bank.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** The Politburo of the Communist Party of India (Marxist) is guiding it. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** Where is the evidence? No. No. *(குறுக்கீடு)* வார்த்தைகள் இருந்தால், எது வேண்டுமானாலும் பேசலாமா? *(குறுக்கீடு)* இது பொது மேடை அல்ல. பொதுக் கூட்டம் அல்ல, சட்டமன்றம். கருத்துகளைச் சொல்லும்போது ஆதாரத்தோடு சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன் *(குறுக்கீடு)* ஹேமச்சந்திரன், உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, அதாவது ஆதாரம் காட்ட வேண்டுமென்றால் காட்டுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். *(குறுக்கீடு)* இருக்கட்டும். இன்று ஆளுநர் உரையிலே Public Distribution System-அதைப் பொறுத்த அளவிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்தக் கொள்முதல் என்பதை இந்த அரசு நிறுத்தி இருக்கிறது. மத்திய அரசினுடைய agency என்ற முறையிலே கொள்முதல் பண்ணுவதோடு அல்லாமல், இந்த மாநில



அரசுக்குத் தேவையான நெல்லைக் கொள்முதல் செய்து stock வைக்காமல் எப்படிப் பொது விநியோக முறையைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்? இன்று நம்முடைய நாட்டிலே ஏற்கெனவே இருந்த ration....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டுதான் பேசுகிறாரா? இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களிலும் நெல் கொள்முதல் என்பதை அனைத்து மாநிலங்களும் மத்திய அரசினுடைய முகவர்களாக இருந்துதான் நெல் கொள்முதல் செய்கின்றன. இன்றைய நிலையில், இந்தியாவில் எந்த மாநிலமும் தன்னுடைய சொந்தத் தேவைகளுக்காக நெல்லைக் கொள்முதல் செய்துகொள்வது இல்லை, மேற்கு வங்காள மாநிலம் உட்பட.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் என்பது...*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், ஹேமச்சந்திரனைப் பேச விடுங்கள். திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள், நீங்கள் பேசி முடியுங்கள். *(குறுக்கீடு)*, ஹேமச்சந்திரன் பேசி முடியுங்கள். *(குறுக்கீடு)*

பிற்பகல் *1–55*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இந்திய அரசு, மாநில அரசுகளோடு போட்டிருக்கிற ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவில் அனைத்து மாநிலங்களும், இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களும் மத்திய அரசினுடைய முகவர்களாகத்தான் செயல்பட வேண்டும் என்கிற சரத்தோடுதான் ஒப்பந்தமே ஆரம்பமாகிறது. மேற்கு வங்க மாநிலம் உள்பட, திரிபுரா மாநிலம் உள்பட, எங்கெல்லாம் உபரிப் பொருள்கள் கொள்முதல் செய்யப்படுகின்றனவோ, கொள்முதல் செய்யப்படுகிற மாநிலங்கள், மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் கொள்முதலை மேற்கொள்ள வேண்டும் என்கிற நிலை இருக்கிறது. எந்த மாநிலமும் தனியாக தங்களுடைய சுய தேவைக்காக இன்றைக்குக் கொள்முதல் செய்துகொள்வது இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன் அவர்கள் விளக்கம் சொல்லட்டும். (குறுக்கீடு) அவர் பேசட்டும். ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்முதல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், உட்காருங்கள், ஹேமச்சந்திரன் பேசட்டும். (குறுக்கீடு) விளக்கம், அவர் சொல்வார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஏன், நம்முடைய மாநிலம் கொள்முதல் செய்யக்கூடாது என்று எந்தச் சட்டத்தில் இருக்கிறது? தவறான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) சிவபுண்ணியம், உட்காருங்கள். ஹேமச்சந்திரன் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது எங்களுடைய கருத்து, இந்த மாநிலத்திலே பொது விநியோக முறையைப் பாதுகாக்க வேண்டுமென்றால் மாநில அரசுக்குக் கொள்முதல் செய்வதற்கு அதிகாரம் உண்டு, அது கொள்முதல் செய்யக்கூடாது என்று மத்திய அரசு சொல்லவில்லை. அதைச் செய்தால்தான் பொது விநியோக முறையைச் சரியான முறையிலே பாதுகாக்க முடியும். இல்லையென்றால், ஏற்கெனவே 2 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்திலே ரேஷன் ஏற்பாட்டிலே ஏற்பட்ட குளறுபடியைப் பற்றி இந்த நாடு நன்கு அறியும். அந்த நிலை மீண்டும் வரும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகம்தான் பொது விநியோக முறையிலே மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்று உணவு அமைச்சர்களுடைய மாநாட்டிலே, மேற்கு வங்காள மாநிலத்தினுடைய உணவு அமைச்சரே பாராட்டினார்கள் என்கின்ற தகவலைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கரும்பு விலையை நான்கு ஆண்டுக் காலத்திலே அறிவிக்கவில்லை, இப்போது அறிவித்தார்கள். 1,014 ரூபாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தனியார் நிறுவனம் கொடுக்கவில்லை. இன்று, கன்னியாகுமரி...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர். (குறுக்கீடு) ஹேமச்சந்திரன், தொழில் துறை அமைச்சர் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.1,014 கொடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். உடனடியாக தனியார் சர்க்கரை ஆலைகளை அழைத்து ஒரு கூட்டம் போட்டோம். கடந்த 9 ஆம் தேதியும் அழைத்துப் பேசியிருக்கிறோம். 18 தனியார் சர்க்கரை ஆலைகளில், கிட்டத்தட்ட 10 தனியார் சர்க்கரை ஆலைகள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் மீதியிருக்கிற சர்க்கரை ஆலைகளும் கொடுப்போம் என்று உறுதி தந்திருக்கிறார்கள். ஆகவே, கண்டிப்பாக, நிச்சயமாகத் தருவார்கள். 1,014 ரூபாய் டன் ஒன்றுக்குக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 9 ஆம் தேதி ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள், டன் ஒன்றுக்கு 1,014 ரூபாய் என்று அறிவித்ததில் எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது. வெகுநாளைய விவசாயிகளுடைய கோரிக்கை. சட்டமன்றத்திலே பல்வேறு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக அரசு, தேர்தல் அறிக்கையாகக்கூட சொன்னார்கள். பிறகு, தேர்தல் அறிக்கையிலே அவர்கள் சொன்னதை அப்படியே மறந்து விட்டுவிட்டார்கள். அப்போதுகூட, கோரிக்கையை எல்லாம் நிறையபேர் வைக்கும்போதுகூட, ஏப்ரல் 6, 2000 ஆம் தேதியில், கடைசி ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கடைசி ஆண்டிலே, திரு. கருணாநிதி அவர்கள் சொல்லும்போதுகூட சொன்னார்கள்; ‘ஆள விடுங்கள், ஐயா ஆளையும் விடுங்கள்’ என்று சொன்னார் திரு. கருணாநிதி அவர்கள். இதெல்லாம் சட்டமன்றத்திலே பதிவாகி இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக் கோரிக்கையை எல்லாம் ஏற்றுத்தான் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இது கொடுக்கப்பட்டிருக்கிறதேதவிர —4 ஆண்டுக் காலத்தில்— இது தேர்தலுக்காக அறிவிக்கப்பட்டது இல்லை. (குறுக்கீடு) இப்படிச் சொன்னது உங்களுக்கும் தெரியுமே— மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கு. ஹேமச்சந்திரன் அவர்கள் நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே சுனாமிப் பணியிலே இருக்கிறபோது—நம்முடைய அமைச்சர் பதில்

சொன்னார்கள், சுனாமி வரும்போது—கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நான், அதற்குப் பிறகு நமது மின் துறை அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், இப்படி அமைச்சர்கள், அரசுத் துறைச் செயலாளர்கள் அத்துணைபேரும் கன்னியாகுமரி மாவட்டத்திலே கிட்டத்தட்ட 25 நாட்களுக்கு மேலாக இருந்து, 2, 3 கிராமங்களுக்குச் சென்று நாங்கள் பணியாற்றினோம். கடற்கரைப் பகுதிகளான குளச்சல், கன்னியாகுமரி ஆகிய தொகுதிகள்தான் மிகவும் பாதிக்கப்பட்டவை. ஆக, மிகவும் அற்புதமான முறையிலே பணியாற்றினோம் என்பது மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களுக்கு மட்டும் நன்றாகவே தெரியும். அவர் பாராட்டி இருக்கிறார். எல்லாவற்றையும் குறை சொல்கிறார், இன்னும் ஒரேயொரு குறையைத்தான் சொல்லவில்லை. சுனாமி வருவதைத் தடுப்பதற்கு இந்த அரசு எதையும் மேற்கொள்ளவில்லை; பெரும் மழை வருவதைத் தடுக்கவில்லை என்ற ஒரு குறையைத் தவிர, மீதம் எல்லாம் சொல்வார் என்று நினைக்கிறேன் நம்முடைய ஹேமச்சந்திரன் அவர்கள். வேறு ஒன்றும் குறை இல்லை. எல்லாம் நிறைவாக இருக்கிறது.. நேரம் ஆகிவிட்டது. *(சிரிப்பு)* சபாநாயகர் அவர்கள்கூடச் சொல்லிவிட்டார்கள்.

*பிற்பகல் 2–00*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி சம்பந்தமாக நான் வைத்த குற்றச்சாட்டு, அந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு consult செய்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார். பேசி இருக்கிறார். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்குத் தெரியவில்லை. இப்படி நீங்கள் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். கரும்பு பற்றி நீங்கள் சொன்னீர்கள். அதற்கு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அடுத்த point- க்குப் போங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Mr. Nainar Nagenthran, அமைச்சர் அவர்கள் சுனாமியைப் பற்றிப் பேசியதற்கு நான் சொன்னேன். அதாவது கரும்பைப் பொறுத்த அளவிலே அவரும் ஒத்துக்கொண்டார். 18 தனியார் சர்க்கரை



ஆலைகளிலே கொடுக்கப்படவில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 10 ஆலைகள் கொடுக்கலாம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறது. 8 பேர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இதுதான் நானும் சொன்னது....

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 சர்க்கரை ஆலைகள் கொடுக்கவில்லை என்று நான் ஒப்புக்கொள்ளவில்லை. 10 ஆலைகள் கொடுத்திருக்கிறார்கள். மீதம் உள்ள சர்க்கரை ஆலைகள் கடந்த 9 ஆம் தேதி நடந்த கூட்டத்தில் 'கொடுக்கிறோம்' என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். கண்டிப்பாக, நிச்சயமாகக் கொடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அடுத்து, ஆளுநர் உரையிலே 50–வது para-விலே பெண் ஊழியர்களுக்கு அரசு அறிவிக்கின்ற திட்டங்களிலும், பாதுகாப்பிலும் பெரிய முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடு)* ஆதாரம் இல்லாமல் இப்படியெல்லாம் குற்றம் சொல்லக்கூடாது. *(குறுக்கீடு)* அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடு)* தாங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இரண்டு மணித் துளிகளில் வேறு point-களைப் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம், குற்றச்சாட்டை, ஓர் ஆதாரத்தைப் பேரவைத் தலைவரிடம் கொடுத்துவிட்டுச் சொல்ல வேண்டுமே தவிர, குற்றச்சாட்டு சொல்கிறபோது இப்படியெல்லாம் பொத்தாம் பொதுவிலே சொல்லக்கூடாது. *(குறுக்கீடு)* தாங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடு)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் இன்னொரு விவரத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்த point-க்குப் போங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்த point–க்குப் போங்கள். இல்லாவிட்டால் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அடுத்து, அரசு ஊழியர்களைப் பொறுத்த அளவிலே இங்கே அவர்களுக்கு D.A. கொடுக்கப்பட்டதைப்பற்றி எல்லாம் விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. 4% D.A. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் எந்த date-லிருந்து கொடுக்கப்பட வேண்டும்? அதாவது, அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய date என்பது, D.A. எந்த நாளில் sanction பண்ணப்படுகிறதோ, அந்த நாளிலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் கொடுக்கப்படவில்லை. *1–7–2005* க்குப் பதிலாக கடந்த *1–1–2006* லிருந்துதான் கொடுக்கப்படுகிறது. இரண்டு, ஏற்கெனவே அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட சலுகைகள் இன்னும் பறிக்கப்பட்டதாகவே இருக்கின்றன. Pension — ஏற்கெனவே 50% pension, இருந்தது, குறைக்கப்பட்டது. அது அப்படியே இருக்கிறது. அதேபோன்று அவர்களுக்கு revision இன்னும் வழங்கப்படவில்லை. அதேபோன்று அவர்களுக்கு Surrender Leave *15* நாள் என்று இருந்தது *7* நாட்களாகக் குறைக்கப்பட்டது. அவர்களிடமிருந்து கொஞ்சம் பிடுங்கிவிட்டு, அதைவிடக் கம்மியானது திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி, கிராம ஊராட்சிகளிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு *1–4–2005* முதல் *200* ரூபாய் ஊதிய உயர்வு கொடுக்கப்படுவதாக ஆணை போடப்பட்டது. ஆனால் என்ன நிலை? *600* ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்கக்கூடியவர்களிடமிருந்து எல்லாம் *200* ரூபாய் குறைக்கப்பட்டது. *700* ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவனுக்கு இப்போது *600* ரூபாய். *800* ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவனுக்கு இப்போது *600* ரூபாய். என்ன நியாயம்? அப்படி ஒரு பக்கத்திலே அந்த ஊழியர்களிடமிருந்து பணத்தைப் பிடுங்கிவிட்டு, ஏதோ சிலவற்றை இப்போது கொடுத்து, நான் அதுதான் ஏற்கெனவே சொன்னது, இதனுடைய பெயர்தான் ஏமாற்று வேலை! (சிரிப்பு)

*பிற்பகல் 2–05*

நான் இன்னொன்றையும் சொல்கின்றேன். அரசு இரப்பர் தோட்டத்திலே வேலை செய்கின்ற தொழிலாளிக்கு போனஸ்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அறிவிக்கப்பட்டது. *300* தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கப்படவில்லை. இன்றைக்கு அவர்களுடைய உழைப்பு காரணமாக.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் subject–ஐ நன்றாகத் தெரிந்துகொண்டே இங்கு வந்து உண்மைக்குப் புறம்பாகச் சொன்னால் எப்படி? (குறுக்கீடு) யார் அந்த *300* பேர்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Contract workers.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அது எப்படிக் கொடுக்க முடியும்? அந்த rules தெரியாதா உங்களுக்கு? அந்தச் சட்டத்தை முதலில் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். Contract workers–க்குக் கொடுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கு அது மிக நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு 8.33% போனஸ், 1.67% கருணைத் தொகை, 10% கூடுதல் கருணைத் தொகை, தொழிலாளர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஒரே ஒரு நிமிடம். எங்காவது contract workers–க்கு bonus கொடுத்ததாக உண்டா? சட்டத்தில் இடம் இருக்கிறதா? ஹேமச்சந்திரன் பதில் சொல்லுங்கள். இதற்கு பதில் சொல்லுங்கள். தேவையில்லாமல் ஏதாவது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார். சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் இந்த அரசைப் பற்றிப் பெருமையாகப் பாராட்டிப் பேசியிருக்கிறார். நீங்களே அங்கு அரசைப் பாராட்டியிருக்கிறீர்கள். பொது மேடையிலேயும் எங்களுடனேயே பேசி, பாராட்டியிருக்கின்றார். இப்போது வேறு வழியில்லாமல் ஒப்பந்தக்காரர்களுக்கு வேறு ஏதாவது கொடுக்க வேண்டுமென்பதற்காகப் பேசுகின்றார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** *அரசு இரப்பர் கழகத்திலே 300 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்களா, இல்லையா?* What is the service rendered...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், ஏற்கெனவே நீங்கள் இதைப் பற்றிப் பேசியிருக்கிறீர்கள். அமைச்சரும் இதுபற்றி விளக்கம் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க முடியாது. சட்டத்தில் இடம் இல்லை. ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு எப்படிக் கொடுக்க முடியும்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒப்பந்தத் தொழிலாளிக்குக் கொடுக்க முடியாது என்று எங்கு இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** கொடுக்கலாம் என்று சட்டத்திலே எங்கே இருக்கிறது? நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசக் கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரப்பர் கழகத்தைப் பற்றி மிகத் தெளிவாக உறுப்பினருக்குத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவான விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 2000–லே நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பாக்கியை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2–3/4 கோடி ரூபாய் நிலுவையில் இருந்த தொகையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பது உங்களுக்கு மிக நன்றாகவே தெரியும். அதை இந்த மாமன்றத்திலே நீங்கள் மறுக்கிறீர்களா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் கொடுக்கவில்லை என்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. பிரச்சினை என்னவென்றால்..

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அப்போது நீங்கள்தான் சட்டமன்ற உறுப்பினர். இதே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறீர்கள். அப்போது கிடைக்கவில்லை. (குறுக்கீடு) கிடைக்கவில்லை. (குறுக்கீடு) நிலுவையிலே வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இராஜேந்திர பிரசாத்...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நிலுவையிலே வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். இராஜேந்திர பிரசாத் சட்டமன்ற உறுப்பினராகும்போது இந்த அரசுதான் பொறுப்பேற்றிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேச்சை முடியுங்கள். பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகத்தைப் பொறுத்தவரை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அந்தத் தொழிலாளர்களுக்கு, அந்த இரப்பர் கழகத்திற்குப் புனரமைப்பு கொடுக்கப்பட்டு, அங்கிருக்கும் தொழிலாளர்களுக்கு நிலுவையில் இருந்த சம்பளம் கொடுக்கப்பட்டு, bonus கொடுக்கப்பட்டு, குடை கொடுக்கப்பட்டு, உடை கொடுக்கப்பட்டு, எல்லாம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான். கடந்த ஆட்சிக் காலத்தில் சம்பளம்கூட கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அடுத்த point-க்குப் போங்கள். போட்டு இரப்பராக இழுக்காதீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது சுகாதாரத் துறை அமைச்சர் சட்டத்தைப் பற்றி கூறுகின்றார்கள். நான் ஒன்றைச் சொல்கின்றேன். Forest Secretary அவர்களுக்கு என்ன அறிவுரை வழங்கப்பட்டது என்றால், இதுசம்பந்தமாக சட்ட வல்லுநர்களிடம் நீங்கள் ஆலோசனை நடத்திக் கொடுக்க வேண்டுமென்றால் கொடுங்கள். ஆனால் அந்த legal opinion–ஐயே வாங்கவில்லையே ? Why legal opinion is not obtained?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பேச வேண்டுமென்றால் எதை வேண்டுமானாலும் பேசலாம். (குறுக்கீடு) இதையெல்லாம் West Bengal-இலே போய்ப் பேச வேண்டும். அங்கே போய்க் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசி முடியுங்கள். மூன்று மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அடுத்து, Electricity Board–லே, அதேமாதிரி TWAD Board–லே வேலை செய்து கொண்டிருக்கின்ற ஒப்பந்தத் தொழிலாளிகளுக்கு இந்த bonus–ஐ வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்திருக்கிறேன். அந்த முறையிலே கொடுக்கப்படுகிற நேரத்திலே 3 கோடி ரூபாய் இலாபம்

ஏற்படுத்தியிருக்கிற அரசு, இரப்பர் கழகத்திலே இவர்களுக்கு உரிமை உண்டா, இல்லையா என்பதைப்பற்றிக் கேட்பதற்கு ஏன் இவ்வளவு பயம்?

*பிற்பகல் 2–10*

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று Multi-National Company–களுடைய... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சை நிறைவு செய்யுங்கள். இன்னும் இரண்டு மணித் துளிகளிலே.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இரண்டு நிமிஷத்திலே முடித்துக்கொள்கிறேன். Multi-National Company–களுடைய தொழில்கள் வருகிறது என்று பெருமையோடு இந்த ஆளுநர் உரையிலே பேசப்பட்டிருக்கிறது. Multi-National Company–கள் இங்கே என்ன செய்கிறார்கள்? இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்களைச் சுரண்டுகிறார்கள். Labour Commissioner கூப்பிட்டு சம்பளப் பேச்சுவார்த்தைக்கு வரச் சொன்னால்கூட மறுக்கிறார்கள். உதாரணமாக FCN என்ற ஒரு கம்பெனி சென்னை நகரத்திலே இருக்கிற ஒரு Multi-National Company. அந்தத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை. தொழிலாளிகள் சங்கம் வைத்து புகார் கொடுத்தால் Labour Commissioner கூப்பிட்டதற்குப் பிறகுகூட அந்த நிர்வாகம் Labour Commissioner முன்னாலே ஆஜராகி வாதாடுவதற்கு மறுக்கிறது. இன்று இந்திய நாட்டிலே இருக்கிற தொழில் சங்கங்களை அவர்கள் மதிப்பதற்கு மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட உழைப்பாளிகளைச் சுரண்டக்கூடியவர்கள் இங்கே அதிக அளவில் வருவதுதான் இந்த நாட்டிலே தொழில் வளர்ச்சி என்று சொல்கிறார்கள்.

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேலை நியமனத் தடைச் சட்டத்தை இன்னும் இந்த அரசு வாபஸ் பண்ணவில்லை. வேலை நியமனத் தடைச் சட்டத்தை அமல்படுத்திக்கொண்டு, நீங்கள் தமிழகத்திலே இருக்கிற பல்லாயிரக்கணக்கான வாலிபர்களுக்கு என்ன வாழ்வு கொடுக்க முடியும்? உதாரணமாக, இப்போது சென்னை நகரம் போன்ற நகரங்களுடைய ஜனத்தொகையைப் பார்த்தால் Urban population தான் இன்று தமிழகத்திலே அதிகமாக வந்திருக்கிறது. என்ன அதனுடைய phenomenon? அதாவது கிராமத்திலே வாழ்க்கை நடத்திக்கொள்ள முடியாமல் இந்தப் பட்டணத்திலே ஏதாவது வேலை கிடைக்குமா என்று



சொல்லி அந்த கிராமத்திலே இருந்து வந்து இங்கே தங்கியிருக்கக் கூடியவர்களுக்கு என்ன பாதுகாப்பு, என்ன வேலை? இன்றைக்கு R.L.E.G.P., அதாவது, Rural Landless Employment Guarantee Programme-கூட இன்று contractor-களையும் அதேபோன்று machinery-களையும் வைத்துத்தான் இங்கே அமல்படுத்தப்படுகிறதே தவிர, கிராமத்திலே இருக்கிற அந்த ஏழை மக்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியிலே முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முடித்துவிடுகிறேன். அந்த முறையிலே வேலை அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இன்று நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாதுகாப்பற்ற முறையிலே unorganized workers இரண்டு கோடி workers இங்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு? உழவர் திட்டம் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறதா? இல்லையே! அதேநேரத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அந்த Welfare Committees இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கிறது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடித்துவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அமைச்சர், அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த முறையிலே, *(குறுக்கீடு)* நான் agricultural labourers–ஐப்பற்றி மட்டும் சொல்லவில்லை. மற்ற workers–ஐப் பொறுத்த அளவிலே, விவசாயக் கூலி, விவசாயக் கூலிகளைப் பொறுத்த அளவிலே அவர்களுக்காக வேண்டி நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. அதேபோன்று மற்ற unorganized workers–க்கு நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. இன்றைக்குச் செயல்படவில்லையே! அவர்களுக்கு என்ன பாதுகாப்பு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த முறையிலே, அதேபோன்று நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ** *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், பேச்சை நிறைவு செய்யுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒட்டுமொத்தமாக அப்படிச் சொல்வது முறையற்றது. **

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கடைசியாக ஒன்று. அதேபோன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்திலேயும், அதேபோன்று தூத்துக்குடி மாவட்டத்திலேயும் 2003–2004, 2004–2005 கல்வியாண்டுகளிலே அரசாணை 525–ன்படி மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. இதன்காரணமாக இடைநிலை ஆசிரியர்களுக்கு இதுவரை நியமன ஒப்புதல் கிடைக்கப்படாத நிலையும், அதனால் பாதிப்பும் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் இதற்குப் பதில் சொல்வார்கள். உங்கள் பேச்சு அத்துடன் நிறைவுற்றது.

பிற்பகல் 2–15

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஆசிரியர்கள் என்பது உபரி ஆசிரியர்கள்தான் அங்கு இருக்கின்றார்கள். ஆகவேதான் அங்கு புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. தற்போது 29–12–1997 அரசு விதியின்படி 2005–2006 ஆம் கல்வியாண்டிற்காக 1–8–2005 நிலவரப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அரசு மற்றும் நிதி உதவி பெறும் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் – மாணவர் விகிதாச்சாரம் கணக்கிடப்பட்டது. அரசு ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் இம்மாவட்டத்தில் அரசாணையின்படி ஆசிரியர் – மாணவர் விகிதாச்சாரம் கணக்கிடப்பட்டதில், நடப்புக் கல்வியாண்டில் 52 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் உபரி என கண்டறியப்பட்டது. இவ்வுபரி ஆசிரியர்களில் 24–11–2005–ல் 32 இடைநிலை உபரி ஆசிரியர்களுக்கு இதே மாவட்டத்தில் பணி தேவைப்படும் பள்ளிகளுக்கு மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரால் மாறுதல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அளிக்கப்பட்டது. இவர்களுள் 10 பேர் இதுவரை புதிய பள்ளியில் சேர்ந்துள்ளனர். இன்னும் 22 ஆசிரியர்கள் புதிய பள்ளியில் சேராமல் ஏற்கெனவே பணிபுரிந்த பள்ளிகளிலே தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். 52 உபரி ஆசிரியர்களும் மாறுதல் வழங்கப்பட்ட 32 ஆசிரியர்கள் நீங்கலாக இன்னும் 20 உபரி ஆசிரியர்களுக்குப் பணியிட மாறுதல் வழங்கப்படவில்லை. இன்னும் 20 பேர் ஏற்கெனவே பணிபுரிந்த பள்ளிகளிலே தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்கள். இதுபோக, கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் நிதியுதவி பெறும் ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளிலும் கணக்கெடுக்கப்பட்டதில் 33 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் உபரி என்று கண்டறியப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 20–1–2006 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். (குறுக்கீடு) பேச்சு நிறைவுற்றது. நாளை வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை 20–1–2006, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 19

நாளை 20-1-2006 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-1-2006) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

20. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

21. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

22. 2004-2005 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

23. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

24. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

25. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு



2006 ஜனவரி 19]

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

5. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து மூன்றாவது அறிக்கை. (2003-2006)

6. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து நான்காவது அறிக்கை. (2003-2006)

7. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து ஐந்தாவது அறிக்கை. (2003- 2006)

8. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து ஆறாவது அறிக்கை. (2003-2006)

9. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து ஏழாவது அறிக்கை. (2003-2006)

10. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து எட்டாவது அறிக்கை. (2003-2006)

11. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2003-2006)

12. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பதாவது அறிக்கை. (2003-2006)

13. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003-2006)

14. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து இரண்டாவது அறிக்கை. (2003-2006)

15. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து மூன்றாவது அறிக்கை. (2003-2006)

16. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2003-2006)

[2006 ஜனவரி 19

*17.* மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து ஆறாவது அறிக்கை. *(2003–2006)*

*18.* மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது அறிக்கை. *(2003–2006)*

*19.* மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. *(2003–2006)*

*20.* மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. *(2003–2006)*

*21.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஒன்றாவது அறிக்கை. *(2003–2006)*

*****

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
221003
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published, under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.